அண்ணாவும் பாவேந்தரும்

கவிவேந்தர்
கா. வேழவேந்தன்



பஎ 7184

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

அண்ணாவும் பாவேந்தரும்

கவிவேந்தர் கா. வேழவேந்தன்
தமிழக மேனாள் அமைச்சர்
தலைவர், அறிவியல் தமிழ் மன்றம்
சென்னை.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-390-1

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 347

நூல் : அண்ணாவும் பாவேந்தரும்

ஆசிரியர் : கவிவேந்தர் கா. வேழவேந்தன்

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2040, புரட்டாசி
முதற்பதிப்பு - செப்டம்பர் 2009

பக்கம் : 163 + 10

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1200

விலை : உரூ. 80.00

ஒளியச்சு : முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,
தெற்கு வீதி, தஞ்சாவூர்.

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

வை. கண்ணபுரக்கண்ணன்
எம்.ஏ.,பி.எட்.,எம்.ஃபில்.,
இயக்குநர் (பொ)
பதிப்புத்துறை

அரண்மனை வளாகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 001.

பதிப்புரை

''வழிவழி வந்த வரலாற்றுப் பெருமை என்ன? எழில் மொழியான தாய்த்தமிழின் ஏற்றம் என்ன? குழிபறிக்கும் சாதிச் சனியனும் குருதி குடிக்கும் மதவெறியும் எப்பொழுது முதல் தலைகாட்டின? என்பவற்றையெல்லாம் மறந்து விழிமூடிக் குறட்டை விட்டுக் கொண்டிருக்கிற தமிழனை உறக்கத்திலிருந்து எழுப்பிவிட்ட பெருமை ஈரோட்டுப் பகலவன் தந்தை பெரியாருக்கே உரியது'' - இப்படிக் கம்பீர நடையுடன் இந்நூலைத் தொடங்குகிறார் கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்கள்.

''நாமுனையால் நாடெலாம் சுழன்று வந்து கருத்து விருந்து பரிமாறியும், சாமத்துக்கோழிபோல் இரவெலாம் விழித்திருந்து எழுதியும் இந்த மண்ணின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார் அறிஞர் அண்ணா. பா முனையால் பகைமையைச் சாடும் நெருப்பு வரிகளைத் தீட்டி, தமிழினத்தைச் சூழ்ந்த தீமைகளைச் சுட்டுப் பொசுக்கினார் பாவேந்தர் பாரதிதாசன்'' எனத் தொடக்கத்தில் இரத்தினச் சுருக்கமாய் முத்தாய்ப்பு விளக்கம் தரும் நூலாசிரியர் இணையிலா இருவர், அன்னை மொழிக்கு ஆற்றிய அளப்பரிய தொண்டு, அறிவியக்கம் தழைத்திட நிறை வேற்றிய பணிகள், இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்த எரிமலை கள், புதுயுகத்தின் பூபாள விடியல்கள், மறைந்தும் மறையாது இறவாப் புகழ் பெற்றோர் என்பன போன்ற ஏற்றமிகு தலைப்புகள் இருபத்தைந்தினால் நூலினுள் நம்மை ஈர்த்துச் சென்று அண்ணாவையும் பாவேந்தரையும் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்.

அண்ணாவின் நா நலமும் பாவேந்தரின் பா நலமும் நூலினுள் ஏற்ற பெற்றி இடம் பெற்று அப்பெருமக்களின் சீர்மணம் பரப்புகின்றன. அவ்விருவருடன் தமக்கிருந்த தொடர்புகளையும், அவர்களைப் பற்றிய தமது கவிதை களையும் ஆங்காங்கே இழையோட விட்டிருப்பதன் வாயிலாகப் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லாத பல அரிய - சுவையான செய்திகளையும் நூலாசிரியர் தந்திருப்பது நூலிற்கு மேலும் அழகு சேர்க்கிறது. அறிஞர் அண்ணாவை யும் பாவேந்தர் பாரதிதாசனையும் மேலும் நன்கறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும். அறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா மிக்ச் சிறப்பாகக் கொண்டா டப்பட்டு வரும் வேளையில் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு வரிசையில் ஒன்றாக இந்நூல் வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

இந்நூல் அச்சிட்டு வெளியிடப்பட ஆக்கமும் ஊக்கமும் நல்கிய மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. **இராசேந்திரன்** அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அழகு தமிழ் நடையில் இந்நூலினை ஆக்கித்தந்த நூலாசிரியரும் தமிழக மேனாள் அமைச்சரும் தமிழ்நாடு அரசின் அறிவியல் தமிழ் மன்றத் தலைவருமான கவிவேந்தர் **கா. வேழவேந்தன்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியுடையேன். நூல் அச்சுப்பணி தொடர்பில் துணைநின்ற தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ச. இராதாகிருட்டிணன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் துணை இயக்குநர் திரு. க. வீரபாகு சுப்பிரமணியன், கணினி யச்சு செய்தளித்த தஞ்சாவூர், முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் நிறுவனத்தார், அட்டைப்பட வடிவாக்கம் தந்த திரு. சௌத்திரி, பதிப்புத்துறை - அச்சகப் பணியாளர்கள் ஆகியோருக்கும் என் நன்றி உரியதாகும்.

கவிவேந்தர் கா. வேழவேந்தன்
தமிழக மேனாள் அமைச்சர்
தலைவர், அறிவியல் தமிழ் மன்றம்
சென்னை.

முன்னுரை

'எங்கும் எதிலுமே
தமிழமு தூட்டு;
இங்கிலீசை இந்தியை
இடமிலா தோட்டு!'

என்று அழுத்தமான குரலெடுத்துக் கம்பீரமுடன் முழங்கினார் புரட்சிப் பாவேந்தர் அவர்கள்.

''தாய்மொழி தமிழ் நம் கண்போன்றது; ஆங்கிலம் கண்ணுக்கு அணியும் கண்ணாடி போன்றது; அன்னை மொழி தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தின் பின்னால் மட்டும் ஓடுவது என்பது, கண் தேவையில்லை-கண்ணாடியே போதும் என்று கூறுவது ஆகாதா?'' என்று அறிவினா தொடுத்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

'மனுவின் மொழி அறமான தொருநாள் - அதை
மாற்றும் நாளே தமிழர் திருநாள்!
சினம், அவா, சாதி, மதம் புலை நாறும் யாகம்
தீர்ப்பதே இந்நாளில் நல்லறம் ஆகும்!'

என்று மூடப் பொய் மாயைகளைச் சாடிய பாவேந்தர், தமிழகம் அறிவார்ந்த சமுதாயத்தைக் காண வேண்டும் என்று காலமெலாம் பாடுபட்டார். குலத்தாலும் சாதியாலும்

தமிழரைப் பிரித்துச் சீர்குலைத்தவை மனுவின் வருணாசிரம தருமங்களே என்று இறுதிவரை அவற்றை ஒழிக்கக் குரல் கொடுத்தவர் பாவேந்தரே.

''ரேடியோவும், டெலிபோனும், ஒலி பெருக்கியும், மின்சாரமும் ஞானப்பால் உண்டதால் பெற்ற வரங்கள் அல்ல; அசரீரி அடியெடுத்துக் கொடுத்ததால் கிடைத்த அற்புதங்களுமல்ல; தன்னலமற்ற பேரறிவாளர்களின் உழைப்பாலும் உயரிய சிந்தனைத் திறத்தாலும் விளைந்த உன்னதப் பொருள்கள் அவை!

அவதார புருஷனாகிய இராமனால் கண்டுபிடிக்க முடியாத இரயிலை ஒரு சாமானிய மனிதனாகிய ஜேம்ஸ் வாட் அவர்களால்தான் கண்டுபிடிக்க முடிந்தது. என்ன பொருள் இதற்கு? அவதார புருஷனாக இருப்பதைவிட, சாதாரண மனிதனாக இருப்பதேமேல் எனத் தெரியவில்லையா?'' என்று அறிவார்ந்த வினாக்களைத் தொடுத்து, நாடெங்கும் சூறாவளிப் பயணம் செய்து பகுத்தறிவியக்கத்தை வளர்த்தார் பேரறிஞர் அண்ணா.

இவர்கள் இருவருமே எழுத்தாலும் பேச்சாலும் உறங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி நிமிர்ந்து நிற்கச் செய்தவர்கள்.

''கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு!
காணும் பிற மொழிகளோ வெறும் வேம்பு!
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு!
நம்உரி மைதனைக் கடித்ததப் பாம்பு!''

என்று கொதிப்புணர்வுடன் எரிதழல் வரிகளால் ஆதிக்கம் செலுத்த வரும் பிற மொழிப் படையெடுப்பைப் பாவேந்தர் கடுமையாகச் சாடியது ஏன்? அப்பொழுதாவது, சொந்த மொழியைப் புறக்கணித்து, வந்த மொழிக்கெல்லாம் வாயில் திறந்துவிடும் தமிழன், தன் மூடிய விழியைத் திறக்க மாட்டானா என்ற பெரும் ஆதங்கத்துடன் அவர் இவை போன்ற எழுச்சி வரிகளை எழுதித் தாய்த்தமிழ் இயக்கத் திற்கு வலுவூட்டி வளர்த்தார்.

'எங்கள் அயர்லாந்தில் எம் தாய்மொழி ஐரிஷ்தான் முதன்மை இடம்பெற வேண்டும்; ஆங்கிலம் எங்களுக்குத் தேவையில்லை' என்றார் தலைவர் டிவேலரா. ஏன்? டிவேலரா வுக்கு ஆங்கிலத்தின் அரிய வளம் தெரியாதா? அதன் மிகப் பெரிய இலக்கிய வளர்ச்சி புரியாதா? ஆங்கிலம் படித்தால் பல நன்மை களும் கிடைக்கும் என்பதும் தெரியும். ஆனாலும், 'எங்கள் மண்ணின் மொழியான அன்னை மொழி ஐரிஷ்தான் எங்கள் உயிர் மூச்சு; எங்கள் இனப் பண்பாட்டுப் பெருமை உணர்த்தும் தூய மொழி ஐரிஷ்தான் எம் மண்ணில் முதலிடம் பெற வேண்டும்; ஆங்கிலப் படையெடுப்பைத் தடுத்தே தீருவோம்!' என்று போர் முரசம் ஆர்த்தார் டிவேலரா. அதுபோலத்தான் தமிழனுக்குத் தமிழ் உயிராக வும் மூச்சாகவும் மிளிர்கிறது.

இப்படி வாதிட்டார் பேரறிஞர் அண்ணா.

இங்ஙனம் தமிழ், தமிழினம், தமிழர் முன்னேற்றம் பற்றிய பெருங்கவலையுடன் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட வர்கள்தாம் அறிஞர் அண்ணாவும் பாவேந்தரும்.

எனக்கிருக்கும் ஒரு சிறிய பெருமை இந்த இரு பெரும் தோன்றல்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவன் என்பதுதான். நான் மாணவனாக இருந்தபோதே என் எழுத்துகளைத் தம் 'திராவிடநாடு' ஏட்டில் வெளியிட்டுத் தமிழகத்திற்கு என்னை வெளிச்சம் போட்டுக் காட்டிய மழைநெஞ்சம் அண்ணாவுக்கே உரியது.

இன்றைக்கு 46 ஆண்டுக்கு முன்னரே என்னுடைய முதல் கவிதைத் தொகுப்பான 'வேழவேந்தன் கவிதைகள்' எனும் நூலை 04.04.1963 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் வெளியிட்டு ஒரு மணி நேரம் அக்கவிதை நூலைப் பாராட்டிப் பேசி ஊக்குவித்த பெருந்தகை அண்ணா அவர்கள்.

அதேபோல் தன் 'குயில்' ஏட்டில் இந்த எளியவனின் கவிதைகளை வெளியிட்டு ஊக்குவித்ததுடன், பாவேந்தர் அவர்கள் தாம் 26.01.1962இல் தொடங்கிய 'அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம்' எனும் பேரமைப்பில் அன்று சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த என்னையும் ஒரு செயற்குழு உறுப்பினனாக இணைத்துக் கொண்டது வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பேறாகும்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை ஏற்ற ஐயா முனைவர் **ம. இராசேந்திரன்** அவர்கள் கனிவோடும் நினைவோடும் பாவேந்தர் அறக்கட்டளையின் சார்பில் ''அண்ணாவும் பாவேந்தரும்'' என்ற தலைப்பில் அண்ணா வின் நூற்றாண்டு நிகழும்போது என்னை உரையாற்றப் பணித்தார்கள். அப்பெருந்தகை தமிழ்வளர்ச்சி இயக்குநராகப் பணியாற்றிய போது, ஆழ்ந்த ஈடுபாட்டுடன் தாய்த்தமிழின் மேம்பாட்

டுக்காகப் பம்பரமெனச் சுழன்று செயலாற்றி எல்லோரும் போற்றும் வண்ணம் சாதனைகளை நிகழ்த்தியதை நன்கு அறிவேன் நான்.

அந்த ஆற்றலாளர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பை ஏற்றவுடன், புதிய புதிய திட்டங் களைச் செயற்படுத்தி, ஒல்லும் வகையிலெல்லாம் நாள்தோறும் பல்வேறு பயன்மிகு சாதனைகளைப் புரிந்து ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் எப்படியெல்லாம் இயங்க வேண்டும் என்பதற்குத் தனி இலக்கணமே வகுத்து வருகின்றார். அவருடைய அகழ்ந்தாய்ந்த உரைகளும், ஆளுமைச் செயல்திட்டங்களும் என்னைப் பிரமிக்க வைத்திருக்கின்றன. அன்னார் இட்ட கட்டளைக்கு எந்தச் சொற்களால் நன்றி கூறுவேன்? இந்த ஆய்வுரைத் தொகுப்பை அழகுமிளிர அச்சிட உதவிய அவருடைய இமய நெஞ்சைப் போற்றி நெகிழ்வுடன் நன்றி கூறுகின்றேன்.

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறைத் தலைவர் முனைவர் ச. இராதாகிருட்டிணன் அவர்கள், என் போன்றவர்களை எப்படி இயக்க முடியுமோ அந்த வகையில் இயக்கி நயத்தோடும் நளினத்தோடும் வேலை வாங்கி, இந்த உரைநூல் மலர முழுமுதற் காரணமாக இருக்கிறார். இந்நூலை நான் எழுதி முடிக்கும்வரை தவறாமல் அன்றாடம் நினைவுபடுத்தியும், தூண்டியும் என்னை உற்சாகப்படுத்திய அப்பெருந்தகையின் அன்புள்ளத்தைப் போற்றி என் நன்றி யறிதலைத் தெரிவிக்கிறேன். தன் அன்றாட நெருக்கடிப் பணிகட்கிடையே இப்படி ஒரு நூல் உலா வரட்டும் என்ற உயரிய எண்ணத்துடன் என்னைத் தூண்டிக்கொண்டே இருந்த அச்செம்மலின் மலர் உள்ளம் வாழ்க.

இந்நூல் உருவாக உதவிய இனிய நெஞ்சங்களுக்கு என் பணிவான நன்றியை உரித்தாக்குகிறேன்.

பல்லாயிரம் ஆண்டுக் காலத்திற்குத் தமிழ்ச் சமுதாயத் திற்குப் பயன்படப்போகும் அற்புதப் பணிகளை இருபெரும் தோன்றல்களான அறிஞர் அண்ணாவும், பாவேந்தரும் தாம் வாழ்ந்த 60, 74 ஆண்டுகளுக்குள் எப்படியெல்லாம் சாதித் திருக்கிறார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்ட முயன்றிருக் கிறேன்.

அருள்கூர்ந்து உள்ளே சென்று முழுதும் படியுங்கள்; அன்புகூர்ந்து உங்கள் உள்ளம் தரும் தீர்ப்புகளை எனக்குத் தெரிவித்தால் மிகவும் நன்றி கூறுவேன். இதுதானே ஒரு படைப்பாளனின் அவாவாக இருக்க முடியும்!

வாழிய பேரறிஞர் அண்ணாவின் புகழ்.
ஓங்குக பாவேந்தரின் மாட்சி.

சென்னை- 4 அன்புள்ள,
18.06.2009. கா. வேழவேந்தன்

பொருளடக்கம்

முன்னுரை
1. இணையிலா இருவர் 1
2. அன்னை மொழிக்கு ஆற்றிய அளப்பரிய தொண்டு 7
3. அறிவியக்கம் தழைத்திட நிறைவேற்றிய பணிகள் 13
4. இளைஞர்களைக் கிளர்ந்தெழ வைத்த ஏந்தல்கள் 19
5. இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்த எரிமலைகள் 25
6. பெண்ணியம் போற்றிய பெருமை 31
7. கொண்ட கொள்கையில் எஃகுறுதி 37
8. உவமையழகால் உளம் கவர்ந்தோர் 43
9. திருக்குறள் போற்றிய திறன் 49
10. ஒருவரை மற்றவர் போற்றிய ஒப்பரிய உயர் பண்பு 55
11. தமிழ்ச் சமுதாயம் மேம்படப் பாடுபட்ட தனிப்பெரும் சிமிழ்கள் 61
12. எழுத்தும் பேச்சும் ஏற்படுத்திய தாக்கங்கள் 67
13. புது யுகத்தின் பூபாள விடியல்கள் 73
14. பொதுவுடைமை புகட்டிய புதுவகைச் சிற்பிகள் 79
15. கலையுலகில் கொடிநாட்டிய வித்தகர்கள் 85
16. ஏடுகளால் பீடு சேர்த்தோர் 91
17. பாவேந்தரும் நானும் 99
18. அண்ணாவும் நானும் 107
19. ஓயா உழைப்பால் தேயாப் புகழ் பெற்றோர் 115
20. எளிமையால் ஈடிலாப் பண்பால் ஏற்றம் பெற்றோர் 123

21. இருவரால் கிடைத்த அறுவடைகள்! 131

22. உரை வீச்சாலும் வரி வீச்சாலும்
உளம் நிறைந்தோர்! 137

23. நான் வழிபட்ட நடமாடிய தெய்வங்கள்! 143

24. நாடும் நல்லோரும் போற்றிய
ஈடிலாத் தோன்றல்கள்! 149

25. மறைந்தும் மறையாது இறவாப் புகழ் பெற்றோர்! 157

1. இணையிலா இருவர்

'வழி வழி வந்த வரலாற்றுப் பெருமை என்ன? எழில் மொழியான தாய்த்தமிழின் ஏற்றம் என்ன? குழி பறிக்கும் சாதிச் சனியனும் குருதி குடிக்கும் மத வெறியும் எப்பொழுதுமுதல் தலைகாட்டின?' என்பவற்றையெல்லாம் மறந்து விழி மூடிக் குறட்டைவிட்டுக் கொண்டிருந்த தமிழனை உறக்கத்திலிருந்து எழுப்பிவிட்ட பெருமை ஈரோட்டுப் பகலவன் தந்தை பெரியாருக்கே உரியது.

அப்படி விழித்தெழுந்த தமிழன் மீண்டும் தூங்கி விடாமல் அவனைக் கம்பீரநடை போட வைத்த மாட்சி பேரறிஞர் அண்ணாவுக்கும் பாவேந்தர் பாரதிதாசனுக்கும் உரியது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழரின் எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் இந்த இருபெரும் செம்மல்களின் பங்களிப்பு ஈடில்லாதது என்பேன்.

நாவாலும் பேனாவாலும் மூவாத் தமிழெடுத்து, தமிழரின் நாடி நரம்பெல்லாம் முறுக்கேற்றி, வீழ்ச்சியுற்று விசையொடிந்து போய்க் கிடந்த தமிழனை மீண்டும் வீறு

கொண்டு எழவைத்தவர் காஞ்சி தந்த வால்ட்டேர் அறிஞர் அண்ணா அவர்கள்.

கவிதையாலும் காவியத்தாலும் சுவையும் சூடும் இழைந் தோடிய புதுமை விதைகளைத் தமிழர் நெஞ்செலாம் விதைத்து விழிப்புணர்ச்சியை அறுவடை செய்தவர் புதுவை தந்த புரட்சிக் கவி பாவேந்தர் அவர்கள்.

'நெற்றியில் அறிவைத் தேக்கி,
நெஞ்சத்தில் ஈரம் தேக்கி,
வற்றாத நாவில் நாளும்
வளமுறும் கருத்தைத் தேக்கிச்
சுற்றாமல் சுற்றும் கண்ணில்
துடிப்பெலாம் தேக்கி ஈங்கே
கற்றவர் வியக்கும் வண்ணம்
காண்பவர் தலைவர் அண்ணா!'

என்று அண்ணாவின் பரிமாணத்தை 45 ஆண்டுகளுக்கு முன்னால் எண்ணி எண்ணி வியந்து பாடியவன் நான்.

அதே போல் அந்த மாணவப் பருவத்திலேயே பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றி இதோ இப்படிக் கவிதை எழுதினேன்:

'எதிர்நீச்சல் போடும் திட்பம்,
எஃகுபோல் உறுதிக் கொள்கை,
சதிதாளம் போடாப் போக்கு,
தமிழுக்கே குனியும் சென்னி,
விதியினை மிதிக்கும் வீரம்,
வினையைச் சாடும் தீரம்

எதிரிலாப் பாவேந் தர்போல்
இவைசேர்ந்த கவிஞர் உண்டா?'

நாமுனையால் நாடெலாம் சுழன்று வந்து கருத்து விருந்து பரிமாறியும், சாமத்துக் கோழிபோல் இரவெலாம் விழித்திருந்து எழுதியும் இந்த மண்ணின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார் அறிஞர் அண்ணா.

பாமுனையால் பகைமையைச் சாடும் நெருப்பு வரிகளைத் தீட்டி, தமிழினத்தைச் சூழ்ந்த தீமைகளைச் சுட்டுப் பொசுக்கினார் பாவேந்தர் பாரதிதாசன்.

திராவிட இயக்கத்தின் இந்தச் சாதனைச் சரிதம் பற்றிச் சிந்திக்கும் வகையில் நேர்த்தியுடன் கூறினார் அறிஞர் அண்ணா.

1967இல் தமிழக மக்கள் நல்ல தீர்ப்பெழுதி, அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கோட்டைக்கு அனுப்பிய போது, சூழ்ந்து நின்ற இதழாளர்கள் அவரிடம், ''எப்படி ஐயா இப்படி ஆனானப்பட்ட பாரம்பரியம் மிக்க காங்கிரசை உங்களால் தோற்கடிக்க முடிந்தது?'' என்று ஐய வினா தொடுத்தார்கள்.

தாமதமின்றி அண்ணா பதில் கூறினார்: ''எப்படி என்றா கேட்கிறீர்கள்? இது 'வாய்மை'க்குக் கிடைத்த வரலாற்று வெற்றி''

''புரியவில்லையே; விளக்கமாகச் சொல்லுங்கள்!'' என்றனர் வினா எழுப்பியோர்.

''தெரிந்து கொள்ளுங்கள். நாங்கள் தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் சென்று வாய் வலிக்க எங்கள் கொள்கைகளைப் பேசிப் பரப்பினோம். கை வலிக்க எங்கள் பேனா மையால் பல்வேறு இதழ்கள் வாயிலாக எங்கள் இலட்சியங்களை எழுதிக் காட்டினோம். இவற்றின் மூலம் தமிழக மக்களிடம் தனி மறுமலர்ச்சியை உருவாக்கினோம்; ஆகவேதான் இந்த வெற்றி எங்கள் 'வாய்'க்கும் 'மை'க்கும் கிடைத்த வெற்றி என்பதை 'வாய்மை'க்குக் கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டேன்!'' என்றார் முதலமைச்சர் அண்ணா.

ஆக நம் தமிழ்ச் சமுதாயத்தைத் தம் நாவாலும் பேனா வாலும் எழுப்பி விட்டுப் புதுப் புரட்சியை அறுவடை செய்தவர்கள்தாம் அறிஞர் அண்ணாவும் பாவேந்தரும்.

இருவருக்கும் இடையே உள்ள அடுத்த ஒற்றுமை, இரண்டு பெருமக்களும் தமக்கென்று தனிப் பரம்பரைப் பட்டாளத்தை உருவாக்கிக் கொண்டவர்கள் என்பேன்.

மீசைக் கவிஞர் பாரதியை ஆசையுடன் பின்பற்றி, கனக சுப்புரத்தினம் எனும் தன் இயற்பெயரை 'பாரதிதாசன்' என்று மாற்றிக் கொண்டவர் பாவேந்தர். பாரதிக்கு இவர் ஒருவரே தாசர். ஆனால், பாவேந்தர் பாரதிதாசர்க்கோ நாடு முழுவதும் பல்வேறு தாசர்கள் உருவாகி, 'பாரதிதாசன் பரம்பரை' என்றே ஒரு பாட்டுப் படை வரிசை அணி வகுத்ததுதான் பாவேந்தரின் பெருவெற்றி யாகும்.

அதேபோல் எளிய ஓட்டு வீட்டிலே பிறந்த அறிஞர் அண்ணா அவர்களோ, நாடு முழுதும் இலட்சோப இலட்சம்

தம்பிமார்களைப் பெற்ற தி.மு.கழகக் குடும்பத்தை உருவாக்கி, அரசியலில் பாச உணர்வுடன் கட்டுக்கோப் போடு ஒரு தனி இயக்கப் பாசறை கண்டார். கோமான்களும் சீமான்களும் மட்டுமே கோட்டை புக முடியும் என்ற கோடீசுவரர்களின் ஆதிக்கத்தைத் தகர்த்து, சாமானியக் குடிசையில் வாழும் குப்பன்களும் சுப்பன்களும்கூட, கோட்டை சென்று கோலோச்ச முடியும் என்று வழி அமைத்துத் தந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

இன்னுமோர் ஒற்றுமையும் இருவர்க்கும் உண்டு. பிறப்பால் இருவரும் எளிய குடும்பத்தில் தோன்றியது போல், தங்கள் வாழ்க்கையில் தூய ஆசிரியர் தொழிலை இருவருமே விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்.

பாவேந்தர் காரைக்காலைச் சேர்ந்த நிரவியில் ஆசிரியர் பணியில் அமர்ந்து அறிவுக் கண் திறந்தார்.

அண்ணா அவர்களோ முதலில் காஞ்சியிலும், பின்னர் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருப் பள்ளியிலும் ஆசிரியப் பணிக்குத் தன்னை ஒப்படைத்துக் கல்வித் தொண்டு ஆற்றினார்.

அதேபோல் இந்த மண்ணில் அறிவுப் புரட்சி தழைத்திட இருவருமே சிறப்பான இதழ்களை நடத்திப் பெருவெற்றி கண்டார்கள்.

பாவேந்தர் பாரதிதாசன் பாட்டுப் பறவைகள் கூடும் வேடந்தாங்கலாக, கவிதை இதழ் 'குயிலை' நடத்தினார். அறிஞர் அண்ணாவோ தன் இலட்சியக் கோட்பாடுகளைத் தமிழர் நெஞ்செலாம் கொண்டு சேர்க்க, 'திராவிட நாடு',

'காஞ்சி' போன்ற ஏடுகளை மிகச் சிறப்போடு கொண்டு வந்தார்.

இருவரின் இதழ்த் தொண்டால் திராவிட இயக்கத்திற்கு வலிவும் பொலிவும் சேர்ந்தன; ஒரு பெரும் மறவர் படையே அவர்கள் பின்னால் திரண்டு நின்றது.

2. அன்னை மொழிக்கு ஆற்றிய அளப்பரிய தொண்டு

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவ தில்லை!
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?'

என்று அமிழ்த வரிகளால் கம்பீரமுடன் வினா தொடுத்தவர் பாவேந்தர். அதேபோல் தமிழன்னையின் தனிப்பெரும் மாட்சியை இதோ இப்படிக் கூறினார் பேரறிஞர் அண்ணா:

'தமிழ்கூட ஒரு தவறு செய்துவிட்டது; அது செய்த மாபெரும் தவறு இந்த மண்ணில் தமிழனுக்குத் தாய்மொழி யாக அமைந்ததுதான். எண்ணிலா இலக்கியங்களும், ஈடிலா இலக்கண நூல்களும் கொண்ட - கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழியான தமிழ் மட்டும் இங்கே பிறக்காமல் ஏதோ ஓர் ஐரோப்பிய நாட்டிலோ அல்லது வேறு ஒரு தாய்மொழிப் பற்றாளர் நாட்டிலோ

பிறந்திருந்தால், என்றைக்கோ அது உலக மொழியாகச் செழித்தோங்கித் தழைத்திருக்கும்.'

இந்தத் தாய்மொழி உணர்வு அண்ணா அவர்களின் குருதியோடு இழைந்தோடியதால்தான், அந்த அன்னை மொழியின் மேம்பாட்டிற்காகத் தன் ஆயுள் முழுதும் பாடுபட்டார் அண்ணா.

பாவேந்தரோ,

'தாயெழில் தமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயும் நாள் எந்த நாளோ,
ஆரிதைப் பகர்வார் இங்கே?'

என்று தனை ஈன்ற எழில் தமிழ் உலகோர் நெஞ்செலாம் சென்று சேராதா எனப் பெருங்கனவு கண்டார்.

'தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

....

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வைரத்தின் வாள்!'

என்று கம்பீர வரிகளால் தன் அன்னை மொழியின் மேல் வைத்த அளப்பரிய பக்தியை உரத்த குரலில் வெளிப் படுத்தினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தனை ஈன்ற தாய்த் தமிழுக்கு ஆற்றிய அளப்பரிய தொண்டு வரலாற்றில் என்றென்றும் ஏறி நிற்கும் ஏற்றமுடையது.

அவருடைய பொது வாழ்க்கையின் தொடக்கத்தில் அவர் நீதிக்கட்சியில் இணைந்தபோது, 'அரசியல் பேச ஆங்கிலந்தான் தகுதி நிறைந்த உயர்ந்த மொழி' என்ற மனப் பான்மை மண்டி யிருந்தது. அந்தப் பொய் மாயையைத் தகர்த்து, எதுகையும் மோனையும், குதித்தோடிவர அழகு தமிழை ஏடுகளிலும் மேடைகளிலும் தவழவிட்டு, தமிழர்களின் உள்ளங்களையெல்லாம் ஈர்த்தவர் பேரறிஞர் அண்ணா.

சூறாவளியாகச் சுழன்று வந்து, சொக்க வைக்கும் சுந்தரத் தமிழில் பேசி, இலட்சோப இலட்சம் இளைஞர் களைத் தன் இலட்சிய இயக்கக் குடும்பத்தில் இணைத்தவர் அறிஞர் அண்ணா.

'ஜஸ்டிஸ்' போன்ற பெயர்களில் ஆங்கில ஏடுகள் நடைபோட்டுக் கொண்டிருந்த காலத்தில், 1942 மார்ச்சுத் திங்கள் ஏழாம் நாள் அன்றே தம் எழுச்சி ஏடான 'திராவிட நாட்டை'த்தொடங்கி அதன் முகப்பிலேயே பாவேந்தரின் உணர்ச்சிமயமான தொடர்களான,

'தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!'

என்ற பாடல் வரிகளை அச்சிட்டுத் தம் தமிழுள்ளத்தைத் திறந்து காட்டினார் அவர்.

பாவேந்தரோ,

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!'

என்று ஓங்கிக் குரல் கொடுத்து,

'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்க ளோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம்
நாங்கள், ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்று சிறியோர்க்கு ஞாபகம் செய்
முழங்கு சங்கே!'

என்று சங்காரமிட்டு, 'தமிழியக்கம்' எனும் தணல்வரிப் பாடல் நூலை ஆக்கி, தமிழ் மக்களின் நெஞ்சில் தாய்மொழி உணர்வை ஊட்டினார்.

மணி மணியான அறிஞர் அண்ணாவின் மாணிக்கத் தமிழால், அணி அணியாகத் தமிழ் இளைஞர்கள் அறிவியக்கப் பாதையில் நடை போடத் தொடங்கியதைக் கண்டு நல்லறிஞர்கள் வியப்புடன் போற்றினார்கள்.

1948ஆம் ஆண்டில் சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய பெருமகன் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. இதோ இப்படி மனந்திறந்து பேசினார்: 'தமிழ் மக்களே! இந்த மண்ணில் இனிமேல் திரு.வி.க. நடை, திரு.வி.க. பாணி, திரு.வி.க. எழுத்து என்று இருப்பதுபோல், இனிமேல் அண்ணா எழுத்து நடை, அண்ணா உரைப் பாணி, அண்ணா அழகு தமிழ் என்று ஒரு மரபு கிளைக்கத்தான் போகிறது. எதிர்காலத்தில் தமிழ் அழிந்து விடுமோ? யார் வந்து காப்பாற்றப் போகிறார்கள்?' என்று கவலையுடன் ஏங்கி இருந்தேன்; ஆனால் இனி நான் நிம்மதியாய்ச் சாவேன். காரணம் அறிஞர் அண்ணாதுரை தமிழுக்கு ஆற்றி வரும் மகத்தான தொண்டைத் தமிழர்கள் மறக்கவே மாட்டார்கள். அவர் அரசியல்வாதி மட்டுமல்லர்; தாய் நாட்டையும், தாய் மொழியையும் காக்கப் பிறந்த ஆற்றல் மிகுந்த தளபதியாவார்!'

இப்படிப் போற்றிப் புகழ்ந்ததோடு அல்லாமல் எப்போதும் இனிக்கின்ற வண்ணம் கீழ்வரும் பாடலால் தமிழ்ச் செம்மல் திரு.வி.க. அண்ணா அவர்களை ஏற்றிப் பாராட்டினார்.

'அண்ணா துரை என்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில், வாய்மொழியில் -
பண்ணாவான்
சிற்பன் எழுத்தோவியத்தில் செல்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமிஎன் றாடு!'

அரசியல் களத்தில் மாற்றுக் கருத்துடைய திரு.வி.க. அவர்களே சூட்டிய இப்பாமாலை அண்ணாவின் மாட்சியை உரத்த குரலில் எடுத்துக் கூறவில்லையா?

புதுவை தந்த புரட்சிக்குயில் பாவேந்தரும்,

‘தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு
தானுயரும் அறிவுயரும்
அறமும் ஓங்கும்;
இமயமலை போலுயர்ந்த
ஒருநாடும் தன்மொழியில்
தாழ்ந்தால் வீழும்!’

என்று தன் இறுதி மூச்சு உள்ளவரை ஈன்றெடுத்த தமிழுக்காகவே வாதாடி, தனக்குப் பின்னால் வலிமை வாய்ந்த ஒரு தனித்தமிழ்ப் பரம்பரையையே உருவாக்கினார்.

3. அறிவியக்கம் தழைத்திட நிறைவேற்றிய பணிகள்

'சாணிக்குப் பொட்டிட்டுச் சாமி என்பார் செய்கைக்கு நாணி உறங்கு; நகைத்து நீ கண்ணுறங்கு!'

என்று மழலைகளைத் தாலாட்டும் போதும் மூடத்தனத்தைச் சாடும் தொடர்களைப் பாடித் தன் கடவுள் மறுப்புக் கொள்கையைப் பறைசாற்றியவர் பாவேந்தர்.

'இல்லை என்போன் யாரடா?
தில்லை வந்து பாரடா!'

என்று எவர் எவரோ வைதிகத்தை நிலை நிறுத்தும் பாடல்களைப் பாடிய போது,

'இல்லை என்பேன் நானடா,
தில்லை கண்டு தானடா!'

என்று நெஞ்சை நிமிர்த்திப் பதிலடி தந்து முழக்கமிட்டவர் பாவேந்தரே.

அதேபோல் தன் ஏட்டிலும் நாடகங்களிலும் கடவுட் கொள்கையை மறுத்து ஆணித்தரமான வாதங்களை அடுக்கடுக்காக எடுத்து வைத்தவர் அறிஞர் அண்ணா.

அண்ணா, தான் தீட்டிய 'சந்திரோதயம்' நாடகத்தில் 'கடவுள் சிலை' வெறும் 'கற்சிலை'தான் என்பதை அவருக்கே உரிய நளினத்துடன் வெளிப்படுத்துவார்.

அந்த நாடகத்தில் அண்ணா ஒரு ஜமீன்தாராக நடிப்பார். அவரிடம் பணிபுரியும் வீராசாமியைப் பார்த்து ''ஏன் இரண்டுநாள் வேலைக்கு வரவில்லை?'' என்பார்.

''ஐயா, சிதம்பரம் ஆருத்ரா தரிசனம் காணப் போனேன்; அப்பன் நடராசன் எப்படி ஆனந்தமாக நடன மாடுகிறான்? கண்டு களித்து வந்தேன்'' என்பான் வீராசாமி.

''நடராசர் எப்படி நிற்கிறார் காட்டு!'' என்பார் அண்ணா. ''இதோ இப்படித்தான்'' என்று ஒருகாலைத் தூக்கி நின்று காட்டி விட்டு தூக்கிய காலை உடனே தரையில் ஊன்றிக் கொள்வான் வீராசாமி.

''இல்லை, நடராசர் இருப்பது போல நீ சில நிமிடங் களாவது ஒருகாலைத் தூக்கியே வைத்திருக்க வேண்டும்; கீழே போடாதே!'' என்பார் அண்ணா.

உடனே அவன் ''எப்படி ஐயா ஒரு காலைத் தூக்கியே வைத்துக் கொண்டு ஒரு காலால் நிற்க முடியும்? வலிக்குமே கால்'' என்பான் அவன்.

''ஆனால் நடராசன் சதா சர்வகாலமும் அப்படி ஒற்றைக் காலில்தானே நின்று காட்சி தருகிறார். பக்தனான உன்னால் முடியாதா?'' என்பார் அண்ணா.

உடனே பணியாள் வீராசாமி ''அது எப்படி ஐயா என்னால் ஒரே காலில் நிற்க முடியும்? கோயிலில் உள்ள அச்சிலை கல்; நான் மனிதன்; எனக்குக் கால் வலிக்குமே!'' என்பான்.

''இதைத் தாண்டா நாங்கள் கூறுகிறோம்; நாங்கள் கல் என்றால் பக்தர்களால் பொறுக்க முடியவில்லை'' என்பார் அண்ணா.

இப்படி ஒரு நடராச பக்தன் வாயின் வழியே 'கோயிற் சிலை ஒரு கல்' என்று நிரூபிப்பார் தன் சாதுரிய உரையாடலால் அண்ணா.

'இராமன் ஓர் அவதார புருஷன்' என்று கம்ப ராமாயணம் மூலம் இராமனின் மகிமையைச் சிலர் பரப்பிய போது, 'கம்பராமாயணம்' கொளுத்தப்பட வேண்டிய ஓர் இன எதிர்ப்பு நூல் என்று சுட்டிக்காட்டி அதை எரிக்க, 'தீ பரவட்டும்' என்று முழங்கியவர் அண்ணா.

நேருக்கு நேர் மேடையில் சந்தித்து, கம்ப ராமாயணத்தின் புகழ்பாடிக் கொண்டிருந்த ரா.பி. சேதுப்

பிள்ளை அவர்களிடமும், நாவலர் சோமசுந்தர பாரதியாரிடமும் பட்டிமன்றம் மூலம் சரியான பதிலடி தந்து வெற்றி கண்டவர் அறிஞர் அண்ணா.

கம்பராமாயணத்தில் உள்ள விரசங்களையெல்லாம் தோய்ந்தாய்ந்து படித்து, அக்காவியம் எப்படியெல்லாம் இளைஞர்களுக்கு ஊறு விளைவிக்கின்றது என்று விரிவாகக் கூறவே 'கம்பரசம்' எனும் அற்புதப் பனுவலைப் படைத்தவர் அண்ணா.

'காசைப் பிடுங்கிடு தற்கே - பலர்
கடவுளென்பார்! இரு காதையும் மூடு!
கூசி நடுங்கிடு தம்பி! கெட்ட
கோயிலென்றால் ஒரு காதத்தில் ஓடு!'

என்று கடவுளை வியாபாரப் பொருளாக்கி, பக்தியின் பெயரால் மோசடிசெய்வோரைப் பாவேந்தர் கடுமையாக எதிர்த்தார்.

'எல்லாம் அவன் செயலே என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்,
காப்பார் கடவுள் உமைக் கட்டையில் நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர் என உரைக்கும் வீணருக்கும்,
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த
தேனின் பெருக்கே, என் செந்தமிழே! கண்ணுறங்கு!'

என்று ஆண்மழலைக்குப் பாடிய தாலாட்டிலும் தன் ஒப்பரிய கடவுள் எதிர்ப்புக் கொள்கையை நெருப்பு வரிகளால் பாடியவர் பாவேந்தர்.

'நடவு செய்த தோழர் கூலி
நால ணாவை ஏற்பதும்,
உடலு ழைப்பி லாத செல்வர்
உலகை யாண்டு லாவலும்,
கடவு ளாணை என்று ரைத்த
கயவர் கூட்ட மீதிலே
கடவுள் என்ற கட்ட றுத்துத்
தொழிலு ளாரை ஏவுவோம்!'

என்று ஆவேசக் குரல் எழுப்பி, கடவுள் பெயரால் கயமைத் தனத்தில் ஈடுபட்டுத் தொழிலாளரை வதைக்கும் மேட்டூர்க் காரர்களைச் சாடி ஓங்கிக் குரல் எழுப்பியவர் பாவேந்தர்.

'உடைசு மந்த கழுதை கொண்டு
உழைத்த தோர்நி லைமையும்
உடைமை முற்றும் படையை ஏவி
அடையும் மன்னர் நிலைமையும்
கடவு ளாணை ஆயின் அந்த
உடைவெ ளுக்கும் தோழரைக்
கடவுள் தான்முன் னேற்று மோ?தன்
கழுதை தான்முன் னேற்றுமோ?'

என்று ஒரு சலவைத் தொழிலாளியைக் காப்பது கடவுள் அன்று கழுதையே என்று அறிவார்ந்த கருத்தைத் தயங்காமல் பாடியவர் பாவேந்தரே.

அறிஞர் அண்ணாவின் சூறாவளி உரைகளும், நாத்திகப் பாவலர் பாவேந்தரின் பகுத்தறிவுக் கவிதைகளும் முடைநாற்றம் வீசிய மூடக் கடவுள் நம்பிக்கையைத்

தகர்த்திடாவிட்டால், இன்னும் மத மாயை தலைதூக்கித் தமிழ் இனத்தைப் பாழ் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'

'ஏழையின் சிரிப்பில்தான் இறைவன் இருக்கிறான்'

என்று ஓயாமல் முழங்கிய அண்ணாவும்,

'கல்லைச் செம்பைக் காட்டுதற்குக்
கட்டணம் பறிப்பதோடா?
காட்டும் சிலை கடவுள் எனில்
காசுவாங்கச் சொல்லுமோடா?
கையுழைப் பிலாதவனின்
பொய்நடத்தை செல்லுமோடா!'

என்று உயர்த்திக் குரல் கொடுத்த பாவேந்தரும் இல்லை எனில் இன்று தமிழ் நாட்டின் மைல்கற்களெல்லாம் துணி துவைக்கும் கற்களெல்லாம் கடவுள்களாக அவதாரமெடுத் திருக்கும் என்பது திண்ணமல்லவா?

4. இளைஞர்களைக் கிளர்ந்தெழ வைத்த ஏந்தல்கள்

மனுதர்ம வருணாசிரமங்கள் விளைவித்த மதச்சாதி மாயையிலும், 'தேவமொழி' என்று முடிசூடிக் கொண்டு நுழைந்த வடமொழி கலந்த மணிப்பிரவாள ஆதிக்கத்திலும் மயங்கிக் கிடந்த தமிழர்களை அறிவியக்க நெறியில் ஆற்றுப்படுத்திடப் பாவேந்தரும் அண்ணாவும் ஆற்றிய அற்புதத் தொண்டு வரலாற்றுச் சிறப்புடையது.

குறிப்பாகவும் சிறப்பாகவும் இந்தக் கொள்கை வேந்தர்கள் தமிழ் இளைஞரிடையே தம் எரிமலைக் குழம்பு எழுத்தாலும், தணற் பிழம்புப் பேச்சாலும் ஏற்படுத்திய புத்தெழுச்சி காலத்தால் மறக்க வொண்ணாதது என்பேன்.

இதோ கருணாகரத் தொண்டைமானின் கலிங்கத்துப் படை கம்பீரத்துடன் நடைபோடுவதுபோல, பாவேந்தர் மறக்குலத் தமிழிளைஞர்களைத் தம் தீச்சுடர்ப் பாடல்

வரிகளால் தட்டி எழுப்புகிறார் பாருங்கள்:

'பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செயப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே;
சிம்புட் பறவையே! சிறகை விரி, எழு!
சிங்க இளைஞனே! திருப்பு முகம்! திற விழி!
இங்குன் நாட்டுக் கிழி கழுதை ஆட்சியா?
வழிவழிவந்த உன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற்றெங்கே? விழிப்புற் றெழுக!
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!'

இந்த அனல் வரிகளைப் படிப்போர் நாடி நரம்பெல்லாம் கொதிப்புணர்வைப் பெறமாட்டார்களா? இப்படிப்பட்ட எழுச்சிமிகு அடிகள்தாம் திராவிட இயக்க மேடைகளில் கோடை இடிகளாய் எதிரொலித்தன. திரண்டனர் திராவிடக் காளைகள். 'நம் மொழி, நம் இனம், நம் பண்பாடு' இவை காக்கப்பட வேண்டும் என்று சூளுரை மேற்கொண்டனர்.

சூறாவளியாகச் சுழன்று சுழன்று வந்து தம் நேரிலாச் சுடர் உரைகளால் தமிழ்மண்ணில் தனி எழுச்சியை ஏற்படுத்தினார் அண்ணா.

'தம்பிக்கு!' என்று தனிப் பாசம் ததும்பிட அழைத்து அவர் 'திராவிட நாடு' ஏட்டில் தீட்டிய தெம்பும் தீரமும் ஊட்டிய வரிகள் புதிய நம்பிக்கையை உருவாக்கி, தமிழ்

மண்ணின் வாலிபச் சேனை திரண்டெழுந்து தனி வரலாறு படைத்திட வழி வகுத்தது.

அண்ணா இதோ இப்படி எழுச்சியுடன் மடல் தீட்டினார்:

'அருமைத் தம்பி!
மக்களிடம் சென்றிடு;
அவர்களோடு வாழ்ந்திடு!
அவர்களிடமிருந்து அறிந்திடு!
அவர்களை நேசித்திடு!
அவர்களுக்காக உன் உழைப்பை நல்கிடு!
அவர்களோடு இணைந்து
அவர்களுக்காகத் திட்டமிடு!
அவர்களுக்குத் தெரிந்ததில் இருந்து
பணியைத் துவக்கிடு!
அவர்களிடம் இருப்பதில் இருந்து
தக்க வேலையைத் தொடர்ந்திடு!'

புல்லையும் நிமிரச் செய்யும், புழுவுக்கும் வீரம் ஊட்டும் இவை போன்ற நெருப்பு வரிகள் இளைஞர்களைத் தட்டி எழுப்பின. திராவிட இயக்கப் பாசறைகள் திண்மையும் வலிவும் பெற்றுச் செழித்தோங்கின.

இரவெல்லாம் தூங்காமல் விழித்திருந்து, விடியும் வரை எழுதித் தம் ஈடிலா எழுத்துத் திறத்தால் தமிழர்தம் விழிகளைத் திறக்க வைத்து விடியலைக் கொணர்ந்த பேரறிஞர் அண்ணாவைப் பற்றி ஐம்பதுகளிலேயே இப்படி ஒரு கவிதை எழுதினேன் நான்:

'நாங்களெல்லாம் தூங்குகிற நேரந் தன்னில்
நள்ளிரவில், விடிகாலை வரையில் அண்ணா
தூங்காமல் எழுதி வந்தீர், அவைப டித்தே
தூங்கியவர் எழுந்திட்டோம்;
விடியல் கண்டோம்!'

அவர் தம்பியர்க்குத் தீட்டிய ஒரு மடலில், 'தம்பி! இமை மூடாமல் இரவெல்லாம் எழுதியிருக்கிறேன். இனி நான் போய்ச் சற்று உறங்கிட அனுமதி தருவாயா? அதோ என் துணைவியார் இராணி வாசலில் நீர் தெளிக்க எழுந்து விட்டார். இனியாவது நான் கொஞ்சம் இமை மூடலாமா?'

என்று உருக்கமுடன் குறிப்பிடும் தொடர்கள் அந்த ஒப்பரிய தலைவனின் அளப்பரிய உழைப்பினைக் காட்ட வில்லையா?

'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்!'

என்று புதுப்புரட்சி ஏற்பட, கவிதை பாடிய பாவேந்தர் நமுத்துப் போன ஈரத் தீக்குச்சியாய் மந்த நிலையில் கிடந்த தமிழனைத் தட்டி எழுப்ப, அவன் உள்ளத்தில் சூடேற்றி அவனை நிமிர்ந்தெழச் செய்ய வீர வரிகளைப் பாடினார்:

'வலியோர்சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம் எனும் நினைவா?

கொலை வாளினை எடடா! மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே! உயர்
குணமேவிய தமிழா!
இலையே உண விலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவே முர
சறைவாய் முரசறைவாய்!'

என்று தீப்பொறித் தொடர்களால் தமிழரின் குருதியில் சூடேற்றிச் சுரணையை ஏற்படுத்திய பாவேந்தரைப் 'புரட்சிக் கவிஞர்' என்று ஏற்றிப் போற்றியது தமிழுலகம்.

இன உரிமை பறிக்கப்படுவதை மனம் கொதிக்கும் வகையில் தன் சிந்தனையாழக் கருத்துக்களால் எடுத்துக்கூறித் தமிழரைத் தட்டி எழுப்பினார் அண்ணா.

'தொட்டண்ணன் தோட்டத்தில்
வெட்டடன்ணன் மாடு மேய்வானேன்?'

'இப்படை தோற்கின் எப்படை செயிக்கும்?'
'தம்பி உடையான் படைக்கஞ்சான்'
'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'

போன்ற தொடர்களால் ஒரு தனி உத்வேகத்தை இளைஞரிடையே தவழவிட்டார் அண்ணா.

திராவிட இயக்கத்தில் தேனடையின் கண் மொய்க்கின்ற தேனீக்கள்போல் திறல் மறவர் வந்து மொய்த்தனர். அசைக்க முடியாத ஆலமரமாய் அவ்வியக்கம் செம்மாந்து செழித்தோங்கியது.

5. இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்த எரிமலைகள்

1938இல் அன்றைய ஆட்சியாளர்களால் இந்தி மொழி தமிழரின்மீது திணிக்கப்பட்டது.

தந்தை பெரியார் தமிழறிஞர்களுடன் சேர்ந்து அந்த இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டார்.

அப்பொழுது பாவேந்தர் அனல் மூச்சுடன் இப்படிக் கவிதைபாடித் தன் ஆவேசக் குரலை எழுப்பினார்:

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்
எல்லாரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்த பின்னும் - இந்தத்
தேகமிருந்தொரு இலாப முண்டோ!

எப்பக்கம் வந்து புகுந்து விடும்? - இந்தி
எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்?

அற்ப மென்போம் அந்த இந்திதனை - அதன்
ஆதிக்கம்தனைப் புதைத்திடுவோம்!

இப்படிக் கம்பீரக் குரலெடுத்துக் கவிதை பாடிய பாவேந்தர் அந்தக் கடிபோலி இந்தியை விரட்டிடக் கடுஞ் சிறையும் புகுவோம் என்று இளைஞர் சமுதாயத்தை அழைத்து இதோ இப்படிச் சூளுரை கூறுகின்றார்:

'மங்கை ஒருத்தி தரும் சுகமும்- எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப் போம்!
பங்கம் விளைத்திடில் தாய் மொழிக்கே - உடற்
பச்சை ரத்தம் பரி மாறிடுவோம்!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் - உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை.
மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - நமை
மாட்ட நினைக்கும் சிறைச் சாலை!
ஏங்கவிடோம் தமிழ்த் தாய் தனையே - உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும் வரை!'

இப்படி வீரம் மண்டிய கவிதைகளை அவர் படைத்த போது அவற்றில் தோய்ந்தெழுந்த இளைஞர் பட்டாளம் இந்தி எதிர்ப்புப் போரில் தம்மை இணைத்துக் கொண்டு அணி அணியாய்ச் சிறை ஏகியது.

அறிஞர் அண்ணா இந்தி மொழி மட்டும் தமிழ் மண்ணில் நுழைந்து ஆதிக்கம் பெற்றுவிட்டால் ஏற்படும் விபரீதங்களை விளக்கி நாடு முழுவதும் சூறாவளியாய்ச் சுழன்று வந்து உரை நிகழ்த்தினார்.

இந்தி எதிர்ப்புப் போரில் அவர் ஈடுபட்டபோது, சென்னை நகரக் காவல்துறை ஆணையராக இருந்த திரு. எஃப். வி. அருள், சென்னையில் அவரைக் கைது செய்து, குற்றவியல் நீதிபதி பி.எஸ். சோமசுந்தரம் முன்னால் கொண்டு போய்க் குற்றவாளியாய் நிற்க வைத்தார்.

அப்போது குற்றவாளிக் கூண்டிலே நிற்க வைக்கப் பட்ட அண்ணா அவர்கள் உருக்கமுடன் பேசினார்: 'மாண்புமிகு நீதிபதி அவர்களே! ஏன் நான் இந்தி ஆட்சி மொழி ஆவதை, நிருவாக மொழி ஆவதை எதிர்க்கிறேன்? இப்படி நான் எதிர்ப்பது என்னைக் குற்றவாளிக் கூண்டில் கொண்டு வந்து நிற்க வைத்துள்ளாரே இந்தக் காவல்துறை ஆணையர் அருள் அவர்கள் - அவருக்கும் சேர்த்துத்தான் நான் இந்தப் போராட்டத்தை நடத்துகிறேன். நாளை இந்திதான் ஆட்சி மொழி என்று ஆகிவிடுமானால் இதோ, கம்பீரக் காக்கி உடையில் காட்சி தருகிறாரே மதிப்புமிகு ஆணையர் அருள் - இவர் ஆணையராகவே இருப்பாரா? அவருக்குப் பதில் எவனோ ஒரு வடஇந்தியன் லால்சந்த் என்பவனோ மூல்சந்த் ' என்பவனோதானே இங்கே காவல்துறை ஆணையராக வருவார்கள். எனக்குச் சிறைத்தண்டனை தரப்போகிற மாண்புமிகு நீதிபதி சோமசுந்தரம் அவர்களே! நான் உங்களுக்கும் சேர்த்துத்தான் இந்தப் போரில் ஈடுபட்டி ருக்கிறேன். ஒருவேளை இந்திதான் நீதிமன்றமொழி என்று ஆகிவிட்டால் நீங்களா இந்த ஆசனத்தில் அமர்ந்திருப் பீர்கள்? வடக்கே இருந்து எவனோ ஒரு சோகன்லாலோ அல்லது மோகன்லாலோதான் நீதிபதியாக இங்கே வந்து அமர்ந்திருப்பான். அப்படிப்பட்ட கொடுமையான விபரீதம் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் இந்தி எதிர்ப்புப் போரை இப்படித் தீவிரமாக நடத்துகிறோம்!'

இப்படி அண்ணா வைத்த நுணுக்கமும் நுட்பமும் நிறைந்த வாதத்தைக் கேட்டோர் மெய்சிலிர்த்துப் போனார்கள்.

இதேபோல் ஒரு சிறிய ஊரில் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் அண்ணா பங்கேற்று அடுக்கடுக்கான வாதங்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். அப்போது எங்கிருந்தோ விளக்கொளி நோக்கிப் பறந்து வந்த கருவண்டு ஒன்று அவருடைய சட்டையின் முதுகுப்புறம் வழியாக நுழைந்து அவரைக் கடிக்கத் தொடங்கியது. தலைமை ஏற்ற கழகத் தோழர், அண்ணா வண்டுக்கடியின் வலியால் நெளிவதைக் கண்டு, சட்டைக்குள் புகுந்து தொல்லை தந்த அந்த வண்டினை ஓங்கித் தட்டிக் கொன்றார்.

மேற்கொண்டு அண்ணா பேசினார்: 'இதோ பார்த்தீர்களா? என் போக்கில் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால் எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு பொல்லாத வண்டு என் முதுகுப்புறம் புகுந்து கடிக்கத் தொடங்கியதால் கழக நண்பரால் அடி வாங்கி மாண்டது. இப்படித்தான் நம் தாய்த் தமிழின்மீது படை எடுத்திட எங்கிருந்தோ வரும் இந்தக் கடி போலி இந்தியும் உரிய அடி வாங்கிப் பாடம் பெறப் போகிறது!'

இச் சமயோசித உரை கேட்டு எதிரே இருந்த அனைவரும் கையொலி செய்து அண்ணாவின் சிந்தனை ஆற்றலைப் பாராட்டினர்.

இதே கருத்தைத்தான் தனக்கே உரிய அழுத்தத் தோடும் ஆற்றலோடும் கவிதை வரிகளாக்கினார் பாவேந்தர் பாரதிதாசன்:

'ஆரியம் என்னுமொரு செத்த மொழியின் - மெய்
அழுக்கில் புழுத்த இந்தி மொழியே!
கூரிய வாளுடைத் திராவிட மக்கள் - தம்
கூட்டம் சிறிதன்று இந்தி மொழியே!
இன்பத் திராவிடத்தில் இந்தி மொழியே! -நீ
இட்ட அடி வெட்டப் படும் இந்தி மொழியே!
துன்பம் கொடுக்க வந்த இந்தி மொழியே! உன்
சூழ்ச்சி பலிப்பதிலை எம்மிடத்திலே!'

என்று கொதிப்புணர்வுடன் பாடிய அவர், இன்னும் சற்று மேலே போய், தன் கோபத்தீயை எப்படிக் கொட்டுகிறார் பாருங்கள்:

இன்னலை ஏற்றிட மாட்டோம் - கொல்லும்
இந்தியப் பொதுமொழி இந்தி என்றாலோ
கன்னங் கிழிந்திட நேரும் - வந்த
கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம்!

இப்படிப் பாவேந்தர் தன் பாடல் அடிகளாலும், நாவேந்தர் அண்ணா தன் உரைகளாலும் கொளுத்திப் போட்ட இந்தி எதிர்ப்பு வெடிகளால் தமிழ் நிலம் தீப்பிடித்து எரிந்தது. உலகிலேயே எந்த நாடும் காணாத வகையில், தமிழ் மண்ணிலேதான் மாவீரன் கீழப்பழூர் சின்னச்சாமி போன்ற மறக்குலக் காளையர் பலர் இந்தி ஆதிக்கத்தினை எதிர்த்து, தம் இன்னுயிரையே காணிக்கை ஆக்கினர்.

விளைவு? 1967இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதல் அமைச்சாய் வருதல் வேண்டும்' என்று பாவேந்தர் கண்ட கனவு நனவானது. அறிஞர் அண்ணா அவர்கள் 23.01.1968 அன்று சட்டமன்றத்தில் 'இந்தி அறவே நீக்கப்படும்; இனி, தமிழ்நாட்டுக்கு மும்மொழித் திட்டம் தேவையில்லை; தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழியே போதும்!' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்து இந்தி ஆதிக்கத்தை அறவே ஒழித்தார். இல்லையேல் தமிழ் மாணவர்கள் இந்தியையும் கட்டியழும் அவல நிலையில் நீந்திக் கொண்டு இருப்பார்கள்.

6. பெண்ணியம் போற்றிய பெருமை

மண்ணின்மேல் சரிபாதியாக எண்ணிக்கையில் உள்ள மகளிர்க்கு, சமுதாயம் ஏனோ இன்றுவரை சமபாதி உரிமை தரவில்லை!

இல்லாவிட்டால் மூன்றில் ஒரு பங்கேனும் அவர் களுக்கு நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் இடம் பெற வழிவகை செய்யும் சட்ட முன்வடிவை நிறைவேற்ற ஆணாதிக்கம் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே இருக்குமா?

பாவேந்தர் பாவையர் குலத்திற்காக உருகி உருகிப் பாடினார். பெண் மழலையை ஏனையில் இட்டுத் தாலாட்டும் போதே,

'வண்மை, உயர்வு, மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேச வந்த
பெண்ணழகே!'

என்று இந்த உலகின் உயர்வெல்லாம் ஒப்பரிய மகளிரால் மட்டுமே உருவாக்கம் பெறுகின்றன என்று ஓங்கிக் குரல் கொடுக்கும் அவர்,

'நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே!'

என்று 'வீட்டைக் காக்கும் காவல் நாய்' என்று தாய்மையைப் பழித்தோர்க்கு, 'இல்லை, இல்லை அவள் மட்டும் இல்லையானால், மனிதகுல ஆக்கமே அழிந்துபோய் இந்த வையகம் என்றைக்கோ மயான பூமியாய் மாறி இருக்கும்' என்பதைத் தலையில் குட்டிச் சொல்கிறார்.

'பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டின்
மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பே!'

என்று இந்த மண்கண்ட அடிமை விலங்கை ஒடித்தால் மட்டுமே வண்மையும் வளர்ச்சியும் பெருகிவிடாது, பெண்ணடிமை எனும் பெருநோயும் களையப்பட்டாக வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாக வாதாடினார் அவர்.

மங்கையர் குல முன்னேற்றம்தான் மனிதகுல மேம்பாட்டை உருவாக்கும் என்று, தன் நாடகங்களிலும் திரைப் படங்களிலும் பெண்மைக்காக வாதாடினார் அறிஞர் அண்ணா.

அண்ணா திண்ணிய குரலெடுத்துக் கூறினார்: 'பெண்கள் வெறும் கூண்டுக்கிளிகளாக இருக்குமட்டும் நாட்டு வாழ்வு நிமிர்ந்து விடாது; நல்ல நிலை விளைந்து விடாது. அவர்கள் பேசாமடந்தைகளாக வீட்டு அடுக்களை

யில் முடங்கிக் கிடக்கும்வரை விமோசனம் ஏற்படுவது வீண் கனவுதான். பெண்களைப் பேசும் புறாக்களாக்கி உரிமை வானில் பறந்து திரியவைத்துப் பல வகையிலும் நாட்டுக்குப் பணியாற்றுபவர்களாக மாற்றும் திருநாள்தான் இந்த மண்ணுக்குப் பொன்னாள்.'

பெற்றெடுத்த பெண்ணின் மனத்தை அறியாமல் பொருந்தாத் திருமணங்களுக்கு ஏற்பாடு செய்யும் பேதைப் பெற்றோர்க்கு அண்ணா எப்படிப் பதிலடி கொடுத்தார் என்பதை நானே நேரில் கண்டேன். அவர் நடத்தி வைத்த தமிழ்ச் சீர்திருத்தத் திருமண நிகழ்ச்சி ஒன்றில் அவர் ஆற்றிய பொருளாழம் மண்டிய உரை இது:

''இந்த மணவிழாவில் ஆண்களைவிடப் பெண்கள் அதிகம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எங்கே எதைப் பேசவேண்டுமோ அதைப் பேசத் தவறி, வேண்டாத இடத்திலே வெற்றுக்கதை பேசுவார்கள். உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். அப்பொழுதுதான் பேசத் தொடங்கி இருக்கும் தங்கள் ஐந்து வயது மகளை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு, கேட்கக் கூடாத ஒரு கேள்வியைக் கேட்பார்கள். மழலை பேசும் அம்மகளிடம் போய், ''நீ யாரை யம்மா கட்டிக் கொள்ளப் போகிறாய்?'' என்பார்கள். அக் கேள்வியின் அர்த்தமே அறியாத அந்தச் சின்னஞ்சிறு அன்றில் ''எதிர் வீட்டு ஏகாம்பரத்தைக் கட்டிக் கொள்ளப் போகிறேன்'' என்று பதில் கூறுவாள். ஏகாம்பரம் சொந்தச் சாதி இல்லையே என்று அறிந்திருந்தாலும், 'என் சமர்த்துக் கிளி' என்று தட்டிக் கொடுப்பார்கள். ஆனால் நாங்கள் சொல்வது, அந்தப் பிஞ்சு வயதில் நீங்கள் கேட்கின்ற கேள்வியையே பதினைந்து வயதில், அப்பெண் ஆளாகி வளர்ந்தவுடன், 'நீ யாரையம்மா கட்டிக் கொள்ளப்

போகிறாய்?' என்று கேளுங்கள் என்கிறோம். அப்படி அவள் விருப்பம் அறியாமல் எங்கோ இருக்கிற மரத்தடி சோதிடனிடம் போய் எந்த மணமகன் பொருத்தமாக இருப்பான் என்று கேட்பது அறிவுடைமையா?'' என்று அண்ணா கூறியபோது அவை கைதட்டலால் அதிர்ந்தது.

அதே போல் அண்ணா தீட்டிய 'குமாஸ்தாவின் பெண்' எனும் கதையில் ஏழ்மையில் தவிக்கும் எழில் நிறைந்த மங்கை காந்தாவை நான்காம் தாரமாக ஒரு வயோதிகர் பணத்தால் வாங்கி அவள் வாழ்வை இருட்டாக்கி, விதவைப் பட்டமும் அளித்துப் போய்ச் சேர்ந்து விடுகிறார்.

காந்தா கண்ணீருடன் பேசுகிறாள்: ''நான் விதவையானேன்; சகுனத் தடையானேன்; சமுதாயத்தின் சனியன் ஆனேன். தாலி இழந்த நான் எல்லா உணர்ச்சிகளையும் இழந்துவிட்டேனா? இதைச் சிந்திக்காமல் என்னைச் சுற்றியுள்ள தாய், தந்தை, உறவினர் கவலையெல்லாம் இவளால் குலப்பெருமைக்குப் பங்கம் வரக்கூடாதே என்பதுதான்!''

இப்படி வெண்ணிற ஆடை அளித்து வேதனையில் ஆழ்த்திய சமுதாயத்திற்குத் தக்க 'விதவைகள் மறுமணத் திட்டம்' மூலம் ஒரு புரட்சியையே உருவாக்கினார் அறிஞர் அண்ணா. ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் விதவைகளைத் திருமணம் செய்து மறுவாழ்வு தரும் இளைஞர்க்குத் தங்கப் பதக்கம் அளிக்க முன்வந்தவர் அறிஞர் அண்ணா.

பாவேந்தரோ கைம்மை எனும் சமுதாயத்தைத் தீய்க்கும் கொடுமையைத் தன் தீப்பிழம்புக் கவிதைகளால் பல்வேறு வகையில் உருக்கமுடன் எடுத்துக்கூறி, விதவை

யரின் மறு மலர்ச்சித் திருமணங்கள் நடைபெற வழி கோலினார்.

இதோ பாவேந்தரின் கொதிப்பேற்றும் பாடல் வரிகள்:

'கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா! - மிகக்
கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்
வடிகின்ற வட்ட நிலா!

சூடத்தகா தென்று சொல்லி வைத்தார்- தலை
சூடத்தகும் கிரீடத்தை - நாம்
தொடவும் தகா தென்று சொன்னார் - நறுந்தேன்
துவைந்திடும் பொற்குடத்தை!'

என்று அழுத்தமுடன் பாடிய அவர், மேலே போய்,

'துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்
தேடுமோர் ஆடவன்போல் - பெண்ணும்
துணைவன் இறந்தபின் வேறுதுணைதேடச்
சொல்லிடுவோம் புவிமேல்!'

என்று உரிய கழுவாய் தேடவும் வலியுறுத்திக் 'கைம் பெண்டிர்' எனும் ஓரினமே சமுதாயத்தில் இருக்கக் கூடாது என்று ஆணித் தரமாக வாதாடினார்.

பெண்கல்வியின் இன்றியமையாமையை அற்புத மான உவமையுடன் பாடி நம் நெஞ்சில் கல்வெட்டாய்ப் பதிய வைக்கிறார் பாவேந்தர்:

'கல்வியில் லாத பெண்கள்
களர் நிலம்; அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைவ தில்லை!'

இதைக் காட்டிலும் பெண்கல்வியின் அவசியத்தைச் சிறப்பாக வேறு எவரும் பாடமுடியாது.

அதனால்தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், நாட்டில் பல்வேறு மகளிர் கல்லூரிகளையும் மகளிர் தொழில் நுட்பக் கல்லூரிகளையும் அமைத்திடத் திட்டம் வகுத்தார் அறிஞர் அண்ணா.

'மகளிரெலாம் அரசியலைக்
கைப்பற்றி ஆண்டால்
மாநிலத்தில் போரில்லை,
சாக்காடும் இல்லை'

என்று பாவேந்தர் கண்ட கனவு அண்ணா வழியில் வந்த கலைஞராட்சியில் நனவாகி, உள்ளாட்சித்துறைகளில், ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் முப்பத்து மூன்று விழுக்காடு மகளிர் பொறுப்பேற்றுக் கோலோச்சி வரும் பொற்காலம் கண்டு மகிழ்கிறோம் நாம்.

7. கொண்ட கொள்கையில் எஃகுறுதி

'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு,
சம்பாத்யம் இவையுண்டு தானுண்டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளம் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!'

என்று முத்திரை வரிகளால் மனிதன் என்பவன் மற்ற வருக்காக வாழப் பிறந்தவன், அவன் தன்னால் இயன்ற தொண்டால்தான் இறந்த பின்னரும் எச்சங்களை மிச்சம் வைத்துச் செல்கிறான் என்று வலியுறுத்துகிறார் பாவேந்தர்.

இதையே 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!' என்று எந்நாளும் வற்புறுத்தி வாலிபப் பட்டாளத்தைப் பொது வாழ்வுத் தொண்டுக்கு அழைத்துப் பக்குவப் படுத்தினார் பேரறிஞர் அண்ணா.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்ட மளிப்பு விழாவிலே இதோ இப்படி எண்ணத்தால் உயர்ந்த

இமயக் கருத்துகளை மாணவச் செல்வங்களிடம் எடுத்து முழங்கினார் அறிஞர் அண்ணா:

"Fight against caste which cannot coexist with Democracy;
Fight against superstition which cannot coexist with Science;
Fight against tyranny which cannot coexist with Liberty, Equality and Fraternity"

இந்த வகையில் சாதிச் சனியனை, முடைநாற்ற மூட நம்பிக்கையை, ஆதிக்க வெறியை ஒழிக்க இளைஞர் பட்டாளத்தைத் திரட்டிக் கொண்டே இருந்தார் அண்ணா.

தமிழ் மண்ணைப் பீடித்த பீடைகளை ஒழிக்கப் பாவேந்தர் தீட்டிய உணர்ச்சிமயமான தீப்பொறி வரிகள் இவை:

‘சாதி மத பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கி நடை பெற்று வரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத் திற்குப்
பேசுசுய மரியாதை உலகு
எனப் பெயர்வைப்போம்!

இந்த எழுச்சிப் பாடல்கள் திராவிட இயக்கத்தின் மேடைகளில் எல்லாம் முழங்கப்பட்டன. விளைவு?

மாபெரும் திருப்பத் தினை உருவாக்கிய மறவர் சேனை திரண்டு நின்று இந்த இழிவு களை ஒழிக்கச் சூளுரை ஏற்றது.

அறிஞர் அண்ணா அவர்கள் தம் வாழ்நாளெல்லாம் சமத்துவக் கோட்பாடு தழைத்திட, சாதிப்பேய் இந்த மண்ணை விட்டு ஓடிட, மௌடீகச் சடங்குகள் தொலைந்திட ஏட்டில் ஓயாமல் எழுதியும், மேடையில் பேசியும் புதுப் புரட்சியினை மலரச் செய்தார்.

தான் நடத்திய 'ஹோம்லாண்ட்' இதழில் அவர் 'Tap the rich and pat the poor` என்ற முழக்கத்துடன் வரைந்த தொடர் கட்டுரைகள், மேடு பள்ளமற்ற சமுதாயம் அமைந் திட வழி கோலியது.

அதேபோல் பாவேந்தர் அவருக்கே உரிய உவமை யழகுகளுடன் அரசியல் தத்துவங்களை அற்புதமாகப் பாடல் வரிகளில் படம் பிடித்துக் காட்டியது அவருடைய பரந்த பொது அறிவைத் துல்லியமாக விளக்கியது.

நன்னூலும், யாப்பருங்கலமும், தண்டியலங்காரமும் மட்டுமே தமிழ்ப் புலவரான பாவேந்தருக்குத் தெரியும் என்பது தவறு. அவருக்குக் காரல் மார்க்சின் 'தாஸ் கேபிடல்' தத்துவங்களும் தெரியும் என்பதை இதோ இந்த அடிகளால் அவர் வரைந்து காட்டினார்:

அரசியல் வகையின் அயல் மொழிப் பெயர்கள்:

சோசலிசம்:

'இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால்
அண்டை வீட்டானுக்கு ஒன்றளித்தல் 'சோசலிசம்'!

கேபிடலிசம்:

கறவைகள் இரண்டில் கடிதொன்றை விற்றுக்
காளை வாங்குவது 'கேபிடலிச'மாம்!

கம்யூனிசம்:

'ஆவிரண்டினையும் ஆள்வோர்க்கு விற்றுத்
தேவைக்குப் பால்பெறச் செப்பல் 'கம்யூனிசம்'!

பாசிசம்:

'பகரிரு கறவையைப் பறித்து ஆள்வோரிடம்
தொகைதந்து பால்பெறச் சொல்வது 'பாசிசம்'!

நாசிசம்:

'உரியவன் தன்னை ஒழித்தே கறவை
இரண்டை யும்கைப் பற்றல் 'நாசிசம்'!

நியூடிலிசம்:

'இரண்டு கறவையால் திரண்டபால் அனைத்தையும்
சாக்கடைக் காக்கு வதுதான் 'நியூடிலிசம்'!

எதனை இவற்றில் ஏற்பாய்?
அதனை உன் நாட்டுக் காக்குக தோழனே!'

மேற்கண்ட ஒப்பரிய பாடல் அடிகளில் பல்வேறு அரசியற் கோட்பாட்டுத் தத்துவங்களின் அடிப்படைப் பண்புகளை எத்தனை நேர்த்தியுடன் பாவேந்தர் விளக்கு கிறார் என்று கவனித்து மலைத்துப் போகிறோம் நாம்.

இதையே அண்ணா அவர்கள் தன் எழுத்துத் திறத்தாலும், அழூத்தமிகு பேச்சுத் திறத்தாலும், இந்த மண்ணில் 'ஆண்டான்', 'அடிமை', 'மேட்டூர்', 'பள்ளத்தூர்' என்ற பேதம் மாறி, சமத்துவம் நிலைபெறச் சுழன்று வந்து பாடு பட்டார்.

1967இல் அவர் இந்த நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த அந்த முதல் நாள் பற்றி அண்ணா இப்படி எழுதிக் காட்டினார்: 'அன்புத் தம்பி! பதவி ஏற்ற முதல் நாள் இரவு படுக்கைக்குப் போகிறேன். தூக்கமா வரும் எனக்கு? அதோ அங்கே ஒடிந்து சாய்ந்த குடிசையில் எப்படி வாழப்போகிறோம் என்று ஏக்கமுடன் தேம்பி நிற்கிறானே, ஒடுக்கப்பட்ட ஏழைத்தோழன், அவன் விழிநீர்த் ததும்பும் முகமல்லவா என் கண்முன் வந்து நிற்கிறது. அவனை எப்படி ஈடேற்றப் போகிறோம் என்ற கவலைப்படலம் தாக்கும்போது எனக்குத் தூக்கம் எப்படி வரும் தம்பி?'

இந்த எளியோர்க்கு இரங்கும் மழை உள்ளம் அவரிடம் இருந்ததால்தான் அவர் திடீர் என்று மறைந்தவுடன் இலட்சோப இலட்சம் மக்கள் திரண்டு கண்ணீர் வெள்ளம் பெருக்கிப் 'போய் விட்டீர்களா அண்ணா?' என்று கதறி நின்றார்கள்.

அண்ணா சட்டமன்றம் சென்றதும் கொண்டு வந்த முதல் சட்டம் வானம் பார்த்துப் பார்த்து வாடி நின்ற ஏழை உழவனின் வாட்டம் போக்கிட, புன்செய் நில வரிஒழிப்புச் சட்டம் கொண்டு வந்ததே. அதே போல் தாழ்த்தப்பட்டோரை உயர்சாதியினர் மணம் புரிந்தால் தங்கப்பதக்கமே

பரிசளிக்கப்படும் என்ற சமத்துவத் திட்டத்தை அறிமுகப் படுத்திப் புரட்சி செய்தார் அவர்.

'உத்தமரின் கனவுகள் நனவாகி வருகின்றன!
உலுத்தரின் நனவுகள் கனவாகிப் போகின்றன!'

என்பது அண்ணாவின் அரியதொரு முதுமொழி. அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவரே அவர்தான் என்பதற்கு நம் திருநாட்டின் வரலாறே சீரிய சான்று.

'கோட்டை நாற்காலி இன்றுண்டு - நாளை
கொண்டுபோய் விடுவான் திராவிடக் காளை!'

என்று கவிதைக் கனவு கண்ட பாவேந்தரின் எண்ணப்படி, கோட்டை நாற்காலியில் அமர்ந்தவுடன் அண்ணா கொணர்ந்த பல்வேறு சீர்திருத்த மேம்பாட்டுச் சட்டங்களும் திட்டங்களும் சமத்துவ சமுதாயம் அமைய வழிகோலின. அண்ணாவின் இதயத்தையே இரவலாகப் பெற்ற கலைஞர் தன் ஆட்சியில் அமைத்த நூற்றுக்கும் மேற்பட்ட சமத்துவ புரங்களும் தாழ்த்தப்பட்டவரும் அர்ச்சகராகலாம் என்று கொணர்ந்த புரட்சிச் சட்டமும் பாவேந்தரின் பாடல்களை உண்மையாக்கின.

8. உவமையழகால் உளம் கவர்ந்தோர்

'உவமையில் லாத பாடல்
உப்பிலாப் பண்டம் என்பேன்!'

என்பார் ஒப்பரிய உவமைக்கவிஞர் சுரதா அவர்கள். தம் புதுமையும் பொருள் அழகும் ததும்பும் உவமைகளால் தமிழர் நெஞ்சங்களை ஈர்த்தோர் பாவேந்தரும் அறிஞர் அண்ணாவும்.

'நால்வருணச் சாதி' என்பதே நரித்தனம் படைத்தோர் திணித்த நய வஞ்சகச் சூழ்ச்சி என்பதை இருவரும் எத்தனை எத்தனை வகையாகத் தமிழர் நெஞ்சில் பதிய மிட்டார்கள்?

'பொய்க் கூற்றே சாதி எனல் ஆரியச் சொல்
புது நஞ்சு, பொன்விலங்கு, பகையின் ஈட்டி!'

என்று அனல் மூச்செழுப்பிச் சாதியைச் சாடுகிறார் பாவேந்தர். சாதி என்பதே எதிரிகளால் புதிய கோப்பையில்

நிரப்பித்தரப்படும் புதிய நஞ்சாம்; அணிவிக்கப்படும் பொன் விலங்காம்; ஆனால் அதுதான் பகைப்புலம் நம்மீது பாய்ச்சும் ஓர் ஈட்டி என்றும் அழுத்தமுடன் பாடுகின்றார் அவர்.

இதேபோல் எதைச் சொன்னாலும் எழிலார்ந்த உவமை மூலம் விளக்குவதில் தனி முத்திரை பதித்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

ஒரு பணக்காரனையும் உயரியதோர் எளிய பண்பாளனை யும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்கிறார் அண்ணா. இதைஎப்படி நம் நெஞ்சங்களில் கல்வெட்டாய்ப் பதிய வைக்கிறார் பாருங்கள்:

'எளிய தயிரிலிருந்துதான் வெண்ணெய் எடுக்க முடியும்; மணங்கமழும் நெய் உருவாக்க முடியும். விலை உயர்ந்த பன்னீரிலிருந்து எவ்வளவு நேரம் கடைந்தாலும் வெண்ணெய் திரண்டு வராது. அதுபோல்தான் பண்பற்ற பணக்காரரிடமிருந்து உயர்ந்த நன்னெறியை எதிர்பார்க்க முடியாது. ஏழையாய் இருந்தாலும் நல்ல குணம் படைத்த வனிடம் இனிய பண்புகள் மேலோங்கி நிற்கும்!'

இப்படிச் சொல்ல வந்ததை எத்தனை நேர்த்தி யோடும் சீர்த்தியோடும் வெல்லச் சொற்களால் வெல்லரிய உவமைகளால் அண்ணா நெஞ்சில் அமர வைக்கிறார்.

'எத்தனை பெரிய வானம்
எண்ணிப் பார் உனையும் நீயே;
இத்தரை கொய்யாப் பிஞ்சு;
நீ அதில் சிற்றெ றும்பே!

அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித் தானே மானே!
பித்தேறி மேல் கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே!'

இப்பாடலின் மூலம் தன்னை உணராமல் தாவிக் குதிக்கும் சில மனிதர்களுக்கு அடக்க உணர்வின் மாண்பை ஈடிலா உவமையால் புகட்டுகிறார் பாவேந்தர்.

'கொஞ்சம் வீதிக்கு வந்து பரந்து கிடக்கும் எல்லையே இல்லா வான்வெளியைக் கூர்ந்து பார். நீவாழும் கோளம் ஒரு கொய்யாப் பிஞ்சு என்றால், அதில் ஊர்ந்திடும் சின்னஞ்சிறிய சிற்றெறும்புதான் நீ. அப்படி இருக்கும்போது படைப்பில் நான் மேல் என்றும் அவன் கீழ் என்றும் பித்தேறிப் பிதற்றுதல் ஏன்?' என்று சிந்திக்க வைக்கும் இந்த அற்புத உவமைப் பாடல் பாவேந்தரின் அரிய கற்பனைத் திறத்திற்கு ஒரு தலைசிறந்த சான்றாவணம் என்பேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் எழுதும்போது மட்டுமன்றி, உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே, உணர்த்த வேண்டிய கருத்தை அழகழகான உவமைகளால் கேட்போர் உள்ளத்தில் ஆழப் பதிய வைப்பார்.

மாணவப் பருவத்திலேயே நான் எழுதிய முதல் கவிதைத் தொகுதி 'வேழவேந்தன் கவிதை'களை *04.04.1963* அன்று சென்னை கோகலே மண்டபத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டு இந்த எளியவனின் கவிதைகளைப் பாராட்டி அறிமுகப்படுத்தினார்கள்.

இந்த விழாவில்தான் அண்ணா இப்படிப் பேசினார்:

''பாருங்கள். நான் கட்டுரைகள் எழுதுவேன். கதைகள் தீட்டுவேன். நாடகம் வரைவேன். திரைக்கதை எழுதுவேன். ஆனால் கவிதைகள் அவ்வளவாக எழுதுவதில்லை. ஒரு குடும்பத்தில் அண்ணனும் தம்பியும் இருப்பார்கள். அண்ணனுக்கு முன்னரே திருமணம் ஆகியிருக்கும். பின்னால் திருமணம் செய்த தம்பிக்கு முதலில் குழந்தை பிறந்துவிடும். இதைப் பார்த்து அண்ணன் மனம் வருந்த மாட்டான். தன் தம்பி பெற்ற குழந்தையை அன்புடன் தோளில் தூக்கி வந்து, எதிர் வீட்டுக்காரனைக் கூப்பிட்டு, 'இதோ பார்! என் இளவல் பெற்ற அழகு மகன். எத்தனை எழிலோடு சிரிக்கிறான்' என்று கூறி மகிழ்வதைப் போல நான் கவிதை எழுதாவிட்டாலும், என் தம்பி கவிஞர் வேழவேந்தன் பெற்றெடுத்த கவிதைக் குழந்தையின் பேரெழிலை உங்களுக்குக் கூறிப் பூரிப்படைகின்றேன்!''

அந்தப் பனி உள்ளம் கொண்ட மாத்தலைவர் அண்ணா இப்படி இணையிலா உவமையுடன் மனமாரப் பாராட்டி ஊக்குவித்ததால்தான் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேல் நான் துவளாமல் தொடர்ந்து கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

'ஆட்சிக் கட்டிலில் யாரை அமர்த்திடவேண்டும்? ஆசை வெறியும் ஆதிக்க உணர்வும் படைத்த அயோக்கியர்கள் கையில் செங்கோல் கிடைத்தால் என்னவாகும்?' என்ற வினாக்களுக்குப் பாவேந்தர் தன் நேர்த்திமிகு உவமையடிகளால் விடை பகர்கின்றார்.

'தேளுக்கு அதிகாரம் சேர்ந்து விட்டால்,
தன் கொடுக்கால்
வேளைக்கு வேளை விளையாடும், உணர்தமிழா!'

என்கிறார் அவர்.

தேள் குணம் கொண்ட தீயவன் மட்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துவிட்டால் பேயாட்டம் ஆடி, தினம் தினம் கொடுமைகளை இழைத்து, கொடிய சட்டங்களால் வதைப்பான் என்னும் கருத்தை, வேளைக்கு வேளை நம் உயிரோடு விளையாடுவான் என்று அழுத்தமுடன் பாடுகின்றார் பாவேந்தர்.

இதையே அறிஞர் அண்ணா எப்படிப்பட்ட இதமான உவமையால் விளக்குகிறார் பாருங்கள்:

'பாசி படர்ந்த குட்டையிலிருந்து பளிங்குநீர் கிடைப்பதில்லை; மாசு படிந்த மனங்களிலிருந்து தூய நன்னெறியை எதிர்பார்க்க முடியாது!'

'உண்மையை உலுத்தர்களின் பொய்மை காலமெலாம் வென்று விடாது; தண்மை நிறை செந்தமிழைத் தருக்கர்களின் சூழ்ச்சித் திறன் வெல்வதில்லை' என்ற கருத்தைப் பசுமரத்தாணியாய்ப் பதிய வைக்கப் பாவேந்தர் கூறும் அரிய உவமையழகைப் பாருங்கள்:

'காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டோ?'

என்ற அடுக்கடுக்கான வினாக்கணைகளுள் எத்தனை எத்தனை நெஞ்சைக் கவ்வி ஈர்க்கும் உவமைகள் தொக்கி நிற்கின்றன? இதுதான் அவருடைய அற்புதக் கவிதை யாற்றல்.

பொது வாழ்வில் பதவிக்கும் பற்றிய கொள்கைக்கும் புதுமையான உவமைகளைக் கூறித் தனி இலக்கணம் வகுக்கிறார் அண்ணா. அவர் சொன்னார்: 'பதவி இருக்கிறதே அது எனக்கு மேல்துண்டு; கொண்ட கொள்கைதான் என் இடுப்பு வேட்டி! நெருக்கடி நெருக்கும்போது துண்டைத் தூக்கி எறிவேனே தவிர, கட்டிய வேட்டியை அவிழ்த்து எப்போதும் எறிந்துவிட மாட்டேன்!' இந்த இலட்சியப் பண்புதான் அவரை இன்றும் நினைந்து போற்ற வைக்கிறது.

வாழ்நாளெல்லாம் தனைப் பெற்ற வண்டமிழ் மொழியைத் தமிழ் வகுப்பினாலும், கவிதைத் தொகுப் பினாலும் தாங்கிப் பிடித்த பாவேந்தர் தமிழ்ப் புலவர்களை இப்படிப் புது உவமையால் வழிபட்டார்:

'தமிழுக்குத் தொண்டு தரும் புலவோர்கள்
தமிழ்க்கனி மரத்தினைத் தாங்கிடும் வேர்கள்!'

அந்த வகையில் பாவேந்தரும் அண்ணாவும் தமிழன்னையின் இரு விழிகளாகவே திகழ்ந்து, ஈன்ற அத்தாய்க்கு மறக்கவொணாத் தொண்டாற்றி வரலாற்று ஏட்டின் முகட்டில் ஏறி நிற்கிறார்கள்.

9. திருக்குறள் போற்றிய திறன்

'துள்ளி ஆடுவோம் - வாரீர்!
பள்ளுப்பாடுவோம்!'

வள்ளுவன் இரண்டு திருவடி - இந்த
வைய‌ம் அளந்ததை எண்ணி எண்ணி நாம்
(துள்ளி ஆடுவோம்)

வானுக்குச் செங்கதிர் ஒன்று - புனல்
வண்மைக்குக் காவிரி ஒன்று - நல்ல
மானத்தைக் காத்து வாழ எண்ணு மிந்த
வையத்துக் கொன்று திருக்குறள் என்று
(துள்ளி ஆடுவோம்)'

இப்படி அள்ளி வழங்கும் அமுத வரிகளால் தெள்ளு தமிழ் வள்ளுவத்தின் ஈடிலாப் புகழைப் பாடிப்பாடி மகிழ்கிறார் பாவேந்தர்.

வானுக்கு ஒரு செங்கதிர் போல், வளத்திற்கு ஒரு காவிரிபோல், மானத் தமிழனுக்கு வாய்த்த தெவிட்டாத தேனடைதான் வள்ளுவப் பொதுமறை திருக்குறள் என்பது பாவேந்தரின் சீரிய வாதம்.

திருக்குறளின் மேன்மையைப் பொருத்தமான தொடர்களால் இப்படிப் பெருமையுடன் கூறினார் அறிஞர் அண்ணா:

'திருக்குறள்தான் தமிழகத்திற்குச்சிறப்பொளி நல்கிய நந்தா விளக்கு! அதனை இன்று தமிழர் கண்டெடுத்துத் தம் உள்ளத்திற்கு ஒளி தேடிக் கொள்ள வேண்டும்.

குறள் தரும் அறிவொளியைத் தமிழர் மறக்கும்போது தான், ஓர் இருட்படலம் வந்து அவர்கள் மனத்தைக் கவ்விக் கொள்கிறது!'

இப்படிக் கூறிய அறிஞர் அண்ணா கோட்டையுள் நுழைந்த முதல் நாள் அன்றே ஓர் அற்புதப் புரட்சியைச் செய்தார். சட்டப் பேரவைத் தலைவராக மாண்புமிகு ஆதித்தனார் அவர்களைத் தேர்ந்தெடுத்து, பேரவைத் தலைவர் ஆசனத்தில் அமர்த்தி, அவரை வாழ்த்திப் பேசினார் அண்ணா: "மாண்புக்குரிய ஆதித்தனார் அவர்களே! நீங்கள் பார் அட் லா படித்திருக்கலாம். சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளில் ஆங்கிலத்தில் வாதம் செய்து வென்ற திறமை யான வழக்கறிஞராக இருந்திருக்கலாம். இப்போது நீங்கள் ஏற்றிருக்கின்ற சீரிய பொறுப்பு தமிழகத்துச் சட்டப் பேரவைத் தலைவர் பொறுப்பு. இனி இந்த மன்றில் நம் அன்னைத் தமிழில்தான் சட்டமன்றம் நடைபெற வேண்டும்.

நம் பொது மறை திருக்குறள்தான் இங்கு ஒலிக்க வேண்டும். நாளும் ஒரு பொருத்தமான திருக்குறளையும் அதன் பொருளையும் நீங்கள் கூறிய பின்னரே அவை நடவடிக்கை களைத் தொடங்க வேண்டும்!'

இப்படி 1967இல் தமிழ்மறைக் குறளோடு நித்தம் தொடங்கிய சட்டப் பேரவை, இன்றும் அந்த மரபை அப்படியே பின்பற்றி வருகிறது என்று சொன்னால், அந்த முழுப்பெருமைக்கும் உரியவர் அறிஞர் அண்ணா அவர்களே!

'குறள் படித்தேன் குறள் படித்தேன்
குறைக ளைந்தேன் நான் - மனக்
கொழுமை கொண்டேன் நான் - உயிர்ச்
செழுமை பெற்றேன் நான்!

அறம் படித்தேன், பொருள் படித்தேன்,
இன்பம் படித்தேன் - அறி
வின்பம் குடித்தேன் உலகத்
துன்பம் துடைத்தேன்!'

என்று பாவேந்தர் அழுத்தந்திருத்தமாகப் பாடுகின்றார். வாழ்க்கையின் குறை களைய வள்ளுவரின் குறள் மருந்து தான் ஏற்றது. அறம், பொருள், இன்பம் படித்தேன்; அறி வின்பம் குடித்தேன்' என்று பொதுமறையின் மதுவின் பத்தைப் பாடிப்பாடி மகிழ்கிறார் அவர்.

அண்ணா கோட்டை புகுந்தவுடன் நிகழ்த்திய இன் னொரு மாபெரும் புரட்சி இதுதான்: வள்ளுவப் பெருந்தகை யின் உருவத்தை தம் மனம்போன போக்கில் அதுவரை

வடித்தும், வரைந்தும் குழப்பிக் கொண்டிருந்தார்கள் சிலர். அவர் நெற்றியில் பட்டையும், கழுத்தில் கொட்டையும், மார்பில் பூணூலும் அணிந்திருப்பது போல், தம் மதக் கோட்பாடுகளைத் திணித்து வள்ளுவரைத் தம் சமயத்தில் சேர்த்துக் கொள்ளச் சமய சந்தர்ப்பவாதிகள் முனைந்திருந்தனர். அண்ணா அவர்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். எல்லோர்க்கும் பொதுவான உருவத்துடன் பொதுமறைப் புலவர் காட்சியளிக்கும் படத்தைத் திரு. வேணுகோபால சர்மா மூலம் வரையச் செய்து, மத அடையாளங்களே இல்லாத தூய வள்ளுவர் உருவத்தை அங்கீகாரம் செய்து, அரசு அலுவலகங்களிலும், அரசுப் பேருந்துகளிலும் இடம் பெறச் செய்தார் அண்ணா. அதுவரை விநாயகரும் சரசுவதியும் இலட்சுமியும் ஏசுவும் இடம் பிடித்திருந்த பல அரசு அலுவலகங்கள் வள்ளுவர் படங்களை மட்டுமே பெற்று, மத பேதமற்ற சமத்துவ அரசு இது என்பதைப் பறைசாற்றின.

இங்ஙனம் அரசுப் பேருந்துகளில் பொருளாழம் நிறைந்த பொதுமறைக் குறள்களை முதல்வர் அண்ணாவின் ஆணைப்படி எழுதிய போது, அதையும் கிண்டல் செய்யத் தயங்கவில்லை சிலர்.

அன்று ஒருநாள் சட்டப் பேரவையில் இப்படிக் குறள் பேருந்துகளில் எழுதுவது பற்றிய விவாதம் நடைபெற்ற போது, எதிர்க்கட்சியைச் சேர்ந்த 'வினா'வையே தன் பெயரில் அடக்கி வைத்த ஓர் உறுப்பினர் தன் கேலிக் குரலில், ''இருக்கும் பணிகளையெல்லாம் விட்டுவிட்டு, ஓடும் பேருந்துகளில் 'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' என்று ஒரு குறளை எழுதி வைத்திருக்கிறீர்களே' அது யாருக்காக? பயணியரிடம்

தகாத வாதம் செய்யும் நடத்துநருக்காகவா? அல்லது பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தாமல் அடாவடி பேசும் ஓட்டுநருக் காகவா? யாருக்காக இக்குறள்?'' என்று பகடியுடன் கேள்வி தொடுத்தார்.

உடனே அண்ணா அவர்கள் எழுந்து, ''யாகாவார் ஆயினும் நாகாக்க'' என்ற அற்புதமான குறள் 'நடத்து நருக்கா, ஓட்டுநருக்கா?' என்று கேட்கிறார் மாண்புமிகு உறுப்பினர். யாருக்கெல்லாம் நாக்கு இருக்கிறதோ அவர்கள் அனைவருக்காகவும் எழுதப்பட்டதே இக்குறள், வினா தொடுக்கும் உறுப்பினர் உட்பட!'' என்று பதில் கூறினார். அவை கையொலியால் அதிர்ந்தது.

திரும்பத் திரும்ப வள்ளுவத்தின் மாட்சியைப் பாடிய பாவேந்தர் இதோ இப்படித் தன் முத்திரைக் கவிதையில் ஏன் குறள் மறையை விரும்புகிறோம் என்று காரண காரியத்துடன் பாடுகின்றார்:

'தெள்ளுதமிழ் நடை சின்னஞ் சிறிய இரண்டடிகள்,
அள்ளு தொறுஞ்சுவை உள்ளுதொறும் உணர் வாகும்
வண்ணம்
கொள்ளும் அறம் பொருள் இன்பம் அனைத்தும்
கொடுத்த திரு
வள்ளுவனைப் பெற்றதாற் பெற்ற
தேபுகழ் வையகமே!'

இப்படி ஈடிலா வள்ளுவப் புலவனைப் பெற்றதால் இந்த வையகம் புகழ் பெற்றது என்று நெஞ்சுயர்த்திப் பாடு கிறார் அந்தப் புரட்சிக் கவிஞர்.

அதனால்தான் பேரறிஞர் அண்ணா அயல் நாடுகள் சென்றபோது திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களை அள்ளிச்சென்று, போப் ஆண்டவர் முதல் அனைவர்க்கும் அளித்து, 'அந்த வள்ளுவப் பாட்டனின் வழி வந்தவர் நாங்கள்' என்று பெருமிதத்துடன் கூறினார்.

'வித்திப் பிழைக்கும் உழவனும் வேந்தனும்
நாடனைத்தும்
ஒத்துப் பிழைக்க வழிகாட்டி வள்ளுவன் ஓதிய நூல்
எத்துப் பழுத்தவர் ஏமாற்றும் ஆரிய நான்மறைபோல்
அத்திப் பழம் அன்று; தித்திக்கும்
முப்பழம் ஆம்படிக்கே!'

என்று ஆணித்தரமாக அடித்துப் பாடி, பாவேந்தர் குன்றிலிட்ட பெருவிளக்காக என்றும் ஒளிர்வது திருக்குறளே என்று அழுத்தமுடன் கூறினார்.

10. ஒருவரை மற்றவர் போற்றிய ஒப்பரிய உயர் பண்பு

தமிழர் பெற்ற காலக் கொடைகளாய்ச் சம காலத்தில் வாழ்ந்த பாவேந்தரும் அண்ணாவும் ஒருவரை மற்றவர் போற்றிப் பாராட்டி மகிழ்வதில் தவறியதில்லை.

'தலை சிறந்த பேச்சுவல்லோன்; தமிழ வீரன்
தமர் என்றும் தான் என்றும் நினைப்பகற்றித்
தமிழ்நாட்டின் நலத்திற்கே உயிர் உடல்கள்
அமைகவென இரவுபகல் உழைக்கும் மேலோன்!'

என்று நாவார, மனமாரப் போற்றிப் பாராட்டி அண்ணாவைப் புகழ்ந்து பாவடித்தார் பாவேந்தர்.

அதே மனப் போக்குடன் அனற் பிழம்புக் கவிதை களால், தமிழ் இளைஞர்களின் குருதி நாளங்களில் சூடேற்றிய பாவேந்தரின் பெருமையைப் பறைசாற்றும்

வகையில் செயல்பட்டார் அண்ணா. அவர் 08.03.1942 இல் தொடங்கிய 'திராவிட நாடு' முதல் இதழின் முகப்பிலேயே, பாவேந்தரின் வைரமணிப் பாடல் வரிகளான, 'தமிழுக்கும் அமுதென்றுபேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற கவிதைத் தொடர்களை வெளியிட்டு, பாவேந்தருக்குப் புகழ் மகுடம் சூட்டினார்.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!'

என்று மொழி எழுச்சியுடன் இன எழுச்சிக் குரலும் கொடுத்த பாவேந்தருக்குத் தகுந்த வகையில் பாராட்டு நல்கிப் பொற்கிழி வழங்க வேண்டுமென்று அறிஞர் அண்ணா நன்முயற்சி மேற் கொண்டார்.

18.02.1945 அன்று மிகுந்த ஆர்வமுடன், 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நிதிக்குழு'வை அமைத்தார் அறிஞர் அண்ணா.

முதல் நிதியாகத் தந்தை பெரியாரிடமே ரூ. 150 ஐப் பெற்றார் அவர். பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ரூ. 50 நன்கொடை அளித்தார். இப்படிச் சிறுகச் சிறுகத் தமிழகம் முழுதும் திரட்டிய மொத்தத் தொகை ரூ. 24,379, அணா 4, பைசா 4 ஐயும் புரட்சிக் கவிஞரிடம் ஒரு விழா நடத்தி, தமிழறிஞர் பெருமக்கள் முன்னிலையில் வழங்கிப் பெருமைப்படுத்த எண்ணினார் அண்ணா.

28.07.1946 அன்று நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில், தலைசிறந்த தமிழறிஞர்கள் இரா.பி. சேதுப் பிள்ளை, கி.ஆ. பெ. விசுவநாதம், ஜீவா, மு.வ., ம.பொ.சி., பம்மல் சம்பந்த முதலியார், நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் போற்றிப் பாராட்டுரை நல்கிட அப்பொற் கிழியை நாடு போற்றிய நற்கவிஞருக்கு வழங்கிப் புகழ் சேர்த்தார் பேரறிஞர் அண்ணா. எங்கே அந்தப் பணமுடிப்பை ஒருவர் வழங்கிடக் கவிஞர் கை அதைக் கீழே நீட்டிப் பெற்றால் கவிஞரின் சுயமரியாதைக்கு இழிவு நேருமோ என்று கருதிய அண்ணா, ஒரு தாம்பாளத்தில், அப் பொற்கிழி முடிப்பை வைத்து, பாவேந்தரை எடுத்துக் கொள்ள வேண்டி னார். இது தானே சுய மரியாதை இயக்கத்தின் அடிப்படை இலட்சியம்.

நாட்டை நலிவுறச் செய்த நான்மறை வருணா சிரமத்தால் தமிழர்படும் கேட்டை எழுத்தாலும் பேச்சாலும் நளினத்தோடும் நயத்தோடும் எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினார் அறிஞர் அண்ணா. அதற்காகப் பல்வேறு எழுச்சி நாடகங்களைத் தீட்டி, அவரே அரிதாரம் பூசி நடித்து, தூங்கிய தமிழினத்தைத் தட்டி எழுப்பினார்.

அப்படி எழுதப்பட்ட அற்புத நாடகங்களில் ஒன்று தான் வரலாற்றுப் பின்னணி கொண்ட 'சந்திரோதயம்' நாடகம்.

நாடே திரண்டு நின்று கூடிப் பாராட்டிப் போற்றிய அந்தப் புகழ் பெற்ற நாடகத்திற்கு *05.06.1943* அன்று பாவேந் தரே தலைமை ஏற்று, முழுதும் கண்டு சுவைத்து, அண்ணா வின் அரிய படைப்புத் திறனைப் பாராட்டி மகிழ்ந்தார்.

பின்னர் பாவேந்தரின் மணிவிழா கொண்டாடப் பட்ட நேரத்தில், அறிஞர் அண்ணா தம் 29.04.1951ஆம் நாள் 'திராவிட நாடு' இதழையே பாவேந்தரின் மணிவிழா மலராக மாற்றிச் சிறப்புடன் வெளியிட்டார்.

உலகப் பெரும் கவிஞர்கள் புஷ்கின், வால்ட் விட்மன், ஷெல்லி, வால்ட்டேர் ஆகியோரின் உயரிய புரட்சிக் கருத்துகளோடு ஒப்பிட்டு, 'ஒரே நிலவு' எனும் புதுமைத் தலைப்பில் பாவேந்தரின் மறுமலர்ச்சிக் கவிதை களின் மாட்சியை விரித்துரைத்தார் அந்த மலரில் அறிஞர் அண்ணா.

'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்!'

என்று மனமாரப் பாடிக் கனவு கண்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அக்கனவை நனவாக்கும் வகையில் 1967 இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராய்ப் பொறுப்பேற்றார் அறிஞர் அண்ணா.

'இந்திதான் இந்திய நாட்டின் பெருவாரியான மக்களால் பேசப்படும் தேசிய மொழி' என்று கூறி, தில்லி அரசு தமிழர்களின் மீது இந்தி மொழியைத் திணித்தபோது, பாவேந்தர் இடிமுழக்கப் பாடல் வரிகளால் தமிழ் இளைஞர் குருதியில் சூடேற்றினார்:

'இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் – நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்த பின்னும் – இந்தத்
தேக மிருந்தொரு இலாப முண்டோ?

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? - இந்தி
எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்?
அற்ப மென்போம் அந்த இந்தி தனை - அதன்
ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம்!

எங்கள் உடல் பொருள் ஆவியெலாம் -எங்கள்
இன்பத் தமிழ்மொழிக் கேதருவோம்!
மங்கை ஒருத்தி தரும் சுகமும் - எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்!

தூங்குதல் போன்றது சாக்காடு! - பின்னர்த்
தூங்கி விழிப்பது நம் பிறப்பு!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் - உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!'

இப்படித் தீப்பொறிக் கனல் வரிகளால் பாவேந்தர் எழுப்பிய மொழிப் புரட்சித்தீ நாடுமுழுதும் பரவியது.

கட்டிளங் காளைகள் பலர் உணர்ச்சிவயப்பட்டவர்களாய்த் தர்ய்த்தமிழைக் காக்கத் தம்மையே களப்பலி தந்தார்கள். கீழப்பழுவூர் சின்னச்சாமி எனும் கீர்த்திமிகு இளைஞன் திருச்சி நகரில் இளங்காலையில், 'எங்கள் உயிர்த் தமிழ் வாழ்க! ஓடி வந்த இந்திப் பெண் ஒழிக!' என்று குரல் எழுப்பிக் கொண்டே மரணத்தைத் தீக்குளித்து முத்தமிட்டான். கிளர்ச்சி உச்சக்கட்டம் அடைந்ததும், வேறு வழியின்றி டெல்லி ஆதிக்கம் இந்தித் திணிப்பை நிறுத்தி, "Hindi will not be imposed against the wishes of the non-Hindi people" என்று உறுதிமொழி அளித்து தமிழகக் கொந்தளிப்பை அமைதிப்படுத்தியது.

அண்ணா தமிழ் மக்களின் மகத்தான ஆதரவுடன் 1967 இல் கோட்டை புகுந்தார்.

'இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா?' என்று கேட்ட பாவேந்தர் 1964இல் மறைந்து விட்டாலும், அவர் கண்ட கனவை நனவாக்க அண்ணா அவர்கள், இந்தியை அறவே நீக்கி, தமிழகத்தில் தமிழ், ஆங்கிலம் இருமொழியே போதும் என்று சட்டமே கொணர்ந்தார்.

1968இல் அண்ணா பொறுப்பேற்று நடத்திய உலகத் தமிழ் மாநாட்டின்போது, அழகிய மெரீனா கடற்கரையில் கம்பீரத்துடன் நிற்கும் பாவேந்தரின் உருவச் சிலையைத் திறந்தார் அவர். இந்த மண்ணில், மானத்தையும் அறிவையும் மேம்படுத்திட, வாழ்நாளெல்லாம் கவிதைகளைத் தீட்டிக் கொண்டே இருந்த பாவேந்தர் தலைநகரின் கடற்கரையில் சிலையாக நிமிர்ந்து நின்று கொண்டிருக்கிறார். பின்னர் முதல்வர் பொறுப்பேற்ற அண்ணாவின் அருமைத் தம்பி கலைஞர் அவர்கள் காலத்தில்தான் பாவேந்தர் குடும்ப வாரிசுகளுக்குப் பல இலட்சம் அளித்து, பாவேந்தர் படைப்பு களை நாட்டுடைமையாக்கி, எல்லோரும் எல்லாக் காலத் திலும் பாவேந்தர் பாடல்களை எளிதில் படிக்க வழி செய்யப் பட்டது.

11. தமிழ்ச் சமுதாயம் மேம்படப் பாடுபட்ட தனிப்பெரும் சிமிழ்கள்

'எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாள் ஆகும்!'

என்று முழங்கிய பாவேந்தர் தமிழின மேம்பாட்டுக்காகவே காலமெல்லாம் தன் பேனாவை ஓட்டினார்.

'கெடல் எங்கே தமிழின் நலம்
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!'

என்று ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பாடிக் கொண்டே இருந்தார்.

இதேபோல் அறிஞர் அண்ணாவும் 'ஏ, தாழ்ந்த தமிழகமே! நீ எப்போது விழித்தெழப்போகிறாய்?' என்று வினாத்தொடுத்து, தன் எழுச்சிமிகு உரைகளால், ஏற்றமிகு கட்டுரைகளால், ஈடிலா நாடகங்களால், சாதித் தேளாலும், மதப் பாம்பாலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்த தமிழர் களைத் தட்டி எழுப்பினார்.

அண்ணா தமிழர் நெஞ்சில் தைக்கும் வண்ணம் இதோ இப்படிக் கூறினார்:

''பாருங்கள்; கடிகாரத்தின் நொடிமுள்ளும் மணி முள்ளும் நகர்வதை மட்டுமே கவனித்து, தம் வாழ்க்கையை வேகமாக நகர்த்திக் கொண்டிருக்கும் மேனாட்டார் விஞ்ஞான வேகத்தோடு எங்கோ உயரத்திற்கு முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள்; ஆனால் இன்னமும் நாம் பஞ்சாங்கத்தைப் பார்த்து நவக்கிரகங்கள் நகர்வதை மட்டும் வைத்தே செயல்பட்டுக் கொண்டிருப்பதால் பின்னேறிக் கொண்டே இருக்கிறோம்!''

'நம் தமிழ்மக்களின் வாழ்க்கைத் தரம் உயராதா!' என்று நாளெல்லாம் ஏங்கி ஏங்கிக் கனவு கண்டார் அண்ணா. அவர் மனக்குமுறலுடன் இதோ இப்படிக் கூறினார்: ''எலிக்குக்கூட வளை இருக்கிறது; குருவிக்குக்கூடக் கூடு இருக்கிறது; பாம்புக்குக்கூடப் புற்று இருக்கிறது. ஆனால் இந்த மண்ணில் ஆறறிவுடைய மனிதன் குந்தக்கூடக் குடிசை யின்றி, நடைபாதைவாசியாகவே வாழ்ந்து, நடைபாதை யிலேயே குடும்பம் நடத்தி, நடைபாதையிலேயே செத்து மடிகிறானே, இந்த அவலம் என்று மாறும்? அகராதியி லிருந்து 'நடைபாதைவாசி' என்ற சொல்லை எப்போது நாம் அறவே நீக்கப் போகிறோம்!'

இந்த மன நிலையைத்தான் அவர் 1962இல் தில்லிப் பாராளுமன்றத்தில் நுழைந்தபோது, தன் கன்னிப் பேச்சிலேயே நேருபிரான் போன்றோர் முன்னால் வெளிப்படுத்தினார். அண்ணா இதோ இப்படித்தான் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்: "I am the representative of the man in the street."

இப்படித் தன்னைத் 'தெருவோரத்திலே நின்று தேம்பிக் கொண்டிருக்கும் ஏழையின் பிரதிநிதி' என்று அடையாளங்காட்டிய அண்ணா, 'தமிழர் உலகின் முதல்தரக் குடிமக்களாக உயர மாட்டார்களா?' என்று எண்ணி எண்ணிச் செயல்பட்டார்.

பாவேந்தர் பாரதிதாசனும் இதே எண்ணவோட்டத்துடன் கருத்துகளை வெளிப்படுத்திக்கொண்டே இருந்தார்.

'அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கும் நன்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு!'

என்று செழிப்போடும், செம்மாந்த வளத்தோடும் திகழ்ந்த நம் தாயகம்,

'தேக்கும் பனையும் தென்னையும் இருக்கையில்
மூக்கு நுனி தரையில் முட்டக் குனிந்து
புகும் குடிசைகள் நகும்படி உள்ளன!'

என்ற நிலைக்குத் தள்ளப்பட்டதேன்?' என்று அடுக்கடுக்காக

வினாத் தொடுத்து இளைஞர்களின் சிந்தனையைக் கிளர்ந்தெழ வைத்தார்.

‘புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்!
பொது உடைமைக் கொள்கை
திசைஎட்டும் சேர்ப்போம்!
புனிதமோ டதை எங்கள் உயிரென்று காப்போம்! ’

என்று துந்துபி முழங்கினார் பாவேந்தர்.

‘எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? - இனிப்
புலிகள் நரிக்குப் புசிப் பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?’

என்று வீறோடும் விளக்கத்தோடும் புத்தம் புது உவமைகளால் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவச் சமச்சீர்ச் சமுதாயம் உருவாக முத்தான கவிதைகளை எழுதிக் கொண்டே இருந்தார் பாவேந்தர்.

அறிஞர் அண்ணா அவர்கள் 1967இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், ஏழை எளிய விவசாயிகள் பயிரிட்டு வந்த வானம் பார்த்த புன்செய் நிலங்களுக்கான நிலவரியை அடியோடு நீக்கினார்.

அரசாங்கத்தின் உதவி ஏதுமின்றி, மழையின் தயவால் காட்டைக் கழனியாக்கி ஓரளவு வயிற்றுக்காகப் பயிரிடும் ஏழை எளிய உழவனிடம், அவனை மேலும் பிழிந்து

வரியைப் பெறுதல் தவறு என்றுதான் இந்தப் புரட்சிச் சட்டத்தைப் பதவி ஏற்றவுடன் கொணர்ந்தார் அண்ணா.

இதைப் போன்ற பெரும் சீர்திருத்தங்களும் பெரும் மாற்றங்களும் தமிழ் மண்ணில் நிகழ்ந்து தமிழர்கள் மிக உயரிய நிலைக்கு வரவேண்டுமென்று கனவு கண்டவர் பாவேந்தர்.

'என்னரும் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னறுங் கலைஞா னத்தால்,
பராக்கிர மத்தால், அன்பால்,
உன்னத இமம லைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல்எந் நாளோ?'

என்று பல்வேறு வண்ணக் கனவுகளில் மிதந்த பாவேந்தரின் எண்ணங்களுக்கு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன் வடிவம் கொடுக்க முனைந்தவர் பேரறிஞர் அண்ணா.

சேலத்து இரும்புச் செல்வத்தையும் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தையும் பயன்படுத்தி, தமிழகம் தொழில் மயமாகி உலகின் பல நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யாதா என்று திட்டம் வகுத்தார் அண்ணா. சேது சமுத்திரத் திட்டம் போன்றவை நிறைவேறித் தமிழகம் பொருளியல் மேம்பாட்டைப் பெறாதா என்று திட்டமிட்டுத் தில்லியிடம் வலியுறுத்தினார் அவர்.

'சந்தைக் கடையோ நம் தாய் நாடு, இலட்சம்பேர்
சிந்தை வைத்தால் நம் தொழிலும் சிறப்படையும்
தோழர்களே!
வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெலாம்
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே!'

என்று எழுச்சிக் குரல் எழுப்பிய பாவேந்தரின் பாடல்வரிகள் உயிர்பெற்று எழுந்து வந்து சாதனைச் சரிதங்களாக அண்ணாவின் காலத்திலும், அதற்குப்பின் அவர் வழிவந்த கலைஞரின் காலத்திலும் தனி வரலாறு படைத்தன.

12. எழுத்தும் பேச்சும் ஏற்படுத்திய தாக்கங்கள்

புல்லையும் நிமிரவைத்து, புழுவுக்கும் வீரம் ஊட்டும் வண்ணம் வெல்லத் தமிழால் வெல்லும் தமிழால் பாவேந்தர் பாடிய எரிமலைக் குழம்பு வரிகள் தமிழர் உள்ளங்களை, கொதிப்புலைகளாக மாற்றின.

அதேபோல் அறிவுக் கதிர் வீச்சுடன் செறிவும் சிந்தனையாழமும் மிளிர, நாடு முழுதும் சுழன்றுவந்து அறிஞர் அண்ணா ஆற்றிய உரைகளும், இரவைப் பகலாக்கி எழுதிய தீச்சுடர் எழுத்துகளும் ஒரு புதிய எழுச்சியை இந்த மண்ணில் உருவாக்கிச் சமுதாய மாற்றத்திற்கு அடிகோலின.

அமிலம் நிரம்பிய அனல் கக்கும் பேனாவால் பாவேந்தர் இதோ இப்படி எழுதினார்:

'மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!

தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளி செய்!
நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!
....
....
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறிநின்று பாரடா எங்கும்!
எங்கும் பாரடா இப்புவி மக்களை!
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட்பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!'

இவை போன்ற நெருப்பு வரிகள் கனன்றெழுந்து பழமை இழிவுகளைச் சாம்பலாக்கிப் புது மறுமலர்ச்சிப் புரட்சியை இளைஞர் நெஞ்சில் உருவாக்கின.

அறிஞர் அண்ணா கூர்த்த மதியுடன் தமிழர்களைப் பார்த்துக் கேட்டார்: ''சிந்தியுங்கள்! தசரதன் வீட்டில் டெலிபோன் இருந்ததா? அவதார இராமன் வானொலி கேட்டானா? சிபி சினிமா பார்த்தானா? இவையெல்லாம் இன்று நாம் அனுபவிக்கும் விஞ்ஞான வித்தகத்தின் அறுவடைகள்! காலங் கெட்டுவிட்டதென்று கூறலாமா? பழமையே வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கலாமா?''

தமிழ் மண் எப்படி என்ன வடிவம் எடுத்தாக வேண்டும் என்பதை இதோ இந்தத் தகதகக்கும் அடிகளால் பாவேந்தர் பாடுகிறார் பாருங்கள்:

'வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!
விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர்நிறுத்தித் தூள்தூ ளாக்கும்
காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்!
கடல்போலச் செந்தமிழைப்
பெருக்கல் வேண்டும்!'

இவை நிகழ்ந்தால்தான் இடையில் பறிபோன தமிழரின் மானப் பொற்காலம் மீட்சிபெறும் என்று திட்ட வட்டமாக எண்ணினார் அப்புரட்சிப் பாவலர்.

நாடு தேடிப்போக வேண்டிய பீடு நிறைந்த பாதையை அறிஞர் அண்ணாவும் சூறாவளியாய்ச் சுழன்று வந்து இளம் மறவர் நெஞ்சில் பல்வேறு உதாரணங்களைக் காட்டிக் கல்வெட்டாகப் பதிய வைத்தார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், 21.09.1949 அன்று அண்ணா பேசினார்: "நன்றாகக் கவனித்தால் நாட்டில் இரண்டே இரண்டு புத்தகங்கள்தாம் அதிகம் விற்பனையாகின்றன. ஒன்று பஞ்சாங்கம், மற்றொன்று இரயில்வே கைடு! நாளெல்லாம் பஞ்சாங்கத்தைப் பார்த்து, வேளைக்கொரு கோவிலைச் சுற்றிக் கொண்டிருந்தால் தமிழன் முன்னேற முடியுமா? மேல்நாட்டார் கோள்களைச் சுற்றி வலம் வரும் வேளையில், நாம் மீண்டும் மீண்டும்

கோயில்களையே வலம் வருவதால் ஏற்றம் பெற்று விட்டோமா?''

அண்ணா இப்படி அடுக்கடுக்காக எடுத்துவைத்த வினாக்கள்தாம் அறிவுத் தீயைப் பரப்பி, மடமைக் குப்பை களை எரித்துச் சாம்பலாக்கின.

உறங்கிவிட்ட தமிழர்களை உலுக்கி எழுப்பின பாவேந்தரின் தீப்பொறிப் பாடல்கள்.

அவர் எரிமலைக் குழம்பைத் தேக்கிய பேனாவால் இப்படிப் பாடினார்:

'வந்தவர் வஞ்சகர்
தமிழால் செழித்தார்!
வாழ்வினில் உயர்ந்த பின்
தமிழையே பழித்தார்!'

இப்படிக் கொதிப்புணர்வு ஊட்டிய இவர் உரிய கழுவாயையும் கூறினார்:

'தூங்கிய துண்டு
தமிழர்கள் முன்பு -பகை
தூளாகுமன்றோ
எழுந்த பின்பு!'

என்றும்,

'அடக்கு முறை செய்திடல் முடியும் - கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு முடியும்?
ஒடுக்குமுறை காட்டுதல் முடியும் -உணர்
வொடுக்குதல் எவ்வாறு முடியும்?
திடுக்கிடச் செய்திடும் உன்னை - இத்
திராவிடர் எழுச்சியை மாற்றவா முடியும்?!'

அரிவாள் போன்ற வினாக்கள் ஆயிரமாயிரம் சிந்தனைப் புரட்சியை விதைத்தன.

வைதீகபுரியினரின் மாயக் கோட்டையில் சிக்கி, மதமயக் கத்திலே வீழ்ந்து கிடந்த தமிழனை எழுப்பிவிட அறிஞர் அண்ணா எப்படியெல்லாம் சிந்தனை வினா அம்பால் துளைத்தெடுக்கிறார், பாருங்கள்:

'சிவலிங்கம் சாட்சி சொல்வது, எலும்பு பெண்ணுரு வானது, பனை ஓலை வெள்ளத்தில் எதிர்நீச்சலிட்டது, கருங்கல் பாறை மிதப்பது, நரி பரியாவது, அறுத்துக் கறியாகச் சமைக்கப்பட்ட பிள்ளை அழைத்ததும் ஆருயிர் பெற்று வருவது, பன்றியும் அன்னமும் கடவுளின் அடியை யும் முடியையும் தேடுவது, ஒருவர் முதுகில் பிரம்பால் அடித்ததும் அனைவர் முதுகிலும் அடிவிழுவது, முதலை பற்றிய யானை கதறினால் முகுந்தன் உடனே தோன்றுவது என்பவையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் நிகழக் கூடியதா? நிகழ்ந்திருக்கத்தான் முடியுமா?' என்று கேட்டு, புராணக் குப்பைகளில் மூழ்கி நேரத்தை வீணாக்காமல் அறிவு யுகத்தைப் புரிந்து கொண்டு விஞ்ஞான வேகத்தோடு சிந்தனையைச் செலுத்தி முன்னேற வாருங்கள் என்று அழைத்தார் அண்ணா.

அதனால்தான் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற வுடன், அரசாங்க அலுவலகங்களில் குடியிருந்த பல்வேறு கடவுளரின் படங்களையெல்லாம் அகற்றி, அறிவுத் திரு வுருவமான வள்ளுவப் பேராசானின் உருவப் படங்களையே மாட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்.

13. புது யுகத்தின் பூபாள விடியல்கள்

சனாதனச் சகதியிலும், அறியாமைச் சேற்றிலும் மூழ்கிக் கிடந்த தமிழனை மீட்டு அறிவுலகம் நோக்கி ஆற்றுப்படுத்திய பெருமை பாவேந்தருக்கும் அண்ணா வுக்கும் உரியது.

'சாதி மத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை
யுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்;
பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர்
உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத் திற்குப்
பேசுசுய மரியாதை உலகுஎனப்
பேர் வைப்போம்!
ஈதேகாண் சமூகமே, யாம் சொன்ன வழியில்
ஏறு நீ! ஏறு நீ! ஏறு நீ! ஏறே!'

என்று பாடி எப்படிப்பட்ட பகுத்தறிவொளி திகழும் புத்துல கம் படைக்க வேண்டும் என்று பாவேந்தர் பாடுபட்டாரோ, அந்த இலட்சியத்திற்குத் தன் ஆவேச எழுத்தால் அடித்தள மிட்டார் அறிஞர் அண்ணா!

அவர் இதோ இப்படித் தன் திராவிடநாடு 26.09.1943 இதழில் கூரிய சிந்தனையாழக் கட்டுரை வடித்தார்:

'ஆரியம் திராவிட நாகரிகத்தை எவ்வளவு பாழ்படுத் திற்று என்ற ஆராய்ச்சிதான் பின்னர் வரலாயிற்று. இயற்கை இன்பத்தை நுகர்ந்து, வீரத்தை வணங்கி, அறத்தை ஓம்பி வாழ்ந்த திராவிடரிடையே, கட்டுக்கதைகளைப் புகுத்திக் கோழைத்தனத்தை வளர்த் தவர் ஆரியரே என்பதும், ஆரியர் கோட்பாடுகள் புகாவண்ணம் திராவிடர் அறிவுத் துறை யிலேயே ஆர்வம் கொண்டிருந்தார்களே அல்லாமல், கண் ணுக்குப் புலனாகாததும், கருத்துக்கு எட்டாததும், வாதத் திற்குக் கட்டுப்படாததும், பிரத்யட்சம் பிரமாணத்திற்கு ஒத்துவராததுமான கொள்கைகளிலே மூழ்கிக் கிடக்க வில்லை என்பதும் பிறகு ஆராய்ச்சியாளர்களால் விளக்கப் பட்டது. ஆனால், இவை யாவும் பிரேத விசாரணையாகக் கருதப்பட்டதே அல்லாமல் வீழ்ச்சியுற்ற இனத்திற்குத் திருப்பள்ளி எழுச்சியாக உபயோகிக்கப்படவில்லை!'

பண்பாட்டுப் படையெடுப்பால் தமிழ்மண் பாழ் பட்டுப் போனதை எத்தனை எத்தனை நயத்தோடும் நளினத் தோடும் சுட்டிக் காட்டினார் அண்ணா?

'மனுவின் மொழி அறமான தொருநாள் - அதை
மாற்றும் நாளே தமிழர் திருநாள்!

சினம், அவா, சாதி, மதம், புலை நாறும் யாகம்
தீர்ப்பதே இந்நாளில் நல்லறம் ஆகும்!'

என்று வைரச் சொல் வரிகளால் தம் அவாவைக் கொட்டினார் பாவேந்தர்.

'அள்ளும் வறுமை அகற்றாமல் அம்புவிக்குக்
கொள்ளை நோய் போல் மதத்தைக்
கூட்டியழும் வைதிகத்தைப்
போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்
வேரோடு பேர்க்கவந்த வீரா, இள வீரா!'

என்று பிள்ளைக் கனியமுதை அழைத்துப் பாடும் பாவேந்தர்,

அந்தத் தமிழ்ப் பிள்ளை எப்படிப்பட்ட இலட்சியபுரி நோக்கி நடைபோட வேண்டும் என்று திண்ணமுடன் அத்திக்கைச் சுட்டுகின்றார்.

இதே கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் வினாக் கணைகளை வைதீகபுரியினரின் திசையில் செலுத்தி அற்புத மான வகையில் சிந்திக்க வைத்தார்.

அண்ணா கேட்டார்: 'ஆண்டவன் இருந்தால் இருக் கட்டுமே! அவருக்கு ஆறு கால பூசைகள் ஏன்? அந்தாதிகள் பாடுவதேன்? உலாவும் உற்சவமும் ஏன்? ஊர்மக்கள் பணத்தை ஊதாரித்தனமாகச் செலவிடுவானேன்? இவை களையெல்லாம் செய்யாவிட்டால் ஆண்டவன் என்ன அழிந்தா போய்விடுவான்?'

இப்படி அடுக்கடுக்காக அவர் தொடுத்த கேள்விகள் இளைஞர்களிடையே பகுத்தறிவுணர்வைத் தூண்டிப் புத்துலகத்திற்கு அழைத்துச் சென்றன.

பாவேந்தரோ பல்வேறு பாடல் வரிகளால் அறிவியக்கக் கருத்துகளை வாலிபர்கள் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் தீட்டி, எழுச்சித் தீயை மூட்டினார். பாவேந்தர் பாடினார்:

'மக்கள் நலத்துக்கு மதமா? - அன்றி
மதத்தின் நலத்திற்கு மக்களா? சொல்வீர்!
(மக்கள் நலத்திற்கு)

திக்கெட்டும் உள்ளவர் யாரும் - ஒன்று
சேராது செய்வதே மதமாகுமானால்
பொய்க்கட்டு நீங்குதல் வேண்டும்- அப்
பொல்லாங்கில் எல்லோரும் நீங்குதல் வேண்டும்!
எக்கட்சி எம்மதத் தாரும் - இங்
கெல்லோரும் உறவினர் என்றெண்ண வேண்டும்!'

சமய வெறியர்கள் தூண்டிய கலவரங்களும், இரத்தக் களரிகளும் ஓய, புரட்சிக் கவிஞரின் இத்தகைய பாடல் வரிகள் பெரும் தொண்டாற்றின.

அன்றைய மறக்குலத் தமிழரிடம் காணாத சடங்குகளும் மூட வழிபாடுகளும் ஆரியரின் பண்பாட்டுப் படையெடுப்பால் பின்னரே தலைதூக்கின என்பதை இதோ அண்ணா இப்படிப்பட்ட கேள்விகளாலேயே புலப்படுத்துகிறார்: 'புறநானூறு, பதிற்றுப்பத்து, கலிங்கத்துப்பரணி போன்ற தமிழ்ப் பனுவல்களில், நம் மறத்தமிழர் போருக்குக்

கிளம்பும்போது, எந்தத் தமிழ் மன்னனாவது அசுவமேத யாகம் செய்தான் என்றோ, பரமசிவனிடம் தவம் செய்து 'பாசுபதாஸ்திரம்' பெற்றான் என்றோ எங்கேயாவது பாடல்கள் உண்டா? எதிரிகளுடன் மோதும்போது, வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், நாகாஸ்திரம், அக்கினியாஸ்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர் என்றோ பாடல் வரிகள் உண்டா?'

இப்படிப்பட்ட கேள்விகள் விளைவித்த வேள்விகளின் அறுவடைதான் நம் பகுத்தறிவியக்கத்தின் மாபெரும் வளர்ச்சி.

நம் அண்ணா இதோ இப்படி மேலும் சில சிந்தனையாழக் கருத்துகளைக் கூறி எண்ணவோட்டத்தைத் தூண்டுகிறார்:

'தமிழா! அயல் நாட்டான் அச்சு எந்திரம் கண்டு பிடித்துத் தந்தான்; நீயோ அதில் தவறாமல் ஆண்டுக்காண்டு பஞ்சாங்கம் அச்சடிக்கிறாய்! மேல்நாட்டான் இரயில் வண்டியைக் கண்டு பிடித்துத் தந்தான். நீயோ அதில் ஏறிப் பழனிக்கும் திருப்பதிக்கும் சென்று மொட்டையடித்துத் திரும்புகிறாய். அயல்நாட்டான் வானொலி கண்டுபிடித்து அறிமுகப்படுத்தினான். ஆனால் நீயோ அதில் பஜனைக் கச்சேரி செய்து கொண்டிருக்கிறாய்! இத்தனைக் கடவுளரின் கடாட்சத்தால் நீ என்ன கண்டு பிடித்தாய்?'

இப்படி அந்தக் காஞ்சிக் கரிபால்டி ஏற்றிய சிந்தனைத் தீ பரவி மடஇழிவைப் பொசுக்கிச் சாம்பலாக்கியது.

'கடவுள் வெறி, சமய வெறி கன்னல் நிகர்
தமிழுக்கு நோய், நோய், நோயே!
இடைவந்த சாதிஎனும் இடர் ஒழிந்தால் ஆள்பவள்
நம் தாய், தாய், தாயே!'

என்ற பாவேந்தரின் தன்னேரிலாக் கவிதை முழக்கம் எங்கும் எதிரொலித்து மறுமலர்ச்சிப் புதுயுகம் புலரப் பூபாள மாகியது.

14. பொதுவுடைமை புகட்டிய புதுவகைச் சிற்பிகள்

'பொத்தல் இலைக் கலமானார் ஏழை மக்கள்;
புனல் நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வர்!'

என்று கொதிப்புணர்வுடன் இந்தச் சமுதாயத்தின் மேடு பள்ளக் கேடுகளைச் சாடினார் பாவேந்தர்.

இதேபோல் அண்ணா சிந்தனைச் செறிவுடன் பேசினார்: 'ஒரு சமுதாயத்தில் 'உடையான், இல்லான்' எனும் இருவேறு வர்க்கங்கள் உள்ளவரை வறுமைத் தேள் ஆட்டம் போட்டுக் கொட்டிக் கொண்டேதான் இருக்கும்!'

மேட்டூர்களும் பள்ளத்தூர்களும் சமப்படுத்தப்பட்டு, மேன்மைமிகு சமர்தர்மநல்லூர் தோன்ற வேண்டும் என்பதே இவர்களின் பேரவா.

'ஏழைகள் செய்யும் ஏராளமான குற்றங்களுக்கு அடிப் படைக் காரணம் அவர்களின் ஏழ்மையே! எனவே தண்டிக்கப் பட வேண்டியது ஆள்களை யன்று; சமுதாயத்தில் உள்ள சீர்கேடான பொருளாதார பேத அமைப்பு முறையைத்தான்!'

இப்படி ஆணித்தரமாகக் கூறிய அறிஞர் அண்ணா, தன் நாடகங்களிலும் திரைப்படங்களிலும் பொது வுடைமைப் பூங்கா செழித்தோங்கிட ஈடிலாக் கருத்துகளை அள்ளி அள்ளி வழங்கினார்.

பாவேந்தரோ, 'உலகப்பன் பாட்டு' என்றே ஓர் ஒப்பரிய தனிச் சிறப்புப் பாடலால் எழுச்சியோடும் ஏற்றத் தோடும் தம் பொதுவுடைமைக் கொள்கையை அழுத்தந் திருத்தமாகத் தமிழர் நெஞ்சில் கல்வெட்டாக்கினார்:

'பகுத்தறிவு மன்றத்தில் 'உலகம்' என்ற
பழைய முதலாளியினை நிற்க வைத்து
மிகுத்திருந்த உன் நன்செய், புன்செய் யாவும்
வெகுகாலத்தின் முன்னே மக்கள் யாரும்
சுகித்திருக்கக் குத்தகைக்கு விட்ட துண்டோ?
'சொல்' என்றேன்; உலகப்பன்
'ஆம்ஆம்' என்றான்!
....
குத்தகைதா ரர்தமக்குக் குறித்த எல்லை
குறித்தபடி உள்ளதுவா என்று கேட்டேன்;
கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தை யெல்லாம்
கொத்திக் கொண்டேப்பமிட்டு வந்த தாலே
கூலி மக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்?''
....

அதிகரித்த தொகை தொகையாய்ச் செல்வ மெல்லாம்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம்போய் ஏறிக் கொண்டு,
சதிராடு தேவடியாள் போல் ஆடிற்று!
தரித்திரரோ புழுப்போலே துடிக்கின் றார்கள்!
இது இந்நாள் நிலையென்றான் உலகப் பன்தான்!
'இந்நிலையில் இருப்பதனால் உலகப்பா நீ!
புதுக்கணக்குப் போட்டுவிடு, பொருளை யெல்லாம்
பொதுவாக எல்லோர்க்கும் குத்தகைசெய்!'

என்று வலியுறுத்திய பாவேந்தர், அப்படிச் செய்யாவிட்டால் என்ன நேரும் என்பதை உலகப்பனிடம் தனக்கே உரிய எடுப்பான போர்ப்படை நடைபோடும் பரணி வரிகளால் எச்சரிக்கின்றார், இதோ இப்படி:

ஆடுகின்றாய் உலகப்பா! யோசித் துப்பார்!
ஆர்ப்பாட்டக் காரர் இதை ஒப்பாரப்பா!
தேடப்பா ஒரு வழியை என்று சொன்னேன்;
செகத்தப்பன் யோசித்துச் சித்தம் சோர்ந்தான்!
ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகி விட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப் பாநீ!'

இந்த நுட்பமான அற்புத ஆவேசப் பாடல், இல்லாதோர் வெகுண்டெழுந்தால், எப்படிப்பட்ட புரட்சிப் பூகம்பம் வெடிக்கும் என்பதை ஈடிலா வகையில் விளக்கவில்லையா?

இந்த ஒப்பரிய 'உலகப்பன் பாட்டு' பாடலைப் படித்து விட்ட, தஞ்சை பழையனூரைச் சேர்ந்த இலக்கியச்

சுவைஞர் திரு. இராசகோபாலன்தான் உடனே புறப்பட்டுப் புதுவைமண் வந்து, பாவேந்தரின் முதல் தாசராக மாறி, தன் பெயரையே 'சுப்பு ரத்தினதாசன்' என்று மாற்றி அமைத்துக் கொண்டு 'சுரதா' எனப் பெருங்கவிஞர் ஆனார்.

இயற்கையிலேயே, பொதுவுடைமைக் கோட்பாடு மட்டுமே பூவுலகைச் சமதர்ம நற்பாதையில் நடக்கச் செய்து, பூசலும், போராட்டமும், களரிகளும், கலவரங்களும் இல்லாத புத்துலகைப் படைக்க முடியும் என்று அழுத்தத் துடன் நம்பிய அறிஞர் அண்ணா அவர்கள் தாம் ஆட்சிச் செங்கோல் ஏற்றவுடன் அக்கொள்கையை நிலைநிறுத்தும் அவாவுடன் செயல்படத் தொடங்கினார்.

1967இல் அண்ணா முதல்வரானவுடன், அப்போது கும்முடிப்பூண்டிச் சட்டமன்ற உறுப்பினனாகத் தேர்ந்தெடுக் கப்பட்டிருந்த நான், எங்கள் பகுதியில் ஏழை எளியோர் மிகுந்த அந்த ஒரு குக்கிராமத்தில், ஒரு பள்ளிக் கட்டடம் கட்டி, அதன் திறப்பு விழாவிற்கு முதல்வர் அண்ணாவை அழைத்திருந்தேன்.

அன்று மாலைப் பொழுதில் அவருடைய காரில் பயணம் செய்து அந்தச் சிற்றூரை அடைந்தோம். வழியெல் லாம் கிராமச் சூழ்நிலைகளைக் கூர்ந்து கவனித்து வந்தார் அண்ணா.

பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்து அண்ணா பேசினார்: ''பெரியோர்களே! என் எதிரே அமர்ந்திருக்கும் இந்த ஏழை எளியவர்களின் குடும்ப மழலைகளை இந்த மலர்ந்த முகத்துடன் காண்பது எனக்கு மட்டிலா மகிழ்வூட்டு

கிறது. ஆனால் நான் முழுமையான மகிழ்ச்சி அடைய முடியவில்லை. ஏனெனில் வேழவேந்தனுடன் நான் பேசிக் கொண்டே வந்தபோது, வழியில் இருந்த ஏரியில் இதே வயது இளம் சிறார் சிலர் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். சில சிறுவர் வீதியில் இருந்த சைக்கிள் பழுது பார்க்கும் கடையில் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். மேலும், சில சிறுவர் மளிகைக் கடையிலே பொட்டலம் மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாம் இந்தப் பள்ளியில் இந்த மழலைச் சிறார்களுடன் வந்து அமர்ந்து படிக்க இயலவில்லையே என்று நினைத்து ஆயாசப்பட்டேன். ஏன்? சில பெற்றோர் தம் பிள்ளைகள் தூண்டில் தூக்கினால், மளிகைக்கடையில் பணி செய்தால் அவர்கள் மூலம் ஒரு வருவாய் கிடைக்கும் என்று அங்கே அனுப்புகிறார்கள். நான் மட்டும் இந்த நாட்டின் சர்வாதி காரியாக இருந்தால் 5 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப் பட்ட சிறார் எல்லாம் கட்டாயமாகப் பள்ளியில்தான் இருக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவருவேன். 'ஐயோ என் மகன் சைக்கிள் கடையில் சென்று பழுதுபார்த்தால் கொஞ்ச ரூபாய் வருமானம் வருமே' என்று சொல்கின்ற பெற்றோ ருக்கு அந்தத் தொகையை இலஞ்சமாகத் தந்தேனும் அவர் களைப் பள்ளிக்குக் கொண்டு வருவேன்! அப்போதுதான் உண்மையான சமதருமச் சமுதாயம் பூத்துக் குலுங்க முடியும்''.

இந்த உரை எங்களுக்கு மெய்சிலிர்ப்பு ஊட்டியது. ஆனால் காலக் கழுகு அவர் பதவியேற்ற இரண்டு ஆண்டுக் குள், தாளவொண்ணா நோயில் அவரை வீழ்த்தி இந்த மண்ணிலிருந்தே பறித்துச் சென்று விட்டது.

அதேபோல் 'வையம் வாழ வாழ்' என்று தன் 'புதிய ஆத்திசூடி'யில் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திய பாவேந்தர், இதோ இப்படிப்பட்ட வரிகளால் தன் அனல் மூச்சை வெளிப்படுத்துகிறார்:

'அதிகாலை தொடங்கிநாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பதல்லால்,
இதுவரையில் பொது நலத்திற் கென்ன செய்தோம்?'

பாவேந்தரின் இந்த விரக்தி நிறைந்த வினாவிற்கு நாம் அளிக்கும் நிறைவான பதிலில்தான் நாட்டின் பொது வுடைமைக் கோட்பாட்டு மேம்பாடே அடங்கியுள்ளது.

15. கலையுலகில் கொடிநாட்டிய வித்தகர்கள்

'நாட்டின் அகத்தை நாட்டமுடன், துல்லியமாக வெளிப் படுத்துவதே நாடகம்' என்றார் அறிஞர் அண்ணா.

பாவேந்தரோ தனக்கே 'புரட்சிக்கவிஞர்' என்று பட்டம் தேடித்தந்த 'பில்கணீயம்' எனும் வடமொழி நூலைத் தழுவிய 'புரட்சிக்கவி' எனப்படும் அற்புத நாடகக் காவியத்தைத் தீட்டித் தமிழர் நெஞ்சில் நீங்காத இடத்திற்கு உயர்ந்தார்.

அதில் இடம்பெற்ற வருணனைப் பாடல்கள் படிப் போரைச் சொக்க வைத்தன:

'நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்தே
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்
கோல முழுதும் காட்டி விட்டால், காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்த தனிப் பூவோ நீதான்!

சொக்க வெள்ளிப் பாற்குடமோ?
அமுத ஊற்றோ?
காலையெழும் இளம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ?'

அடடா! கற்கண்டுச் சொற்களை அள்ளித் தெளித்துப் பாவேந்தர் பாடிய இவை போன்ற மயக்கும் வரிகள் ஆயிரமாயிரம் தமிழிளைஞர்களை அவர்பால் கட்டிப் போட்டன.

'காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ?
கறைச் சேற்றால் தாமரையின்
வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்ப துண்டோ?'

என்ற உவமையழகு மண்டிய வினாக்கள் படித்தோர் நெஞ்சைக் கொள்ளை யடித்தன.

'கற்பிளந்து, மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கிய மூச் செவரின் மூச்சு?
....
பலியாகிக் கால்கைகள் உடல்கள் சிந்தும்
பச்சைரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடைய தாகத்
தந்த தெவர்? அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின் றார்கள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோன்
புலிவேடம் போடுகிறான்! பெதுமக் கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின் றானா?'

சமுதாயத்தின் மேடுபள்ளக் கேடுபாடுகளை எரிமலைக் குழம்பைத் தம் எழுதுகோலில் ஊற்றி இப்படித் தீக்கனல் வரிகளால் வெளிப்படுத்தினார், இந்நாடகக் காப்பியம் மூலம் நம் பாவேந்தர்.

'தமிழச்சியின் கத்தி' எனும் நாடகக் காப்பியத்தில் 'தமிழன்' ஏன் நலிந்து நாதியற்றுப் போனான்? என்பதை இதோ இந்த உருக்கமான தொடர்களால் பாவேந்தர் கூறித் தூங்கிய தமிழனை எழுப்பி விடுகின்றார்:

'விருந்தினரை வரவேற்பான் தமிழன்; அந்த
விருந்தினர்க்கு நலம்செய்வான் தமிழன்;
சாவா
மருந்தெனினும் வந்தவர்கள் பசித்தி ருக்க
வாயிலிடான் தமிழன்; இது பழமை தொட்டே
இருந்துவரும் பண்பாகும் எனினும், வந்தோன்
எவன் அவனை ஏன்நம்ப வேண்டும்?' என்று
துரும்பேனும் நினையாத தாலே இந்நாள்
தூய்தமிழன் துயருற்றான்!
வந்தோர் வாழ்ந்தார்!'

பேரறிஞர் அண்ணாவோ தம் எழுதுகோலால் எழுச்சி மிகு உரையாடல்கள் நிறைந்த நாடகங்கள் தீட்டி, விழிப் புணர்ச்சி யூட்டித் தமிழரின் சிந்தனையைத் தூண்டினார்.

அண்ணாவின் 'சந்திரோதயம்', 'சந்திரமோகன்', 'நீதி தேவன் மயக்கம்', 'வேலைக்காரி', 'ஓர் இரவு', 'நல்ல தம்பி' 'சொர்க்கவாசல்' போன்ற அற்புத நாடகங்கள் திராவிட இயக்க இலட்சியங்களை மக்கள் மனத்தில் கல்வெட்டாய்ச் செதுக்கின.

'நாடகம் என்பது நள்ளிராச் சத்தமல்ல; நடையாலும் விழியாலும் மொழியாலும் அரைத் தூக்கத்தில் இருப்பவர்

களுக்கு ஆனந்தம் தரும் ஆடல் பாடல் அல்ல. நாடகம் நாட்டுக்கோர் நல்லாசானாய் விளங்குகிறது. நாட்டின் நலிவு நீங்கி, நல்வாழ்வு கிடைத்திட வழி காட்டுவதுதான் நாடகம்' என்றார் அந்த வித்தகர் அண்ணா.

'சந்திரோதயம்' நாடகம் 1943 இல் பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் அரங்கேற்றப்பட்டது.

இந் நாடகம் மூலம் தீண்டாமை ஒழிப்பு, விதவையர் மறுமணம், பார்ப்பனீயச் சூழ்ச்சி, மேட்டுக் குடியினரின் ஆதிக்கத் திமிர், மடாதிபதிகளின் போலி வேடம் ஆகிய வற்றை நகைச்சுவையும் தமிழ்ச்சுவையும் மணக்கத் தீட்டிக் கருத்து விருந்து பரிமாறினார் அண்ணா.

அண்ணா எழுதிய முதல் நாடகம் 'சந்திரோதய'த்தைக் கண்டு மலைத்துப்போன நாடகமேதை தி.க. சண்முகம், 'இது புதுமையான கதையமைப்பால், கருத்தூட்டும் திறத்தால், நடிப்புச் சிறப்பால் ஒரு திருப்பு மையமாகத் திகழ்கிறது' என்று புகழாரம் சூட்டினார்.

வருணாசிரமத்தின் நச்சுக் கொடுக்கால், வாகை சூடிய சிவாஜி மன்னனே அலைக்கழிக்கப்படுவதைச் 'சந்திர மோகன்' எனும் வரலாற்று நாடகத்தால் நாடு முழுதும் பரப்பினார் அண்ணா.

அண்ணாவின் 'வேலைக்காரி', 'ஓர் இரவு', 'நல்ல தம்பி', 'காதல் ஜோதி' போன்ற நாடகங்கள் சமுதாயக் கண்ணாடிகளாக விளங்கி ஏற்றத் தாழ்வால், சாதி மடமை யால், ஆதிக்கபுரியினரின் ஆணவப் போக்கால் தாழ்ந்து கிடக்கும் தமிழ்ச் சமுதாயம் மறுமலர்ச்சி கண்டு முன்னேறும் வழிகளை உணர்ச்சிமயமாக எடுத்துக் கூறின.

காகபட்டர், கங்கு பட்டர் போன்ற பாத்திரங்களில் அண்ணாவே சிறப்புடன் நடித்துப் பல நாடகங்களுக்கு உயிர்ப்பூட்டினார்.

அண்ணாவின் நாடகத்தைக் கண்ட பேராசிரியர் கல்கியே, 'இதோ ஓர் இப்சன், இதோ ஓர் பெர்னாட்ஷா' என்று அண்ணாவை வானளாவப் பாராட்டினார்.

திராவிட இயக்கக் கோட்பாடுகளைத் தீவிரமாகப் பரப்ப, பாவேந்தர் பாரதிதாசன் பல்வேறு கொள்கை விளக்க நாடகங்கள் தீட்டினார்.

'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' எனும் நாடகம் வாயிலாக ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பால் தமிழர் சீரழிந்ததை அழுத்தமுடன் கூறினார்.

'இன்றும் தமிழரை இராக்கதர் எனச் சிலர்
பன்னுகின்றனர் என்பது பொய்யா?
இவைகளை நாம் எண்ணிடல் வேண்டும்!'

என்ற அவருடைய பாடல் வரிகளுக்குச் சரியான விளக்கங்களை அளிப்பது தான் அந்த நாடகம்.

பெண்ணியம் மேம்படப் பாவேந்தர் தீட்டியவை 'படித்த பெண்கள்' 'குடும்ப விளக்கும் குண்டுக் கல்லும்' போன்ற சமுதாய சீர்திருத்த நாடகங்கள். பாவேந்தர் எழுதிய 'சௌமியன்' 'ரஸ்புடீன்' போன்ற நாடகங்கள் மன்னராட்சிக் கொடுங்கோன்மையையும் மக்களாட்சியின் மகத்துவத்தையும் துல்லியமாக விளக்கின.

'கற்கண்டு', 'கழைக்கூத்தியின் காதல்', 'பொறுமை கடலினும் பெரிது', 'அமைதி', 'நல்ல தீர்ப்பு', 'மூளை வைத்தியம்' போன்ற வாழ்க்கை மேம்பாட்டு நாடகங்கள்

பல்வேறு மறுமலர்ச்சிக் கருத்துகளால் தமிழரின் நெஞ்சை மிகவும் ஈர்த்தன.

ஏன்? பாவேந்தருக்கு மிகச் சீரிய 'சாகித்திய அகாதமி'ப் பரிசை ஈட்டித் தந்ததே 'பிசிராந்தையார்' எனும் இலக்கிய எழில்காட்டும் நாடகமே.

ஆக, பாவேந்தரும் அறிஞர் அண்ணாவும் நள்ளிரா நாடக மேடைகளின் மூலமாகவும் இந்த மண்ணில் பகுத்தறிவியக்கப் புரட்சி மலர்ந்திட இரவைப் பகலாக்கிப் பாடுபட்டார்கள். அவற் றின் அறுவடைகளை இப்போது நாம் சுவைத்துக் கொண்டிருக்கின்றோம்.

16. ஏடுகளால் பீடு சேர்த்தோர்

‘அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப்பெண் ணே! உன்
நலம்காணார் ஞாலம் காணார்!’

என்று இந்த மண்ணின் மேல் இதழ்ப் பெண்ணின் ஆட்சியால் ஏற்படும் நலங்களையும் வளங்களையும் மாட்சியையும் பண்பாட்டு மீட்சியையும் பற்றிப் பாடிய பாவேந்தர், தம் வாழ்நாளில் கற்பனை செய்த படைப்புகளையெல்லாம் இதழ்களின் வாயிலாகத்தான் விருந்து வைத்தார்.

1930ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாளே அவர் ‘புதுவை முரசு’ ஏட்டின் பொறுப்பாசிரியராகப் பொறுப் பேற்றுக் கருத்துச் சுவையைப் பரிமாறத் தொடங்கினார்.

பின்னர் 1935இல், இந்த நாட்டில் முதன்முதலாகக் கவிதைகளை மட்டுமே வெளியிடும் செம்மாந்த இலட்சியத் துடன், ‘ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம்’ எனும் ஏடு தொடங்கப்பட்டபோது அதன் பொறுப்பாசிரியரானார். இந்த ஏட்டின் அன்றைய விலை நான்கணா மட்டுமே.

1946இல் ‘முல்லை’ இதழைத் தொடங்கி, தம் வெல்லத் தமிழால், வெல்லும் தமிழால் தமிழ் நெஞ்சங்களை இன்ப வெள்ளத்தில் மூழ்கடித்தார்.

29.07.1946 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வாராது வந்த இந்தப் பாட்டரசர்க்கு ரூ. 25,000 பொற்கிழி வழங்கிட அந்த மகிழ்ச்சியையே மூலதனமாக வைத்து, பாவேந்தர் 1946 டிசம்பரில் ‘குயில்’ ஏட்டைத் தொடங்கினார்.

‘தூங்கும் தமிழர் சுருக்கென விழிக்க
ஈங்குக் கவிஞர் எண்ணிலர் தேவை’

என்ற பரந்த இமய நெஞ்சோடு ஏராளமான கவிஞர்களின் படைப்பு களுக்கு இடமளித்த ‘குயில்’, பல சோதனைகட் கிடையே தொடர்ந்து வெளிவராமல் தடைபட்டுத் தடை பட்டு வெளிவந்தது.

சிந்தனையாழத்துடன் பாவேந்தர் அவ்வப்போது

குயிலில் தீட்டிய கவிதைகள் செந்தமிழர் நெஞ்சங்களை யெல்லாம் ஈர்த்து அறிவுப் புரட்சியை உருவாக்கின.

*01.06.1958*இல் வெளியான இரண்டாம் பிறப்புக் குயிலின் முதல் பக்கத்தில் வெளியான முத்திரைக் கவிதை இது.

'தமிழ் நிலத்தில் தமிழான பயிர் விளைச்சல் குறைவு;
தமிழ் நிலத்தில் அயல் மொழியாம் களை
விளைச்சல் மிகுதி!
தமிழ் நிலத்தில் தமிழ்க் கொள்கை எனும்
விளைச்சல் குறைவு;
தமிழ் நிலத்தில் அயற் கொள்கைக் களை
விளைச்சல் மிகுதி!'

இப்படித் தமிழ் மண்ணில் மண்டி இருந்த இழிநிலை களை, கொதிப்புணர்வுடன் பாடிக் களைகளைக் களைய முற்பட்டார் பாவேந்தர்.

சென்னைக்குக் குடிபெயர்ந்த பாவேந்தர் *15.04.1962* முதல் மீண்டும் குயிலைப் பறக்க விட்டார். அப்போது வந்த இதழில் இந்த எளியவனின் பாடல்களையும் வெளியிட்டு ஊக்க உரமூட்டிய அந்தப் பாட்டரசரின் மழை நெஞ்சை இன்றும் நினைந்து நெகிழ்ந்து போகிறேன் நான்.

படிப்பதையும் படைப்பதையும் மட்டுமே தன்னுடைய உயிர் மூச்சாகக் கொண்ட பேரறிஞர் அண்ணா முதலில் 'பாலபாரதி', 'நவயுகம்' போன்ற இதழ்களின்

ஆசிரியர் பொறுப்பை வகித்தார் எனினும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் ஈரோட்டுக் குருகுலத்தில் இணைந்து, ‘விடுதலை’, ‘குடியரசு’ போன்ற இதழ்களின் துணை ஆசிரியராக அவர் வடித்த எழுத்தோவியங்கள் வீரிய உருவெடுத்துத் தமிழ் இளைஞர் பட்டாளத்தையே அவர் பக்கம் திருப்பின.

1942ஆம் ஆண்டு மார்ச்சு 8ஆம் நாள் அன்றுதான், எழுத்துப் புரட்சியினால் ஒரு புது விழிப்புணர்ச்சியை ஏற் படுத்திய ‘திராவிடநாடு’ இதழை அண்ணா தொடங்கினார்.

முதல் இதழ் முகப்பிலேயே அன்றைய விடி வெள்ளிப் பாவலரான பாவேந்தரின் புகழ் பெற்ற ‘தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’ என்ற எழிலார்ந்த பாடல் வரிகளை அழகுடன் வெளியிட்டு மகிழ்ந்தார் அண்ணா.

‘திராவிட நாடு’ இதழ் என்று வரும் என்று நம் இளை ஞர்கள் ஏங்கிப் படித்தனர். அண்ணாவின் எதுகையும் மோனையும் இழைந்தோடிய ஈடிலா அழகு நடையும், உலக அரசியல் நடப்பு களை நளினமுடன் அண்ணா விருந்தாக்கிய பாங்கும், அன்றாட நாட்டு நிலைமைகளையும், சமுதாயச் சீர்திருத்தங்களையும் அவருக்கே உரிய வகையில் நயமுடன் அளித்த வண்ணமும் ஒரு புதிய வேட்கையைத் திருவிடத்து வாலிபர்களிடம் ஏற்படுத்தின.

அற்புதமான கருத்துப் பெட்டகமாகத் திகழ்ந்த திராவிட நாட்டில் ‘தம்பிக்கு’ என்று இதமுடன் அழைத்து

அறிஞர் அண்ணா தீட்டிய கற்கண்டுக் கடிதங்களே பெரும் அரசியல் மாற்றத்திற்கு வழிகோலின.

இரவைப் பகலாக்கி, எல்லோரும் உறங்குகின்ற நேரத்தில் உறங்காத விழிகளுடன் அண்ணா இந்த இதழில் தீட்டிய கருத்தோவியங்களே 'கலிங்க ராணி', 'ரங்கோன் ராதா', 'குமாஸ்தாவின் பெண்', 'பார்வதி பி.ஏ.' போன்றவை.

பாசத்தோடும் பரிவோடும் 'தம்பி!' என்று அழைத்து இரவெல்லாம் கண் அயராமல் எழுதிய அந்தச் சுவைத் தமிழ் மடலில், அவர் இதோ இப்படி எழுதினார்: 'அருமைத் தம்பி, அதோ வெள்ளி முளைத்து விட்டது; கீழ்வானம் வெளுத்து விட்டது; கோழி கூவும் ஒலி கேட்கிறது. என் துணைவியார் இராணி எழுந்து, வாசல் தெளித்துக் கோலம் போடப் போகிறாள். இனி நான் போய்க் கொஞ்ச நேரம் கண்ணுறங் கட்டுமா?'

இப்படித் தூங்குவதற்கும் தம்பியிடம் அனுமதி கேட்டு ஓய்வின்றி உழைத்த அந்தச் சகாப்தத் தலைவரின் ஒப்பரிய உழைப்பால் தமிழ் மண்ணில் மறுமலர்ச்சிப் புரட்சி தழைத்தது.

இந்தி எதிர்ப்புப் போரில் 'திராவிடநாடு' ஏற்படுத்திய தீக்கனல் தமிழகத்தைப் பற்றி எரிய வைத்தது.

கீழ்க்காணும் என் கவிதையை அப்பெருமகன் 'திராவிட நாடு' இதழின் முகப்பு அட்டையிலே வெளியிட்டு என்னை ஊக்குவித்து, தமிழ் நிலத்திற்கு அறிமுகப் படுத்தினார்:

‘செந்தமிழ்த் தோழி! செந்தமிழ்த் தோழி!
வந்தது செய்தி; வெந்தது நெஞ்சம்!
பைந்தமிழ் நமக்கோ பரிதி; ‘இந்திப்
பந்த வெளிச்சமா பரிதியை முடக்கும்?’
அடிக்க அடிக்க அம்மியும் நகருமே,
கொடுக்கக் கொடுக்க மாடும் ஓடுமே,
படித்துப் படித்தே எடுத்துச் சொல்லியும்
‘கடி போலி இந்தி’ அடியை வைப்பதேன்?
ஆங்கிலம் இந்தியர்க் கயல்மொழி என்றால்
இந்தி தமிழனுக் கென்னவாம் தோழி?
யாரை ஏய்க்கிறார்? இருக்கும் நாமெலாம்
தேரையா? எலியா? கோரையா? புல்லா?
கையால் ஆகாக் காடையர் இந்தித்
தையலை அனுப்பியா தையல் செய்வது?
முல்லையைப் பிடுங்கியா கள்ளியை வளர்ப்பது?
சிலம்பு மேகலை செழித்த தமிழை
விலங்கிட வருமாம்; வியப்பு, வேதனை!
சட்டம் அதற்குத் தடியாய் அமையுமாம்!
கட்டிப் போட்டா குட்ட ரோகியைக்
காதல் செய்திடக் கட்டளை இடுவது?
குயிலின் நாவைக் கூறுகூ றாக்கினும்
பயிலுமோ கோட்டான் பாழ்மொழி தன்னை?
ஏணையில், தொட்டிலில் இன்பக் கட்டிலில்
வீணைத் தமிழுடன் விழுந்து கிடந்தோர்
இருமலைத் தந்தே இரத்தம் கொணரும்
ஒருமொழி கற்கவும் உடன்படு வோமா?
மூவாத் தென்றலாம் மூச்சாம் தமிழை
வாடை இந்தியோ வந்தே அழிப்பது?

இழுத்துக் கதவை மூட,
விழித்தெழு தோழி! விழித்தெழு தோழி!'

இப்படி என்போன்ற படைப்பாளிகளுக்கு வெளிச்ச மிட்டுக் காட்டிய அண்ணா, பின்னர் 'ஹோம்லாண்டு' 'ஹோம்ரூல்' போன்ற ஏடுகள் வழி, பரவலாகப் பிறமொழிக் காரர்களையும் தம் கருத்து வளத்தால் ஈர்த்தார்.

மொத்தத்தில் குயிலும் திராவிடநாடும் செய்த 'மைப் புரட்சி'தான் திராவிட இயக்கத்தைச் செழித்தோங்கி வளரச் செய்தது.

யாரை ஏய்க்கிறார்? இருக்கும் நன்மையை
இழப்பவர்? எவரோ? [illegible]
கையால் ஆகாக் காடையர் இந்தி
தாயவளை அறுப்பதோ நாங்கள் செய்வது?
முல்லையைப் பிடுங்கியே கள்ளியை வளர்ப்பது?
வெம்பு மேகலை செறித்த தமிழை
விலக்கிட வருமாம்; வியப்பு, வேதனை!
சட்டம் அதற்குத் தடியாய் அமையுமாம்!
கட்டுப் போட்டா குட்ட நோக்கைக்
காதல் செய்திடக் கட்டளை இடுவது?
குயிலின் நாவைக் கூறுகூ றாக்கிடும்
பயிலுமோ கோட்டான் பாழ்மொழி தன்னை?
மனையில், தொட்டிலில் இன்பக் கட்டிலில்
விளைத் தமிழுடன் விழுந்து விட்டோம்
இருமையைத் தந்தே இரத்தம் கொணரும்
ஒருமொழி கற்கவும் உடன்படு வோமா!
பூவைத் தென்றலாம் மூச்சாம் தமிழை
வரை- இந்தியோ வந்தே அழிப்பது?

17. பாவேந்தரும் நானும்

'கன்னல் பொருள்தரும் தமிழே!
நீ ஓர் பூக்காடு, நான் ஓர் தும்பி!'

என்று கவிதை முழக்கம் செய்த பாவேந்தரின் பாட்டுப் பட்டாளத்தில் இளமையிலேயே என்னை இணைத்துக் கொண்ட நான், அவருடைய கவிதைகளை நண்பர்களிடம் உரத்துப் படித்துக் காட்டி மகிழ்ச்சிக் கடலில் மிதந்தவன்.

1962இல் தம்முடைய அற்புதக் காவியமான 'பாண்டியன் பரிசை' எப்படியும் திரைப்படமாக்கிவிட வேண்டுமென்ற தீராவேட்கையுடன், சென்னை, தியாகராய நகரில் இருந்த எண். 10, இராமன் தெருவிற்குக் குடிபெயர்ந்து வந்தார் பாவேந்தர்.

அப்போது கவிஞர் பொன்னடியான் அவர்கள் அவருடைய அணுக்கத் தொண்டராக அவரிடம் உதவியாள

ராக இருந்து ‘குயில்’ இதழ் அச்சேறுவது போன்றவற்றைக் கவனித்துக் கொண்டார்.

பாவேந்தர் தமிழ் மண்ணிலும், பிற பகுதிகளிலும் விரவிக் கிடக்கும் தமிழ்க் கவிஞர்களையெல்லாம் ஓர் அணியில் திரட்டி ஓர் அமைப்பைக் காண, கவிஞர்களுக்கெல் லாம் அழைப்பு விடுத்திருந்தார்.

சென்னைச் சட்டக்கல்லூரி மாணவனான நானும், கவிஞர்கள் நாரா. நாச்சியப்பன், சேலம் முருகு சுந்தரம், சந்தக் கவிஞர் தமிழழகன், நாக. முத்தையா போன்ற பல்வேறு கவிஞர்களும் பாவேந்தரின் அன்பான அழைப்பை ஏற்று, 26.01.1962 அன்று இராமன் தெரு இல்லத்தில் கூடினோம்.

பாவேந்தரே வந்திருந்த கவிஞர்களுக்கெல்லாம் வாழை இலை போட்டு, இனிப்பும் காரமும் பரிமாறி மகிழ்வூட்டினார்.

பின்னர் அவர் பேசினார்: ‘‘கவிதை படைக்கும் நண்பர்களே! உங்களையெல்லாம் ஒரு சேரக் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன். படைப்பாளிகளான நமக்கு ஒரு மன்றம் வேண்டும். அதன் அமைப்புக் கூட்டம்தான் இது. நாம் காணும் மன்றத்தின் பெயரை, ‘அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம்’ என்று வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணியுள்ளேன்.’’

இப்படி அமையும் மன்றத்தின் பெயரைப் பாவேந்தர் கூறியவுடன் கையொலி செய்து கூடியிருந்த கவிஞர்கள் ஒப்புதல் வழங்கினர்.

பின்னால் அமர்ந்திருந்த நான் சற்றுத் தயக்கத்தோடு என் ஐயம் ஒன்றுக்கு விளக்கம் பெற மெல்ல எழுந்தேன். கவனித்த பாவேந்தர், ''சொல்லுங்கள்! என்ன உங்கள் ஐயம்?'' என்றார்.

''ஐயா, தாங்கள் சூட்டிய மன்றப் பெயர் அருமையாக உள்ளது. ஆனால் 'கவிஞர் மன்றம்' என்றாலே போதும்; இன்றேல் 'தமிழ்க் கவிஞர் மன்றம்' என்றாலும் சரியே; அன்றி 'உலகத் தமிழ்க் கவிஞர் மன்றம்' என்று இருந்தால் நிறைவாகவே இருக்கும்; அப்படி இருக்க ஏன் 'அனைத் துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம்' என நீளமான பெயர் வைக்க வேண்டும்? சுருக்கமாக இருக்கலாமே!'' இப்படித் தயங்கித் தயங்கி என் கேள்வியை அடக்கமுடன் கேட்டேன்.

உடனே பாவேந்தர் பதில் கூறினார்: ''நல்ல கேள்வி கேட் டீர்கள். சற்று நீளமானாலும் நான் ஏன் இப்படிப் பெயர் வைத்தேன் என்று எல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள். நாளைக்கே இந்த விஞ்ஞான உலகத்தில் தமிழர்கள் சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் குடிபுகுகிறார்கள் என்றால், அவர்களும் இதே பெயரில் 'அனைத் துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்ற'க் கிளைகளை அந்தந்த உலகங்களில் நிறுவிக் கொள்ள இயலும் என்ற தொலைநோக்குச் சிந்தனையால் இந்தப் பெயரை வைக்கலாம் என்று எண்ணினேன்!''

இந்த அரிய விளக்கம் கேட்ட கவிஞர்கள் எழுப்பிய கையொலி அடங்கச் சில நிமிடங்கள் பிடித்தன. பின்னர், பாவேந்தர் அமைத்த அப்பெருமன்றச் செயற்குழுவில் என்னையும் சேர்த்துக் கொண்டார் அப்பெருமகன். பாவேந்தரை அவ்வப்போது கண்டு பேசும் வாய்ப்பைப்

பெற்ற நான், சென்னைச் சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவர் பொறுப்பில் இருந்ததால், கல்லூரித் தமிழ்மன்ற ஆண்டு விழாவில் அப்பெருந்தகை வருகை நல்கிச் சிறப்புரை ஆற்ற உரிய ஏற்பாடு செய்தேன்.

'இந்திதான் ஆட்சிமொழி' என்று சட்டமே வந்த நேரம் அது. பாவேந்தர் பங்கேற்ற மேற்கண்ட ஆண்டுவிழாக் கூட்டத்தில், அப்பெருந்தகையை வரவேற்றுப் பேசிய நான், சற்றுத் தழுதழுத்த குரலில் இப்படிக் கூறினேன்: ''இந்தத் தமிழ் மண்ணின் விடி வெள்ளிப்பாட்டுக் குயிலான தாங்கள், 'எப்படி வந்து புகுந்து விடும் இந்தி, எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்?' என்று கம்பீரப் போர்ப்பாட்டு தீட்டியிருக் கிறீர்கள். இந்தி மொழியோ சட்டம் என்கின்ற குதிரைமேல் ஏறி வருகிறதே; இக்கொடுமையைத் தடுக்க வழியே இல்லையா? இதே நிலை நீடித்தால் தங்கள் பாடல் பொய்த்துப் போய் விடுமோ என்று அஞ்சுகிறோம்.''

இந்த என் கையறுநிலை உரையை உன்னிப்பாகக் கேட்ட பாவேந்தர் ஒலிபெருக்கி முன்னால் வந்து நின்று ஆவேசக்குரலில் சிங்கமென முழங்கினார்: ''இதோ இப் பொழுதே அறம்பாடுவதுபோல் சூளுரையாகச் சொல் கிறேன். அன்னைத் தமிழைப் புறக்கணித்து அன்னிய மொழி இந்திக்கு வால் பிடிக்கும் துரோக ஆட்சி நிச்சயம் ஒழியும்; அடுத்த பொதுத்தேர்தலில், 'தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராய் வருவார். அப்பொழுது இக்கவிஞனின் சொல் உண்மையாகப் போவது உறுதி; இதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்!''

அதற்குப் பின்னர் கனன்றெழுந்த இந்தி எதிர்ப்புப் போரால் தமிழகமே தீப்பற்றி எரிந்தது. பூமிப்பந்தின் மேல் எங்கும் நடைபெறாத பேரதிசயமாக, கீழப்பழுவூர் சின்னச்சாமி போன்ற பற்பல தமிழ்க்காளைகள் தம் இன்னுயிரை இந்தி ஆதிக்கத்தைத் தடுத்திடப் பலி கொடுத்தார்கள்.

விளைவு?

1967ஆம் ஆண்டில் காஞ்சித் தலைவர் அறிஞர் அண்ணா தமிழக முதல்வரானார். தமிழனை இரண்டாந்தரக் குடிமகனாக்கும் இந்தி மொழிப் படையெடுப்புக்கு நிரந்தரத் தடைவிதிப்பது போல், 'தமிழ்நாட்டில் தாய்மொழி தமிழ், உலகை அறிய ஆங்கிலம் ஆகிய இருமொழிகளே போதும்; இந்தி மொழி தேவையில்லை' என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டமே கொண்டுவந்தார்.

சீன எல்லைப் போர் 1962ஆம் ஆண்டில் மூண்ட போது, தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டில் ஒரு கவியரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தச் சிறப்பு மிக்க கவியரங்கத்திற்குப் பாவேந்தர் தலைமை ஏற்றார்.

ஒல்லியான உடல் கொண்ட சட்டக்கல்லூரி மாணவனான நானும் அக்கவியரங்கத்தில் பாடும் வாய்ப்பைப் பெற்றேன்.

பாவேந்தர் என்பெயரை அழைத்தவுடன், கூட்டத்தின் எதிரே வந்து நின்று கவிதைபாடியபோது, அதைச் செவி

மடுக்காமல் சிலர் கூட்டத்தில் 'சளசள' வென்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

தலைமை ஏற்றிருந்த பாவேந்தர் சற்றுச் சினத்தோடு எழுந்திருந்து, ''என்ன இப்படி இந்த அரங்கைச் சந்தைக் கடை ஆக்குகிறீர்கள்? இதோ இந்த மாணவ நண்பர் சில சுவையான வரிகளைச் சொல்கிறார், கவனியுங்கள்!'' என்று கூறிவிட்டு, என் பக்கம் திரும்பி'' மீண்டும் ஒருமுறை நீங்கள் படித்த வரிகளைப் படியுங்கள்!'' என்றார்.

மறுபடியும் படித்தேன் நான்:
'சூ' வென்றே விலங்குகளை விரட்டுவோம் நாம்;
'சூ' வருவான் என்பதற்கா இச்சொல் கண்டோம்?'

இவையே அந்த வரிகள். 'பல்லாண்டுகளாக ஆடு, மாடு, கோழிகள் மேய வந்தால் 'சூ' என்று கூறி விரட்டு வோம். பின்னால் 'சூ' எனப்படும் சீன அதிபர் சூ யென் லாய்' என்பவனைத் துரத்து வதற்குத்தான் இச்சொல்லை அன்றே கண்டுபிடித்தோமோ? என்று கூறும் இந்த வரிகளை நான் மறுபடியும் நிறுத்திப் படித்தவுடன், பாவேந்தரும் கையொலி செய்தார். அரங்கமும் கரவொலி எழுப்பி மகிழ்வூட்டியது. இப்படி அன்னை உள்ளத்துடன் ஊக்கு வித்து அரவணைத்த பாவேந்தரின் இமயநெஞ்சை இன்றும் எண்ணி நெஞ்சம் நெகிழ்கிறேன் நான்.

1964இல் பாவேந்தர் எனும் பாட்டுக்குயில் உடல்நலங் குன்றி, தான் காதலித்த தமிழ் மண்ணிலிருந்து பறந்து விடுகிறது. பாவேந்தர் மறைந்த அந்த நாள் இரவில் நான் எழுதிய கண்ணீர்க் கவிதையின் சில வரிகள் இவை:

‘அங்கத்தின் அணுவி லெல்லாம்
அனலேற்றிக் கொதிப்பை மூட்டிப்
பொங்கிடும் கவிவாள் தந்து,
‘புறப்படு, தமிழா!’ என்ற
சிங்கமே! கவிதை வேந்தே!
திரும்பாத திக்கை நோக்கி
எங்கே நீ பயணம் போனாய்?
இனிஇங்கே என்ன மிச்சம்?

அறுந்ததே இனிய வீணை;
அழகிசை இனிமேல் ஏது?
பறந்ததே புதுவை மைனா;
பாடலில் புதுமை ஏது?
நிறைந்ததே விழிநீர் கண்ணில்;
நிம்மதி இனிமேல் ஏது?
குறைந்ததே தமிழ்த்தாய் இன்பம்;
கோமானே எங்கே போனாய்?’

மந்திக்களைக் [illegible] அரங்கத்தில் 'எனக்கு' [illegible] பேசிக் கொண்டிருந்தனர்.

அவையை ஏற்றிருந்த பாவேந்தர் சற்றுச் சினத்தோடு எழுந்திருந்து, "என்ன இப்படி இந்த அரங்கத்தைக் கடை ஆக்குகிறீர்கள்? இந்தா இந்த மாதவ நண்பர் சில சுவையான வரிகளைச் சொல்கிறார், கவனியுங்கள்" என்று கூறிவிட்டு, என்பக்கம் திரும்பி "இன்னொருமுறை நீங்கள் படித்த வரிகளைப் படியுங்கள்!" என்றார்.

மறுபடியும் படித்தேன் நான்:

'சூ' வென்று விலங்குகளை விரட்டுவோம் நாம்;
'சூ' வருவான் என்பதனை [illegible] கண்டோம்?'

இவையே அந்த வரிகள். [illegible] ஆடு, மாடு, கோழிகள் மேய வந்தால் 'சூ' [illegible] விரட்டுவோம். பின்னால் 'சூ' என்பதும் [illegible] 'சூ வென் லாய்' என்பவனைத் துரத்து வதற்குத்தான் இச்சொல்லை அன்றே கண்டுபிடித்தோமோ? என்று [illegible] இந்த வரிகளை நான் மறுபடியும் திருத்திப் படித்தவுடன், பாவேந்தரும் கையொலி செய்தார். அரங்கமும் கையொலி எழுப்பி மகிழ்வூட்டியது. இப்படி அன்னை உள்ளத்துடன் ஊக்குவித்து அரவணைத்த பாவேந்தரின் இயல்பை நினைத்து இன்றும் என்னினி நெஞ்சம் நெகிழ்கிறேன் நான்.

1964இல் பாவேந்தர் எனும் பாட்டுக்குயில் உடல்நலம் குன்றி, தான் காதலித்த தமிழ் மண்ணிலிருந்து பறந்து விடுகிறது. பாவேந்தர் மறைந்த அந்த நாள் இரவில் நான் எழுதிய கண்ணீர்க் கவிதையின் சில வரிகள் இவை:

18. அண்ணாவும் நானும்

'அண்ணாவே பிறக்காமற் போயி ருந்தால்,
அழகுதமிழ்ப் பேச்சுநடை தவழ்வ துண்டா?
அண்ணாவே இல்லையெனில், 'மணிப்ர வாள
ஆக்டோபஸ்' ஆதிக்கம் அழிவ தெங்கே?
அண்ணாவே இல்லையெனில், வீதி வாழும்
அன்றாடங் காய்ச்சி கட்கே விடியல் உண்டா?
அண்ணாவே இல்லையெனில் எளியோர் எல்லாம்
ஆள்வதற்கே கோட்டைபுக வழிதான் ஏது?'

என்று எந்த அண்ணனைப் பற்றி நான் நெகிழ்ந்தும் மகிழ்ந்தும் பாடினேனோ, அந்தச் சகாப்தத் தலைவர்தான் என் வாழ்வின் திருப்பங்களுக்கு ஒரு கலங்கரை விளக்காய்த் திகழ்ந்தார்.

எழுத்தாலும் பேச்சாலும் என் போன்றோரின் இதய நாளங் களில் ஊடுருவி, எங்கள் வாழ்க்கைப் பாதையையே

மாற்றிப் போட்ட பெருமைக்குரிய வரலாற்றுத் தலைவர் அறிஞர் அண்ணா.

அப்பெருந்தகை ஊட்டிய திராவிட இன உணர்வாலும், மொழிப்பற்றாலும் ஈர்க்கப்பட்ட நான், மாணவனாக இருந்த போதே, பச்சையப்பன் கல்லூரியிலும், சட்டக் கல்லூரியிலும் 'திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்' மூலம் அவருடைய கோட்பாடுகளைப் பரப்புவதில் மும்முரமாக ஈடுபட்டு, பல மாணவர் கழக மாநாடுகளை நடத்தினேன்.

அண்ணா தன் 'திராவிடநாடு' இதழில்' என் கவிதை, கட்டுரைகளை மிகவும் பரிவுடன் வெளியிட்டு, தமிழகத்திற்கு என்னை அடையாளம் காட்டினார்.

அப்போது நான் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அன்று மாலை வகுப்புகள் முடிந்த பின்னால் என் விடுதி அறைக்குத் திரும்பினேன். உள்ளே நுழைந்தவுடன் ஓர் அஞ்சலட்டை என்னை ஈர்த்தது. அது அறிஞர் அண்ணாவே தன் கைப்பட எழுதிய மடல். அதில் அண்ணா இப்படி எழுதியிருந்தார்: கவிஞர் வேழவேந்தனுக்கு, 'திராவிட நாடு' இதழ் 'திராவிடர் திருநாள் மலர்' ஒன்று வெளியிடுவதை நீங்கள் அறிவீர்கள். அதற்கு உங்கள் கவிதை ஒன்றை விரைந்து அனுப்பி உதவுங்கள். அன்பன், அண்ணாதுரை.

அக்கடிதத்தைப் படித்ததும், ஒரு கோடி பரிசு பெற்றதைப் போல் மகிழ்ச்சியின் முகட்டுக்கே சென்ற நான் அதை, என் கல்லூரி நண்பர்கள் ஔவை நடராசன்,

கு. மாஸ்கோ போன்றவர்களிடம் காட்டிக் காட்டிப் பூரித்தேன்.

பின்னர் ஒரு கவிதை எழுதி எடுத்துக் கொண்டு, காஞ்சிக்கு, அறிஞர் அண்ணாவிடம் அதை நேரில் தரப் புறப்பட்டுச் சென்றேன்.

திருக்கச்சி நம்பித் தெருவில் அமைந்த 'திராவிடநாடு' அலுவலகத்தில் இருந்த அண்ணா அவர்கள் மலர்ந்த முகத் துடன் வரவேற்று, 'என்னய்யா, இவ்வளவு செலவு செய்து கொண்டு நேரில் வந்திருக்கிறீர்கள்! அஞ்சலில் அனுப்பி யிருக்கலாமே!' என்றார்.

''இல்லைங்கண்ணா! உங்களிடம் சிறு சண்டை போடலாம் என்றுதான் நேரில் வந்தேன். ஒரு சாதாரண மாணவனான எனக்குப் போய், தங்கள் பொன்னான நேரத்தைச் செலவிட்டு, தங்கள் கைப்படக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறீர்களே, அந்த அஞ்சலட்டையைப் பரிமளத்தை விட்டு எழுதச் சொல்லியிருக்கலாமே அல்லது இளங்கோவனை வைத்து எழுதியிருக்கலாமே; அந்த நேரத்தில் தங்கள் வைரமணிக் கருத்துகளைத் 'திராவிட நா'ட்டில் எழுதினால் எத்தனை ஆயிரம் பேர் விரும்பிப் படிப் பார்கள்?'' என்றேன் நான்.

''இருய்யா! நீ யார்? திராவிட இயக்கத்தின் ஒரு சுய மரியாதைக் கவிஞன். உன்னிடம் நான் கவிதை கேட்டு வாங்கிப் போடுவதுதான் நியாயம்! உனக்கும் அதுதான் மரியாதை!'' என்று அந்த அறிவுலகப் பேராசான் என்னைத் தட்டிக்கொடுத்துக் கூறிய வாசகங்கள் என்னை மெய்சிலிர்க்க வைத்தன.

பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும்போதே, நான் 'நெஞ்சிலே பூத்த நிலா' எனும் ஒரு சிறுகதைத் தொகுப்பை எழுதினேன். அந்நூலுக்கு எப்படியும் அறிஞர் அண்ணா விடம் அணிந்துரை வாங்குவது என்று முடிவு செய்து அண்ணா அவர்களைச் சந்திக்க முயன்றேன்.

அன்று பூவிருந்தவல்லிக்கு அடுத்திருந்த திருமழிசை யில் கழகக் கூட்டத்தில் அண்ணா பங்கேற்று உரையாற்றும் செய்தியை அறிந்ததும், நானும் என் கெழுதகை நண்பர்கள் முன்னாள் மேயர் சா. கணேசன், கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் ஆகியோரும் சென்று கூட்டத்தின் ஒரு புறம் காத்திருந்து அவர் உரையைக் கேட்டோம்.

கூட்டம் முடிந்ததும் அவர் மாவட்டச் செயலாளர் திரு. தி.ந. சம்பந்தன் அவர்கள் இல்லத்தில் இரவுச் சிற்றுண் டிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

எங்கள் வேண்டுகோளை அவரிடம் கூறியதும், சற்றும் தாமதமின்றி, ''நூலின் பிரதியைக் கொண்டுவந்து இருக்கிறீர்களா?'' என்று கேட்டு எங்களிடம் அதைப் பெற்றுக் கொண்ட அண்ணா, தி.ந. சம்பந்தனிடம், ''என்ன சம்பந்தம்? உங்கள் வீட்டில் நான் இதைப் படிப்பதற்கும் அணிந்துரை எழுதுவதற்கும் தனி அறை உள்ளதா?'' என்றார். அவரும் இருக்கிறது என்றவுடன், எங்களை அங்கு வரச் சொல்லிவிட்டு, சம்பந்தன் வீட்டு மாடியில் அமர்ந்து அந்த நூல் முழுவதையும் படித்து விட்டு, ஓர் அற்புதமான அணிந் துரையை எழுதி முடித்துக் கீழே இறங்கி வந்தார் அண்ணா. அப்பொழுது விடிகாலை 3 மணி ஆகிவிட்டது.

அந்த நேரத்தில் அரைத் தூக்கத்தில் கீழே அமர்ந் திருந்த எங்களிடம் எழுதிய அணிந்துரையைத் தந்து, ‘வரட்டுமா?’ என்று அவர் கூறியபோது, இந்த எளியவன் பால் அவர் காட்டிய பரிவும் பற்றும் விழிகளில் நீரை வரவழைத்தன. ஒரு மாபெரும் தலைவர் பெருங்கூட்டத்தில் நீண்ட நேரம் உரையாற்றிவிட்டு, சற்றும் சோர்வில்லாமல் என் நூலை இரவெல்லாம் படித்து அழகிய அணிந்துரையைத் தீட்டித் தந்தாரே என்று இன்றும் அவருடைய இமய உள்ளத்தை எண்ணி நெகிழ்ந்து போகிறேன் நான்.

1963இல் அன்றைய சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் கே.எம். கண்ணபிரான் அவர் களின் மகள் பானுமதிக்கும் எனக்கும் திருமண ஏற்பாடுகள் நடந்தன. இந்த மணம் முடிப்பதிலும் அண்ணா அவர்களும், முன்னாள் அமைச்சர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களும் காட்டிய பரிவும் பங்கும் நான் என்றென்றும் மறக்க முடியாதவை.

03.06.1963 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட எங்கள் திருமணத்திற்குத் தலைமை ஏற்று நடத்தி வைக்க அண்ணா அவர்கள் ஒரு பழைய காரில் நேரத்துடன் காஞ்சியிலிருந்து புறப்பட்டு வந்தார்கள். வழியில் அக்கார் திடீரென்று பழுத டைந்து விட்டது. அதை ஓட்டவே முடியாது என்று ஓட்டுநர் சொல்லிவிட்டதும், அண்ணா வாளா இருந்து விடவில்லை.

வழியில் வந்த லாரிகளை நிறுத்தத் தொடங்கினார். ஒரு மணல் ஏற்றிய லாரியை நிறுத்தி, ‘என்னைச் சென்னை வண்ணைப் பகுதியில் நடக்கும் திருமண நிகழ்ச்சிக்குக்

கொண்டு போய் விட முடியுமா?' என்று கேட்டார். அவர் யாரென்று புரிந்து கொண்ட அந்த மணல் லாரி ஓட்டுநர், ''ஐயா, தூசி படிந்த முன் இருக்கையில்தான் தாங்கள் அமர்ந்து வரவேண்டும்? இயலுமா,'' என்று கேட்டிருக்கிறார். தன் மேல் துண்டால் அதைத் துடைத்து விட்டு, அண்ணா ஏறி அமர்ந்து வட சென்னையை நோக்கி லாரியைச் செலுத்தக் கேட்டுக் கொண்டார்.

அண்ணாவை அருகே அமர வைத்திருக்கிறோம் என்ற பெருமிதத்துடன் அந்த லாரி ஓட்டுநர் படுவேகமாக லாரியைக் கொண்டுவந்து, ஹார்ன் ஒலியுடன், திருமண மேடை அருகிலேயே நிறுத்தினார். வியப்புடன் நாங்க ளெல்லாம் பார்த்தபோது, லாரியின் முன் பகுதியிலிருந்து அண்ணா முகத்தைத் துடைத்துக் கொண்டு கையொலிக் கிடையே இறங்கி வந்தார். மணமேடை வந்து திருமணத்தை நடத்தி முடித்தார்.

என் வாழ்நாளில் நான் என்றென்றும் மறக்க வொண்ணாத நெஞ்சை நெகிழவைத்த நிகழ்வு அல்லவா அது?

இதேபோல் 1967இல் நடைபெற்ற தமிழகச் சட்ட மன்றத் தேர்தலில் விரும்பியவண்ணம் எனக்கு என் பிறந்த பகுதியான கும்முடிப்பூண்டித் தொகுதியில் போட்டியிட இடமளித்தார். தேர்தலின் இறுதி நேரத்தில் அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டிருந் தாலும், ஒப்புக் கொண்ட வண்ணம் எப்படியும் என் தொகுதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு விடிகாலை மூன்று மணியளவில் வந்து நிறைவுடன் வாக்கு கேட்டபோது, 'இதோ இருக்கும் தம்பி வேழவேந்தன் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரிகிறார். அவருடைய

கறுப்பு அங்கியைக் கழற்றி விட்டு, வெள்ளைச் சட்டையுடன் அவரைக் கொண்டுவந்து உங்கள் முன் வேட்பாளராக நிறுத்தியுள்ளேன். அவர் வெற்றி பெறாமல் போனால், அவர் கோர்ட்டுக்குப் போய்விடுவார்; அது அவருக்கு இலாபம். அவரை வெற்றிபெற வைத்தால் கோட்டைக்கு வருவார்; அது எனக்கு இலாபம். ஆகவே உங்களைக் கேட்கிறேன், நீங்கள் அவரை அனுப்பப்போகிற இடம் கோட்டையா? கோர்ட்டா?' என்று கம்பீரமாகக் கேட்டார்.

எதிரே இருந்த பெருங்கூட்டம் அந்தப் பனிபொழிந்த விடிகாலையிலும், 'கோட்டைக்கு' என்று ஓங்கி முழக்க மிட்டதைக் கேட்டுப் பரவசத்துடன் என் முதுகில் தட்டிக் கொடுத்த அச்சரித்திரத் தலைவரை என் உடலின் கடைசி அணுதுடிக்கும் வரை நான் மறக்கத்தான் முடியுமா?

அன்னையை அருகே அமர வைத்திருக்கிறோம் [illegible] மாக [illegible] அன்னை [illegible] கிடையே இருந்து [illegible] மணமேடை வந்து திருமணத்தை நடத்தி முடித்தார்.

என் வாழ்நாளில் நான் என்றென்றும் மறக்க வொண்ணாத நெஞ்சை நெகிழவைத்த நிகழ்வு அல்லவா அது?

இதேபோல [illegible] நடைபெற்ற தமிழகச் சட்ட மன்றத் தேர்தலில் [illegible] எனக்கு என் பிறந்த பகுதியான கும்மிடிப்பூண்டித் தொகுதியில் போட்டியிட இடமளித்தார். தேர்தலின் இறுதி நேரத்தில் அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டிருந்த நேரம். ஒப்புக் கொண்ட வண்ணம் எப்படியும் என் தொகுதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு விடிகாலை மூன்று மணியளவில் வந்து நிறைவுடன் வாக்கு கேட்ட போது, 'இதோ இருக்கும் தம்பி வேழவேந்தன் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரிகிறார். அவருடைய

19. ஓயா உழைப்பால் தேயாப் புகழ் பெற்றோர்

"தூங்கிய துண்டு தமிழர்கள் முன்பு - பகை
தூளாகு மன்றோ எழுந்த பின்பு!"

என்று சங்கநாதம் முழங்கிய பாவேந்தர் தன் ஆசிரியப் பணி, குடும்பப் பணிக்கிடையே ஓயாமல் எழுதிக் குவித்த கவிதைக் கருவூலங்கள் காலமெல்லாம் நிலைத்து நின்று அவர்தம் புகழ் பாடிக் கொண்டே இருக்கின்றன.

கொண்ட இலட்சியத்தில் குறைவிலா எஃகுறுதி யுடன் செயல்படுபவர் பாவேந்தர் என்பதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகள் உண்டு.

ஒரு முறை அன்றைய திருச்சி மாவட்டம் தவிட்டுப் பாளையத்தில், பாவேந்தர் சிறப்புரையாற்றும் திராவிடர் கழகக் கொள்கை விளக்கக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பலரும் பேசிய காரணத்தால், நேரங்கழித்துப் பாவேந்தரிடம் ஒலிபெருக்கி வழங்கப்பட்டது. எனினும் உற்சாகம் குறையாமல் தமக்கேயுரிய கம்பீரக் குரலில் இயக்கக் கொள்கைகளை எழுச்சியுடன் அடுக்கடுக்காக எடுத்து வைத்துக் கொண்டிருந்தார் பாவேந்தர். இரவு 12 மணியை நெருங்கிவிட்டதால், கூட்ட நிருவாகிகள் அவர் பேச்சை முடித்துக் கொள்ள, ஒரு சிறு துண்டுச்சீட்டில் ''ஐயா, நேரம் மிகவும் கடந்து விட்டது'' என்று எழுதி அவரிடம் அளித்தனர். அதைப் படித்த பாவேந்தர், தேள் கொட்டியது போல் துண்டுச் சீட்டு அனுப்பியவர்களுக்குச் சூடு வைத்தார். ''இதோ பாருங்கள், யார் யாருக்குப் பசிக்கிறதோ, யார் யார் தூங்கப்போகலாம் என்று நினைக் கிறீர்களோ அவர்கள் தாராளமாக எழுந்து போகலாம். நான் சொல்ல வந்த கழகக் கொள்கைகளை முழுதும் விளக்கிய பின்னர்தான் என் பேச்சை முடிப்பேன்!'' என்று ஆணித்தரமாகப் பதில் கூறிக் கூட்டத்தினரை வியப்பில் ஆழ்த்தினார்.

இதுபோல் அறிஞர் அண்ணா அவர்களும் தாம் எண்ணிய வண்ணம் எழுத முனைந்ததை இரவையெல்லாம் பகலாக்கி எழுதி முடிப்பார். முன்னிரவு தொடங்கி மறுநாள் விடியும்வரை பொதுக் கூட்டங்களில் பங்கேற்றுக் கருத்து விருந்து வைப்பார்.

அவர், 'ஓர் இரவு' எனும் நேரிலாச் சமுதாயச் சீர்திருத்த நாடகத்தை ஒரே இரவில் அமர்ந்து முழுதும் எழுதி முடித்தார் என்பது கேட்போரைப் பிரமிக்க வைக்க வில்லையா?

தேர்தல் நேரத்தில் அவருடைய சூறாவளிச் சுற்றுப் பயணம் வெள்ளி முளைத்தாலும் தொடர்ந்தது. இதனை, அவர் தம்பிக்கு என்று அழைத்துத் தீட்டிய கட்டுரை மடலில் 'தம்பி தொழுதூர் சென்றேன்; பொழுது விடிந்தது!' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதத்திலிருந்தும் அறியலாம். பொழுது புலர்ந்து உழவர்கள் ஏர்மாடுகளை ஓட்டிச் செல்வது வரை இமை மூடாது உழைத்தவர் அறிஞர் அண்ணா.

நாம் ஓய்வின்றி உழைத்தால்தான் உலகின் மற்ற இனத்த வருடன் போட்டியிட்டு உயர் நிலையை அடைய முடியும் என் பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் அறிஞர் அண்ணா.

ஒரு முறை சப்பான் போன்ற கீழை நாடுகளின் சுற்றுப் பயணத்தை முடித்துத் திரும்பிய அண்ணா அவர்கள், தமக்கு வர வேற்பு நல்கிய சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் ஒரு நிகழ்ச்சியைக் கூறி, நாம் சோம்பிக் கிடப்பதைப் பற்றி எத்தனை நயத்துடன் கண்டிக்கிறார் பாருங்கள். அவர் கூறினார்:

''நண்பர்களே! நான் சப்பான் நாட்டுக்குச் சென்ற போது ஒரு வேடிக்கையான அனுபவம் பெற்றேன். அங்கிருந்த தொழிலதிபர் ஒருவரிடம், ''நீங்கள் இந்தியா வந்திருக்கிறீர்களா? எங்கள் தமிழ்நாட்டைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''ஓ! வந்திருக்கிறேன். வந்து பார்த்தபோது நான் கண்ட ஒரு புதிருக்கு விளக்கம் இன்னும் எனக்குக் கிடைக்க வில்லை. அங்கு சென்னையில் தங்கியிருந்த நான், மாமல்ல

புரம் என்பது ஒரு நல்ல சுற்றுலாத்தலம் என்று கூறப்பட்ட தால் தங்கியிருந்த ஓட்டலில் இருந்து ஒரு காரில் புறப்பட்டுக் காலை 10 மணியளவில் மாமல்லபுரத்திற்கு உள்ளூர் நண்பருடன் புறப்பட்டுச் சென்றேன். அப்போது வழியில் கண்ட கிராமங்களின் ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் இரு திண்ணைகள் இருப்பதையும், அவற்றில் அமர்ந்து சிலர் ஏதோ பேசிக் கொண்டே இருப்பதையும் கவனித் தேன். பின்னர் சென்ற ஊரைச் சுற்றிப் பார்த்த பின்னர் மாலையில் அதே சாலை வழியாக நாங்கள் திரும்பும்போதும், அதே மாதிரி அந்தத் திண்ணைகளில் அதே மனிதர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்! காலையிலே அமர்ந்து பேசத் தொடங்கியவர்கள் மாலை நாங்கள் திரும்பும் வரையில் பேசுகிறார்களே, 'அப்படி என்னதான் பொருள் பற்றிப் பேசுவார்கள்?' என்ற என் புதிருக்கு விடைகூற முடியுமா?'' என்றார் அந்தத் தொழிலதிபர்.

இதைக் கேட்டவுடன் நான் பதில் கூற இயலாமல், வெட்கமும் வேதனையும் அடைந்தேன்.

ஜப்பான் போன்ற முன்னேறிய நாட்டார், ''ஐயோ, எங்களுக்கு நேரம் போதவில்லையே என்று வருத்தப்படு கிறார்கள்; நாமோ நேரம் போகவில்லையே என்று துயரப் படுகிறோம். இப்படியே நாம் இருந்தால் எப்படி நாம் முன் னேற்றம் அடைந்து உலகின் முதல்தரக் குடிமக்களாவது?''

வங்கக் கடலின் அலைகளோடு கலந்து வந்து அந்தத் தங்கத் தலைவர் எழுப்பிய சிந்தனையாழ வினாக்கள், கேட்ட

எங்கள் செவிகளில் இன்னும் எதிரொலித்துக் கொண்டே உள்ளன.

வியர்வைத் துளிகளின் உயர்வை அயர்வின்றிப் பாடிய பாவேந்தர் சராசரி மனிதர்களை விடப் பலமடங்கு உழைத்தால் தான் வாழ்நாளெல்லாம் கவிதைகளால், காப்பியங்களால், சிறுகதைகளால், நாடகங்களால், கட்டுரைகளால், அளப்பரிய கருத்து விருந்துகளைப் பரிமாறிக் கொண்டே இருந்தார். வாழ்நாளில் அவர் சோர்வின்றித் தீட்டிய எழுத்தோவியங்களின் அளவு மட்டும் 4000 பக்கங்களைத் தாண்டும் என்றால் அவருடைய ஓயா உழைப்பின் மாட்சி புலப்படும்.

> 'சித்திரச் சோலைகளே! உமை நன்கு
> திருத்த இப்பாரினிலே - முன்னர்
> எத்தனைத் தோழர்கள் இரத்தம் சொறிந்தனரோ
> உங்கள் வேரினிலே!'

என்று பூத்துக் குலுங்கும் சோலைகளும் புத்தெழில் காட்டும் இந்த உலக முன்னேற்றத்துக்குப் பாட்டாளி மக்கள் சிந்திய இரத்தத்தால் கிடைத்த அறுவடைகளே என்று தெள்ளத் தெளிவாகப் பாடிய பாவேந்தர், எண்ணிலடங்காப் படைப்புகளால் தான் பெரும் பாட்டாளி என்பதை உண்மைப் படுத்தினார்.

1949இல் தந்தை பெரியாரை விட்டுப் பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட அறிஞர் அண்ணா அவர்கள், 'எங்கே இவர் தேருவாரா?' என்று எதிரிகள் கணக்கிட்ட

போது, தம் சூறாவளிச் சுற்றுப் பயணங்களால் எல்லா மாவட்டங்களிலும் தி.மு. கழகத்தின் இளைஞர்களை உருவாக்கி, தன் அற்புத உழைப்பால் அதை மாபெரும் ஆலமரமாக வளர்த்தார். தொடங்கிய 18 ஆண்டுகளிலேயே ஆனானப்பட்ட பாரம்பரியம் மிகுந்த காங்கிரசையே வீழ்த்தி, கோட்டையைக் கைப்பற்றினார் அண்ணா.

அதேபோல் தந்தை பெரியாரே அவ்வளவாக விரும்ப வில்லை எனினும், அந்த நாள்களிலேயே, பாவேந்தருக்கு ஒரு பெரும் பணமுடிப்பு தரவேண்டும் என்று முடிவெடுத்த அண்ணா பம்பரமாய்ச் சுழன்று வந்து, தான் எண்ணிய வண்ணம் ஓயா உழைப்புடன் அன்றே ரூ. 25,000 திரட்டி அப்பாட்டரசருக்கு வழங்கி வரலாறு படைத்தார்.

திராவிடர் கழகத்தில் சுழன்று வந்து வீறுடன் தொண் டாற்றிய அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிக்கு நெஞ்சக நோய் வந்தபோது அவருடைய மருத்துவச் செலவு களையெல்லாம் ஏற்கிற வகையில், நிதி உதவி வழங்கிட, பட்டி தொட்டியெல்லாம் பயணம் போனார் அண்ணா.

தூங்கும் நேரத்தில் கூடத் தம் தலையணையின் கீழ், எழுதுவதற்கு உரிய குறிப்புப் புத்தகமும் பேனாவும் வைத்துக் கொண்டுதான் தூங்குவாராம் பாவேந்தர் பாரதி தாசன். கனவில் நல்ல சிந்தனைகள் தோன்றுமானால், உடனே அவற்றுக்கு எழுந்தவுடன் வடிவம் கொடுத்து விடுவாராம் அவர்.

இப்படித் தூங்கிவிட்ட தமிழ் மகனை எழுப்பி, எழுச்சி நடை போடவைத்த பெருமைக்கு உரியவர்கள்தாம் அண்ணாவும் பாவேந்தரும்.

தன் ஓய்வறியாப் பயணத்தால் சின்னஞ்சிறிய குக்கிராமத் திலும் கால்பதித்துத் தன் தீவிரமான பேச்சாற்ற லால் மறுமலர்ச்சிக் கருத்துகளை விதைத்தார் அண்ணா. முடவனையும் எழுந்து நடமாடச் செய்யும் இடிமுழக்கப் பாடல்களால் திசை எட்டும் அறிவுத் தீக்கனலை எழுப்பினார் பாவேந்தர்.

அந்த மாத்தலைவர்கள் நல்கிய ஓயா உழைப்பின் அறுவடையை நுகர்ந்து கொண்டிருக்கிறோம் நாம்.

திராவிடர் கழகத்தில் ... வீரனுடன் தொண்டாற்றிய அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிக்கு நெஞ்சக நோய் வந்தபோது அவருடைய மருத்துவச் செலவுகளையெல்லாம் ஏற்கிற வகையில், நிதி உதவி வழங்கிட, பட்டி தொட்டியெல்லாம் பயணம் போனார் அண்ணா.

தூங்கும் நேரத்தில் கூடத் தம் தலையணையின் கீழ், எழுதுவதற்கு உரிய குறிப்புப் புத்தகமும் பேனாவும் வைத்துக் கொண்டுதான் தூங்குவாராம் பாவேந்தர் பாரதிதாசன். கனவில் நல்ல சிந்தனைகள் தோன்றுமானால், உடனே அவற்றுக்கு எழுந்தவுடன் வடிவம் கொடுத்து விடுவாராம் அவர்.

20. எளிமையால் ஈடிலாப் பண்பால் ஏற்றம் பெற்றோர்

ஒப்பரிய எழுத்தாலும் பேச்சாலும் உயர்ந்தோங்கித் திகழ்ந்த அண்ணாவும் பாவேந்தரும் தம் உன்னதப் பண்புகளாலும் உளம் நெகிழவைக்கும் எளிமையாலும் நம் நெஞ்சங்களில் ஏறி நிற்கிறார்கள்.

தன்னேரிலாத மாபெரும் புரட்சிக் கவிஞராகத் திகழ்ந்த பாவேந்தர், பாட்டுக்கொரு புலவன் பாரதியால் கவரப்பட்டு, 'சுப்புரத்தினம்' எனும் சொந்தப் பெயரைப் 'பாரதிக்கே தாசன்' எனும் பொருளில் 'பாரதிதாசன்' என்று மாற்றிவைத்துக் கொண்ட போது, பேராசிரியர் க. அன்பழகனார் ஒரு நாள் தன் மனத் தாங்கலை இப்படி வெளிப்படுத்தினாராம்:

''என்ன இருந்தாலும் உங்கள் பெயரை நீங்கள் 'பாரதிதாசன்' என்று மாற்றி இருக்கக் கூடாது. அதில் என் போன்றோர்க்கு உடன்பாடு இல்லை. ஓர் அக்ரகாரக் கவிஞருக்குப்

போய் அடிமை என்பது போல், ஏன் 'பாரதிதாசன்' என்று மாற்றினீர்கள்?''

இதைக் கேட்டவுடன் தன் கொதிப்புணர்வை இப்படிப் பதிலாகக் கொட்டினாராம் பாவேந்தர்:

''இதோ பாருங்கள். நீங்கள் உண்மையான பாரதியை யும் உணர்ந்து கொள்ளவில்லை; உங்களுடன் இதுவரை பழகும் என்னையும் புரிந்துகொள்ளவில்லை. பாரதி எல்லாக் கவிஞர்களையும் போலப் பத்தோடு பதினொன்றல்லன். சேற்றிலே சிரித்திடும் செந்தாமரையைப் போல், பார்ப்பனர் மரபிலே தவறிப் போய்ப் பிறந்துவிட்ட வேர்ப்பலா மாக்கவிஞன் அவன். எந்த அளவு அவன் என்னை ஈர்த்துத் தன் வயமாக்கி இருந்தால், நான் என் பெயரையே மாற்றி அவனுக்குத் தாசனாகி இருப்பேன்? நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்!'

இந்த எதிர்பாரா விடைகண்டு தான் திகைத்துப் போனதைப் பற்றிப் பேராசிரியர் க. அன்பழகனார் ஒரு கூட்டத்தில் நெகிழ்வுடன் கூறினார்.

எளிமையாலும் இனிமையாலும் இமயமாய் வரலாற் றேட்டில் உயர்ந்தோங்கி நிற்கும் அண்ணாவைப் பற்றிய சில நிகழ்வுகள் நமக்குப் புல்லரிப் பூட்டும்.

அப்பொழுது அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ் செழியன் போன்றோர் கழகத் தோழர்களுடன், மும்முனைப் போராட்டத்தையொட்டி, தடுப்பு நடவடிக்கையாகச் சென்னை மத்தியச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டி ருந்தனர்.

சிறைச்சாலையின் விதிப்படி, அறைகளில் மாலையில் அடைக்கப்படும் கைதிகளுக்கு அறைக்கு ஒரு பானை வைக்கப்படும். அவர்களில் யாருக்கேனும் அவசரமாய்ச் சிறுநீர், மலசலம் கழிக்க வேண்டுமானால் அப்பானையில் கழித்து, மறுநாள் சிறை அன்ற திறக்கப்படும்போது அக்கைதிகள் மேற்சொன்ன கழிவு நிறைந்த பானையைக் கழிவறைக்குக் கொண்டுசென்று, சுத்தமாகக் கழுவி எடுத்து வந்து, தம் அறையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது சிறை விதி. புதிதாகச் சிறைசென்ற தி.மு. கழக இயக்க இளைஞர்கள் சிலர் இதற்குக் கட்டுப்படாமல், 'நாங்களே கழிவுகளைக் கொண்டுபோய் கொட்டிவிட்டு, பானைகளை அலம்பி வர மாட்டோம்' என்று அடம் பிடித்தனர். இச் செய்தி சிறை அதிகாரி ஒருவர் மூலம் அதேபோல் ஓர் அறையில் இருந்த அண்ணாவிடம் தெரிவிக்கப்பட்டது. கேட்ட அண்ணா மன வருத்தத்துடன் அருகிருந்த நெடுஞ்செழியனிடம், ''இதோ பாருங்கள் நெடுஞ்செழியன், நம் தோழர்கள் சிலருக்கு இன்னும் சிறை என்றால் என்னவென்று தெரியவில்லை. பரவாயில்லை, அந்த நண்பர்களின் அறைக்குச் சென்று ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு வாருங்கள். நீங்கள் மறுத்தால் பரவாயில்லை. நாளைக்கு விடிகாலை ஒரு குள்ள உருவம் ஒவ்வொரு அறையாக வரும். தயைகூர்ந்து தங்கள் அறைக்குள் இருக்கும் அந்தக் கழிவுப் பானைகளை வெளியே வைத்தால், அந்த உருவம் எடுத்துக் கொண்டுபோய் கழுவிக் கொண்டுவந்து பானைகளை அவர்களிடம் சேர்க்கும்; அதற்கு மட்டும் ஒத்துழைப்பு தரச் சொல்லுங்கள்'' என்று கூறி அவர்களிடம் அனுப்பினார். இதைக் கேட்ட கழகத் தோழர்கள் கண்களில் விழிநீர் துளிர்த்தது. ''அண்ணாவை மன்னித்திடக் கூறுங்கள்; நாங்களே செய்கிறோம்'' என்று கூறினர்.

தன் பாட்டுத் திறத்தால் ஓங்கி நின்ற பாவேந்தரின் அடக்க உணர்வும் நம்மைச் சிலிர்க்கச் செய்யும்.

ஒருமுறை ஏதோ ஒரு கவிஞர் மன்றம் பாவேந் தருக்கு, 'உலக மகாகவி' என்ற பட்டம் அளித்துச் சிறப் பித்தது. வேண்டா வெறுப்புடன் அதைப் பெற்று வந்த பாவேந்தரை மறுநாள் சந்தித்த சில துதிபாடிகள், ''பாருங்கள் ஐயா, உங்கள் குருநாதர் பாரதிக்கும் கிடைக்காத பட்டம் உங்களுக்குக் கிடைத்துள்ளது. இதன் மூலம் நீங்கள் பாரதி யாரை விஞ்சிவிட்டீர்கள்!'' என்று தாளம் போட்டனர். கேட்ட பாவேந்தர் முகத்தைச் சுருக்கிக் கொண்டு, ''சும்மா உளறாதீர்கள். நான்போய்ப் பாரதிப் புலவனை மிஞ்சுவதா? அந்தப் பட்டத்தை எழுதிப் பாருங்கள் 'உலக மகாகவி பாரதிதாசன்' என்று எழுதினால் உலகமாக் கவிஞர் பாரதியின் தாசன் நான் என்றுதான் பொருள்படும். போய் வேலையைப் பாருங்கள்!'' என்று வாயை அடைத்து அனுப்பி வைத்தாராம்.

அறிஞர் அண்ணாவின் எளிமையோ நாம் நம்ப முடியாத அளவு சிலிர்ப்பூட்டும். அவருக்குச் சட்டை இருக்கும். சட்டையில் பைகூட இருக்கும் . ஆனால் வாழ்நாளில் அவர் ஒரு நாளும் காசு வைக்கும் 'மணிபர்ஸ்' அதில் வைத்துக் கொள்ளவில்லை. அதேபோல் அவருடைய மணிக்கட்டில் மணிபார்க்கும் 'கைக் கடிகாரத்தை அவர் என்றுமே கட்டியதில்லை. மணி அறிய வேண்டுமானால் அடுத்திருப்பவரிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்வார். கலைஞர் போன்றோருக்குக் கணையாழி அணிவித்திருக் கிறாரே தவிர, அவர் என்றுமே மோதிரம் அணிந்ததில்லை. அதேபோல் சொந்தத்தில் அவர் கார் வைத்துக் கொள்ளவே இல்லை. நண்பர்களிடம் இறுதிவரை இரவல் வாங்கிக் கொண்டுதான் செல்வார்.

ஒருமுறை அப்படி அண்ணா இரவல் வாங்கிய காரில் பயணம் செய்தபோது ஒரு சுவை நிகழ்ச்சி நடந்தது. அன்று நடு இரவு நேரத்தில், நண்பர் ஒருவரிடம் பழைய கார் ஒன்றைப் பெற்று அதில் அரங்கண்ணல், தில்லைவில்லாளன் போன்ற நண்பர் களுடன் அண்ணா காஞ்சிபுரத்திலிருந்து சென்னை வந்து கொண்டி ருந்தார். அது கார் வழிப்பறி அதிகமாக நிகழ்ந்துகொண்டிருந்த காலம். ஆகவே, பயணம் செய்து கொண்டிருந்தபோது அரங்கண்ணல் சற்று அச்ச உணர்வுடன் ஓட்டுநரிடம், ''என்னப்பா, வழியில் எவனா வது கையைக் காட்டி வண்டியை நிறுத்தச் சொன்னாலும், நிறுத்தாதே! அவன் வழிப்பறிக் கொள்ளையனாக இருக்கப் போகிறான்!'' என்றார். அருகில் இருந்ததில்லை வில்லாளன் உடனே, ''ஆமாம், நம்மிடம் இலட்சக்கணக்கில் பணம் இருக்கிறது. அவன் நிறுத்திக் கொள்ளை அடித்துவிடப் போகிறான். நீ நிறுத்தினாலும் பரவாயில்லை'' என்று கூறினார். இவற்றை அரைத் தூக்கத்தில் முன் இருக்கையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த அண்ணா, ''இதோ பாரப்பா! நீ வண்டியை யார் நிறுத்தினாலும் இந்த நேரத்தில் நிறுத்தாதே. கொள்ளையன் நம்மை நிறுத்துவான். வரிசை யாக நம் சட்டைப்பைகளில் என்ன பணம் இருக்கிறதென்று துழாவி எடுப்பான். அப்படி நம் சட்டைப் பைகளில் எதுவும் இல்லை என்று தெரிந்தவுடன், ஓங்கி ஓங்கி நம் முதுகில் சாத்திவிட்டு பிச்சைக்காரப் பயல்களுக்குக் கார் ஒரு கேடா? என்று நம்மைக் கேள்வி வேறு கேட்பான். நிறுத்தாமல் போ'' என்றார். அண்ணாவின் இந்தக் கூர்மையான நகைச்சுவை பயணத்தில் அவர்களுக்குக் கலகலப்பூட்டின.

பண ஆசை வெறி தலைக்கேறாமல் பார்த்துக் கொண்ட பெருமை பாவேந்தருக்கே உரியது. கலைஞர் தீட்டி, சிவாஜி கணேசன் முதலில் நடித்த 'பராசக்தி'

திரைப்படத்தில் பாவேந்த ருடைய கம்பீரப் பாடல் 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு' முதலில் இடம் பெற்றால் சிறப்பாக இருக்கும் என்று அதன் தயாரிப்பாளர் பெருமாள் முதலியார் கலைஞரிடம் கூறி, உரிய அனுமதிக்கு எவ்வளவு தொகை வேண்டும் என்று கேட்டுவர, புதுவைக்குக் கதை வசனம் தீட்டிய கலைஞரை அனுப்பி வைத்தார். கலைஞர் சென்று பாவேந்தரிடம் இவ்விழை வைத் தெரிவித்து, 'தொகையைப் பார்த்துக் கேளுங்கள்' என்று வேண்டினார். ஆனால் பாவேந்தரோ உடனே, ''அப்படியா? 'திராவிட நாடு' என்ற சொல்லே தீண்டத் தகாததாக நினைப்போரிடையே, அப்பாடலை முதலில் வைத்தால் என் கொள்கைக்கு வெற்றி கிடைக்கிறது என்று பொருள். அவர் என்ன எனக்குத் தொகை தருவது, அப் பாடலை முதலில் வைத்தால் நான் பணம் தருகிறேன் என்று கூறுங்கள்'' என்று மகிழ்ச்சியுடன் ஒப்புதல் தந்தாராம். ஒரு பெரிய திரைப்பட முதலாளியிடம் அவர் பெருந்தொகை கேட்டிருந்தாலும் கிடைத்திருக்கும். ஆனால் கொள்கை உணர்வுக்காக அதைத் துறந்தவர் பாவேந்தர்.

அண்ணா அவர்களோ, தம்மை எதிர்க்கட்சிக்காரன் என்று காங்கிரஸ் தலைவர் காமராசர் மேடையில் பேசினாலும், 1967இல் காமராசர் தோற்றதை ஏற்காமல் உள்ளத்துள் வருந்தினார். அண்ணாவை முதல்வராகத் தேர்ந்தெடுக்கத் தியாகராய நகர் திருமண மண்டபத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களெல்லாம் கூடிய போது, அக்கூட்டத்தில் எங்கள் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்யும்போது, விருதுநகர் தொகுதியில் பெ. சீனிவாசன் வெற்றி என்பதைக் கேட்டவுடன் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் ஆரவாரத்துடன் அவருக்கு வரவேற்பு தந்தனர். அதை ஏற்காமல் அண்ணா உருக்கமுடன்

பேசினார்: ''பாருங்கள், ஒரு சனநாயகப் போட்டிக்காகத்தான் மாணவர் சீனிவாசனை, காமராசரை எதிர்த்து நிற்க வைத்தோம். ஆனால், அடித்த அரசியல் புயலில் அவர் தோற்றுவிட்டார். கோட்டைக்கு அவர் வந்திருந்தால் அவருடைய ஆட்சி அனுபவங்களைக் கூறி வழிகாட்டியிருப்பாரே, அவர் வரவில்லையே என்று இரவெல்லாம் மனம் உடைந்து கிடந்த என்னை மேலும் புண்படுத்தி இப்படிக் கையொலி செய்யாதீர்கள்!'' என்று கூறிய அந்த அற்புதப் பண்பாளரை இன்றும் நினைத்து மெய்சிலிர்த்துப் போகிறேன்.

மொத்தத்தில் இந்த இருபெரும் செம்மல்களும் காட்டிய எளிமைப் பண்பும் ஈரச் செயல்களும் அவர்களை நம் நெஞ்சக் கோயிலின் வழிபாட்டுக் கடவுள்களாக்குகின்றன.

[illegible] வாழ்க

[illegible]

[illegible] "அப்படிப் [illegible]

தனதாக நினைப்போர்கூடவே, அப்படைகளை முதலில் [illegible] என்று [illegible]

கூறுங்கள்" என்று மகிழ்ச்சியுடன் ஒப்புதல் தந்தார். ஒரு பெரிய திரைப்பட முதலாளியிடம் அவர் பெருந்தொகை கேட்டிருந்தாலும் [illegible] ஆனால் கொள்கை உணர்வுக்காக அதைக் குறைத்துப் பெற்றார்.

அண்ணா அவர்களோ, தம்மை எதிர்க்கட்சிக்காரன் என்று காங்கிரஸ் தலைவர் காமராசர் மேடையில் பேசினாலும், 1967இல் காமராசர் தோற்றதை ஏற்காமல் உள்ளத்துள் வருந்தினார். அண்ணாவை முதல்வராகத் தேர்ந்தெடுக்கத் தியாகராய நகர் திருமண மண்டபத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களெல்லாம் கூடிய போது, அக்கூட்டத்தில் எங்கள் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்யும்போது, விருதுநகர் தொகுதியில் பெ. சீனிவாசன் வெற்றி என்பதைக் கேட்டவுடன் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் ஆரவாரத்துடன் அவருக்கு வரவேற்பு தந்தனர். அதை ஏற்காமல் அண்ணா உருக்கமுடன்

21. இருவரால் கிடைத்த அறுவடைகள்!

'நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும் நான்... நான்... நான்!' என்று தன்னையே யார் என்று வெல்லத் தமிழ்ப் பாடல் வரிகளால் அறிமுகம் செய்து கொண்டவர் பாவேந்தர்.

"I belong to the Dravidian, Stock; I am proud to call myself a Dravidian" என்று தன்னைப் பெருமிதத்துடன் தில்லி நாடாளுமன்ற மேலவையில் அறிமுகப்படுத்திக் கொண்ட வர் பேரறிஞர் அண்ணா.

'நாங்கள் வசதி வாய்ப்புகளில் குறைந்தவர்களாக இருக்கலாம்; ஆனால் வரலாற்றுப் பெருமை நிறைந்த வளமான இலக்கியங்களும் அளப்பரிய இலக்கண நூல்களும் என்றோ பெற்றிருந்த ஒரு செழுமையான மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாங்கள்' என்று முழங்கினார் அவர்.

அப்பெருமகன் மட்டும் இல்லையானால் வாடைக் காற்றாய் வடபுலத்திலிருந்து படையெடுத்து வந்து தாக்கிய இந்தி ஆதிக்கம் தமிழின் முடிமேல் ஏறிநின்று ஆட்டம் போட்டுக் கொண்டிருந்திருக்கும்.

'தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு
தான் உயரும் அறிவுயரும் அறமும் ஓங்கும்!
இமயமலை போல் உயர்ந்த
ஒரு நாடும் தன் மொழியில் தாழ்ந்தால் வீழும்!'

என்று தூங்கிய தமிழனின் தலையில் ஓங்கிக் குட்டு வைத்து எழுப்பி விட்டவர் பாவேந்தர்.

'மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதும் என்றோ? உயர்வதென்றோ? நானறியேன்!'

என்று ஏக்கப் பெருமூச்சு விட்ட பாவேந்தர், மவுடீகச் சகதியில் புரண்டு கொண்டு, பழைய புராணக் குப்பைகளைத் தலைமேல் வைத்துப் பாழ்பட்டுக் கிடந்த தமிழனைப் பார்த்துப் பதைபதைப்புடன், கேள்விகள் எனும் கணைகளால் இப்படித் துளைக்கிறார்:

'முகத்தில் பிறப்பதும் உண்டோ, முட்டாளே?
தோளிற் பிறப்பார் உண்டோ, தொழும்பனே?
இடையிற் பிறப்பார் உண்டோ, எருமையே?
காலிற் பிறப்பார் உண்டோ, கழுதையே?
நான்முகன் என்பவன் உண்டோ, நாயே?'

தமிழனுக்குச் சூடும் சுரணையும் ஏற்றிட இப்படிப் பட்ட தொடர்களால் பன்னிப் பன்னிப் பாடல் தீட்டினார்

பாவேந்தர். தமிழ், தமிழர், தமிழ்மண் இவற்றின் நாகரிகப் பண்பாட்டுப் பெருஞ்சிறப்புகளைச் சண்டமாருதமாய்ச் சுழன்று வந்து உலகுக்கும் தமிழருக்கும் உணர்த்தியவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

ஒருமுறை அவரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'ஆற்றோரம்' என்ற தலைப்பில் பேசப் பணித் திருந் தார்கள்.

அண்ணா கம்பீரக் குரலெடுத்து முழங்கினார்:

மிசிசிபி, மிசௌரி ஆற்றங்கரையின்
அமெரிக்க நாகரிகம்,
தேம்ஸ் நதி தீரத்தின்
ஆங்கில நாகரிகம்,
வால்கா நதிக்கரையின்
ருஷிய நாகரிகம்,
ரைன் நதிக்கரையின்
செர்மானிய நாகரிகம்,
யாங்டிசியான் நதிக்கரையின்
சீன நாகரிகம்,
நைல் நதிக் கரையின்
எகிப்திய நாகரிகம்,
ஐராவதி நதிக்கரையின்
பர்மிய நாகரிகம்,
யூப்ரடீஸ், டைக்ரீஸ் ஆற்றங்கரையின்
மெசபடோமிய நாகரிகம்,
கங்கை நதிக்கரையின்
ஆரிய நாகரிகம்
இவற்றையெல்லாம் வென்று

தனித்து நிற்கும்
பெருமை கொண்டதுதான்

கண்ணகியும் கரிகாலனும்
சேரன் செங்குட்டுவனும் வாழ்ந்த
காவிரி ஆற்றங்கரையின்
தமிழர் நாகரிகம்!'

என்ற அண்ணாவின் வீர முழக்கம் தமிழகத்தின் எட்டுத் திக்கும் எதிரொலித்தது. தமிழன், தன் வரலாற்றுப் பின்னணியையும் பண்பாட்டு முகவரியையும் பற்றிச் சிந்தித்தான்.

'செந்தமிழே! உயிரே! நறுந்தேனே! -என்
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!- நீ
நைந்தாயெனில் நைந்துபோகும் என் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!'

என்று தாய்த்தமிழின் மேம்பாட்டையே எண்ணி எண்ணிப் பாடிக் குவித்த பாவேந்தர், அந்த இன்பத் தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாக இதோ இந்த எழுச்சித் தொடர்களால் தீட்டிக் காட்டுகின்றார்:

'ஒண்டமிழ்த் தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன் முன்னேற்றம்;
கண்டறிவாய் எழுந்திரு நீ!
இளந்தமிழா! கண்விழிப்பாய்!
....
தொண்டு செய்வாய் தமிழுக்குத்

ஊறை தோறும் துறை தோறும்
துடித்தெழுந்தே!'

என்று சங்கநாதம் எழுப்பிய பாவேந்தர், மேலும் இப்படி முழங்குகிறார்:

'தமிழர்க்குத் தொண்டு செயும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை;
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?'

என்று வினா தொடுத்து, தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதே இல்லை என்று அடித்துச் சொன்னார்.

காலமெல்லாம் தாய்த் தமிழும் தமிழ்ப் பண்பாடும் தழைத்திட வேண்டி, தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் பம்பரமாய்ச் சுழன்றுவந்து தமிழரைத் தட்டி எழுப்பி உணர் வூட்டிய அறிஞர் அண்ணா 1967இல் ஆட்சிச் செங்கோலை ஏற்றவுடன், கீழ்க்காணும் மகத்தான சாதனைகளை நிகழ்த் தினார்.

1. அதுவரை 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று அழைக்கப் பட்டு வந்த வரலாற்றுப் பெருமை கொண்ட நம் தாய் மண்ணுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிப் புகழ் கூட்டினார். 'தாய்க்கே பெயர் சூட்டிய தங்கத் தனயன்' என்று தமிழகம் அவரைக் கொண்டாடி மகிழ்ந்தது.

2. அதுவரை 'சுக்லாம் பரதரம்' என்று சமக்கிருத மந்திரம் ஓதிச் செய்யப்படும் வைதீகத் திருமணம்தான் செல்லுபடியாகும் என்பதை மாற்றி, தமிழில் செய்யப்படும்

திருமணமும் செல்லும் என்று சட்டமே கொண்டுவந்த சரித்திரமும் அவருக்கே உரியது.

3. உலகம் காணாத வகையில், சென்னையில் மாபெரும் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைக் கோளத்தின் பலபகுதி அறிஞர்களும் பங்கேற்க மிகமிகச் சிறப்புடன் நடத்திக் காட்டியதோடு ஔவைத்தாய், திருவள்ளுவர், கம்பர், கண்ணகி, பாரதி, பாரதிதாசன், வீரமாமுனிவர், ஜி.யூ.போப், கால்டுவெல், வ.உ.சி. போன்ற பெருமக்களின் சிலைகளைச் சென்னைக் கடற்கரையில் அணிவகுக்கச் செய்து தனிச் சரிதம் படைத்தார்.

ஆக, பாவேந்தரும் அண்ணாவும் இந்த மண்ணுக்கும் நந்தம் மொழிக்கும் ஆற்றிய பயன்களின் எண்ணிக்கை அளப்பரியதல்லவா?

22. உரை வீச்சாலும் வரி வீச்சாலும் உளம் நிறைந்தோர்!

எண்ணும்போதே எதிரே வந்து எழில்முகம் காட்டும் வண்ணம், தன் ஈடில்லா உரை வீச்சாலும், வரிவீச்சாலும் நம் நெஞ்சங்களில் நங்கூரம் இட்டு அமர்ந்து விட்டவர்கள் பாவேந்தரும் அறிஞர் அண்ணாவும்.

'கமழும் உன் தமிழினை
உயிரென ஓம்பு!
காணும் பிற மொழிகளோ
வெறும் வேம்பு!'

என்று தன் உயிரான இலட்சியக் கொள்கையை இந்த அற்புத வரிகளின் வாயிலாகத் தமிழரின் நெஞ்சில் கல்வெட்டாய்ப் பதியவைத்தார் பாவேந்தர்.

இதோ இன்னும் மேலே போய் நயமும் நளினமும்

மண்டிய தொடர்களால் ஈன்ற அன்னைத் தமிழின் அளப்பரிய சிறப்பை இப்படி உணர்ச்சி பொங்கக் கூறுகிறார்:

'கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஊறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும்- தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!'

என்று நுட்பம் தோயத் தாய்த்தமிழின் தனி மாட்சியைக் கூறுகிறார்.

'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோள் எங்கள்
வெற்றித் தோள்கள்!
கங்கையைப் போல் காவிரிபோல் கருத்துக்கள்
ஊறும் உள்ளம்
எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரம் செய்கின்ற தமிழ்
எங்கள் மூச்சாம்!'

என்று உயிராய், உணர்வாய், முதலாய், மூச்சாய்த் திகழும் தாய்த் தமிழ்ப் பற்றுதலை இவற்றைக் காட்டிலும் வேறு எந்த எடுப்பான வரிகளால் நெஞ்சில் நிறுத்த முடியும்? திராவிட இயக்கத் தலைவர்கள் வீதிதோறும் மேடைதோறும் முழக்க மிட்ட இடியோசைத் தொடர்களல்லவா இவைகள்?

இதோ இந்தப் பாட்டரசரை அறிஞர் அண்ணா எப்படிப்பட்ட சந்தம் தோய்நத சுந்தர வரிகளால் அறிமுகப் படுத்துகிறார், பாருங்கள்:

1950இல் பாவேந்தர் திராவிடர் இயக்க மாநாடு ஒன்றுக்குத் தலைமை ஏற்றபோது, தம் இதழில் இதயம் நெகிழ, 'கூவி அழைக் கிறது கோவை' என்ற தலைப்பில் அண்ணா எழுதிய எழுச்சிக் கட்டுரை இது: 'கவி மாமன்னர் பாரதிதாசன் தலைமை ஏற்கிறார். அவர் புரட்சியின் புத்துருவம்; அறிவு மணங் கமழும் பூஞ்சோலை; புதிய உலகம் படைக்கும் பொற்சிற்பி; அவர் காலத்தின் தூதுவர் மட்டுமன்றி, சமுதாயத்திற்கே வழிகாட்டும் ஒளிவிளக்கு; அவர் 'இருண்ட வீ'ட்டில் 'குடும்ப விளக்கு' ஏற்றியவர்; 'அழகின் சிரிப்'போடு 'சேர தாண்டவம்' காட்டியவர்; 'தமிழச்சியின் கத்தி'யால் அறியாமையை வீழ்த்தி உணர்வுப் புரட்சி செய்தவர்; 'பாண்டியன் பரி'சை அளித்த பண்பாளர்; அவருடைய அற்புதப் பாட்டு ஆணவக் கும்பலுக்கு அதிர் வேட்டு; அவர் தரும் கருத்து விருந்து, நமக்குப் புது வலிவு தரும் அருமருந்து; அவருடைய இடிமுழக்கப் பேச்சு புரட்சி உலகின் மூச்சு; அவருடைய அனல்தெறிக்கும் உரையால் நம் குருதி கொதிப்பேறும்; நம் சிந்தையெலாம் அறிவுச் செந்தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கும்; கேட்கப்போகும் நம் இதயங்களில் எழுச்சிப் பூகம்பம் வெடித்துச் சிதறும்!' என்று பாவேந்தருக்கு ஓர் ஒப்பரிய அறிமுகச் சொல்லோவியம் தீட்டியவர் நம் பேரறிஞர் அண்ணா.

தனியுடைமைக் கொடுமைகளும், ஆண்டான் அடிமை எனும் வேண்டத்தகாத அட்டூழியங்களும் வேரோடும் வேரடி மண்ணோடும் தகர்க்கப்பட வேண்டும் என்று கம்பீரக் குரல் கொடுத்த பாவேந்தர் ஒரு நேரத்தில்

பேனாவைக் கீழே போட்டு விட்டு, கொலை வாளினைத் தூக்கச் சொன்னார்:

இதோ அவருடைய ஈடில்லாப் போர்ப்பறையொலிப் பாட்டடிகள்:

'வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம் எனும் நினைவா?
....
கொலைவாளினை எடடா, மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா!
....
இலையே உணவிலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவே முர
சறைவாய் முரசறைவாய்!'

இதேபோல் தொழிலாளியின் அவல நிலையைக் க்ண்டு அவர் கொதிப்புணர்வுடன் தீட்டிய வரி வீச்சுகள் இவை:

''காண்ப தெலாம் தொழிலாளி செய்தான் அவன்
காணத் தகுந்ததும் வறுமையாம்! – அவன்
பூணத் தகுந்ததும் பொறுமையாம்!'

இதைக் காட்டிலும் வாடும் தொழிலாளிக்காக வாதாட வேறு எப்படி - எந்தச் சொற்களால் எழுத முடியும்?

அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயம் உருவாகிட, அரும்பு மீசை இளைஞர்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர் பட்டமளிப்பு விழா ஒன்றில் இதோ இப்படி நேர்த்தியோடும் சீர்த்தியோடும் அழைத்து அறிவுரை நல்குகிறார்:

'பட்டதாரிகளே!
படித்தீர்! பட்டம் பெற்றீர்!
மெத்தவும் சரியே! ஆனால்
அது மட்டுமே போதுமா
வாழ்வு முழுமையாக மலர்ந்திட!
போதாது; போதவே போதாது என்பேன்.
மொட்டவிழ்ந்த மலர்
முழு மலர்ச்சியுற்றுப்
பூத்துக் குலுங்கிட வேண்டும்!
பிஞ்சுவிட்டுக் காயாகிச் சுவைத்திடும்
கனியாகிப் பழுத்திட வேண்டாமா? வேண்டும்!
சுவையும் பயனும் வேண்டாதார் யார்?
படித்ததை, படிப்பிக்கப்பட்டதை,
தெரிந்ததை, தெரிவிக்கப்பட்டதை,
அறிந்ததை, அறிவிக்கப்பட்டதை,
மேன்மேலும் ஆய்ந்தாய்ந்து
தெளிந்து வெற்றி பெற வேண்டும் நீங்கள்!'

அடடா! அந்த அற்புதத் தலைவரின் அளப்பரிய ஆசைகள் தாம் எத்தனை, எத்தனை? 'இந்த மண்ணும்,

மண்ணின் மைந்தர்களும் தழைத்துச் செழித்து, உலகின் முதல்தரக் குடிமக்களாக உயர்ந்து, நிமிர்ந்து நின்று நடை போட வேண்டும்' என்று விழைந்த அப்பெருமகன் அண்ணாவை காலக் கழுகு பறித்துச் செல்லாமல் இருந்திருந் தால் இன்னும் என்னென்ன விந்தைகளை நிகழ்த்தி இருப் பார் என்று எண்ணி எண்ணி ஏக்கப் பெருமூச்சு விடுகிறோம் நாம்.

பாவேந்தர் அவர்கள் நம் இளைஞர்களுக்காகத் தீட்டி வைத்த கல்வெட்டுப் பாடல் இது:

நூலைப்படி - சங்கத்தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி!
காலையிற்படி கடும்பகல் படி
மாலை, இரவு பொருள்படும்படி (நூலைப் படி)
கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
....
அறம்படி, பொருளைப்படி,
அப்படியே இன்பம்படி
....
சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி!' (நூலைப் படி)

இப்படிப்பட்ட கருத்து மின்னல் வீச்சுகளால் நம் நெஞ்ச வானில் ஒளியேற்றிக் கொண்டே இருப்பவர்கள்தாம் அண்ணாவும் பாவேந்தரும்.

23. நான் வழிபட்ட நடமாடிய தெய்வங்கள்!

தமிழ் மண்ணின் தன்னேரிலா விடிவெள்ளியான ஈரோட்டுப் பகலவன் தந்தை பெரியாருக்கு அடுத்து, என் இதயக் கோயிலில் வைத்து நான் வழிபாடு நடத்திய இருபெரும் நடமாடிய தெய்வங்கள் அண்ணாவும் பாவேந்தரும் மட்டுமே.

இந்த இருவர் மட்டும் இல்லையானால் தமிழ் நிலத்தில் 'மறுமலர்ச்சியும், விழிப்புணர்ச்சியும், அன்னைத் தமிழ் உணர்வும், அறிவுலகப் புரட்சியும் மலர்ந்திருக்காது என்பதே என் முடிந்த முடிபாகும்.

அதனால்தான் என் நெஞ்சாலயத்தில் ஏற்றி வைத்த பாவேந்தரை இப்படி வழிபட்டேன் நான்:

'தமிழமுதைச் சோறாக்கி, அறிவு நெய்யைத்
தன்மானக் குழம்போடு பெய்து தந்தே

இமைபோன்றே எமைக்காத்த குயிலே! என்றும்
எங்களுக்குக் 'கவிதைத்தாய்'
நீங்கள் அன்றோ?
'உமிமூடி இருப்பதெலாம் நெல்லா? இங்கே
உதவாத பதர்கூட இருக்கும்!' என்றே
எமக்குயர்ந்த பகுத்தறிவை, தமிழ்வீ ரத்தை
எப்படிஎப் படியெல்லாம் புகட்டி வைத்தீர்?'

என்று நன்றி உணர்வோடு பாவேந்தரின் அடிப்படைத் தொண்டைப் பாட்டடிகளால் போற்றி, அவர் மற்ற பாவலர்களிடமிருந்து வேறுபட்டுத் தனக்கென்று வகுத்துக்கொண்ட தனிப்பெரும் பாட்டுப் பாட்டையை இதோ இப்படிப் பாடி மகிழ்ந்தேன் நான்:

'கல்லுக்கும் தூணுக்கும் கவிதை பாடிக்
காணாத சொர்க்கத்தைக் காண்ப தற்குச்
சொல்லெடுத்தே இறைவனுடன் பேரம் செய்த
தொண்டரடி ஆழ்வார்கள் வாழ்ந்த நாட்டில்,
'இல்லை, இல்லை கடவுளில்லை; தில்லை கண்டே
இதைச்சொன்னேன்!' என அடித்துச்
சொன்னீர் நீங்கள்!
'புல்மேயும் மான்படைத்தோன் கடவுள் என்றால்,
பொல்லாத வேங்கையைஏன் படைத்தான்?'
என்றீர்!'

இப்படி அறிவுக் கனல் தெறிக்கும் கூரிய கேள்விக் கணைகளால் வைதீகபுரியை எரித்துப் பொசுக்கிய பாவேந்தர், தமிழகத்தில் நிகழ்ந்துவிட்ட பெருவிபத்தான ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பை வீரிய வரிகளால்

சாடி நின்று தமிழர்க்கு விழிப்புணர்வூட்டியதை இப்படி என் பாட்டடிகளால் வியந்து போற்றினேன்:

‘செல்லெடுத்த புற்றில்ஒரு நாகப் பாம்பு
திருடனைப் போல் நுழைந்துவிட்டால்,
மடமைப் பெண்டிர்
பொல்லாத பாம்புக்குப் பாலை ஊற்றிப்
பூமண்ணில் தெய்வமென வணங்க லாமா?
வில்வீரம், வேல்வீரம், வாளின் வீரம்
விளைந்தஉயர் தமிழகத்தில் உறங்கும் வேளை
புல்லேந்திச் சிலரிங்கே நுழைந்தார்; கூடப்
புகுந்ததடா சாதிகளும்!’ என்றே சொன்னீர்!’

என்று பாவேந்தரின் சிந்தனைச் செழுமையைப் பாடிய நான் அவருடைய புதுமைப் பாதையை இதோ இப்படிக் குறிப்பிட்டேன்:

‘‘அப்பனுக்கும் அம்மைக்கும் நிகழ்ந்தி ருந்த
ஆயிரமாம் திருமணங்கள்
விளையாட் டெல்லாம்
அப்பர் முதல் சுப்பர் வரை பாடும் போதோ,
‘அன்றாடங் காய்ச்சி’களின் ஏந்தல் நீங்கள்
குப்பனவன் குப்பியுடன் குடிசை மேட்டில்
கொண்டஎழிற் காதலினைப்
புகழ்ந்து வைத்தீர்!
‘அப்பனென்றால் பெரியார்தான்!’ என்றீர்! என்றும்
அண்ணனென்றால் காஞ்சியண்ணன்
என்றே சொன்னீர்!’’

இப்படி, பாவேந்தரின் இலட்சியக் கொள்கை மாண்பைப் பாடிய நான் அவருடைய சாதனை விளைச்சலை இதோ இந்தத் தொடர்களால் எடுப்புடன் குறிப்பிட்டேன்:

''தாய்த்தமிழை இகழ்ந்தோனை 'நாய், நாய்' என்றீர்!
'தமிழனுக்கா நீபிறந்தாய்?' என்றே கேட்டீர்!
பேய்மொழியாம் இந்தியினை வடவர் கூடிப்
பேடிகள்போல் திணிப்பதற்கே
முனைந்த நேரம்,
'சாய்க்கடைக்குப் பந்தியிலே இடமா? தீய
சவஇந்தி தமிழ்நாவில் வருமா?' என்றீர்!
பாய்போட்டுத் தூங்கியவர் எழுந்தோம்; செத்த
பாடைக்குப் பாடையினைக் கட்டி விட்டீர்!''

இந்த வகையில் பாவேந்தரின் இமயப் பாட்டுச் சாதனையை என்னுடைய கற்பனையில் பாடிப்பாடி மகிழ்ந் தவன் நான்.

சொல்வேந்தர் அண்ணாவை நாடே தன் சொந்தச் செல்லத் தலைவராக ஏற்றுக் கொண்டாடியபோது, இதோ இப்படி என் உணர்வுகளைக் கவிதை வரிகளில் வெளிப்படுத் தினேன் நான்:

''காஞ்சியண்ணன் புன்னகை ஓர் 'வெண்பா'; காட்டும்
கண்ணசைவே ஓர் 'கலிப்பா';
நாவில் தோன்றும்
தீஞ்சுவைசேர் கருத்தே ஓர் 'விருத்தம்' என்றே
தினந்தினமும் சுவைத்தவர்கள்
நாங்க ளன்றோ?

மாஞ்சோலை கொடும்புயலால் சாய்ந்திட் டாலும்
மாங்கனியை உண்டவர்கள் மறப்ப துண்டா?
பூஞ்சோலைத் தென்றலுக்கே மரணம் ஏது?
புகழ்முகடே! உம் நினைவு மறைதல் ஏது?''

என்று என் ஏக்கப் பெருமூச்சை வெளிப்படுத்திய நான், காலக் கழுகால் அவர் பறிக்கப்பட்டபோது, இப்படி என் விழிநீரை வெளிப்படுத்தி அரற்றிப் பாடினேன்:

''எழுச்சியின் 'திறவு கோ'லே!
எண்ணத்தின் 'நாற்றங் கா'லே!
விழிப்புற்ற தாய கத்தின்
'விடிவெள்ளி'த் தூதே! நாங்கள்
தொழுகின்ற இறையே! 'வாழ்வின்
தொகை நூ'லே! ஏழைத் தோழன்
'அழுகையை அழித்த பாட்'டே!
அகிலமா மறக்கும் உம்மை?''

இப்படிக் கையறு நிலையில் நான் கதறி அழுது பாடியதற்கு உரிய காரணங்களையும் கூறிப் புலம்பினேன்:

'''தென்னாட்டுக் காந்தி'என்றே உம்மைச் சொன்னால்
சீர்க்காந்தி நாடகங்கள் எழுதி னாரா?
'இந்நாட்டுப் பெர்னாட்ஷா' என்றால், ஷாவும்
எழில்மேடை தனில்ஏறி முழங்கி னாரா?
'தென்னாட்டின் வால்ட்டேர்'நீர் என்றால், வால்ட்டேர்
திறஞ்செறிந்த முதலமைச்சாய்
இருந்த துண்டா?
எந்நாளும் உமக்கீடாய் ஒருவர் ஏது?
ஈடுண்டா பரிதிக்கே அண்ட மீதில்?''

அப்பெருமகனின் மறைவை ஏற்றுக் கொள்ளாத என் பித்துப் பிடித்த நெஞ்சம் இதோ இப்படி அவருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறது.

'ஒலி பெருக்கி அழுகிறதே அண்ணா!' உங்கள்
ஒப்பரிய சங்கீதக் குரலைக் கேட்க!
கலையுலகம் அழுகிறதே அண்ணா!' அந்தக்
காலமெலாம் அழியாத கதைகள் கேட்க!
விலையுயர்ந்த ஏடெல்லாம் அழுமே, அண்ணா!
விந்தைமிகு கருத்தெல்லாம் தாங்கிச் செல்ல!
தலைமுறைக்கோர் தலைமகனே! விலையாய் எங்கள்
தலைதருவோம் என்றாலும் வரமாட் டீரா?'

காலம் நமக்களித்த பெருவரமாய் வந்து, இந்த மண்ணை மேம்படுத்திய இவ்விரு ஏந்தல்களை அதே காலம் கவர்ந்து சென்றபோது, இப்படியெல்லாம் பாடிப்பாடி மனம் நைந்தவன் நான்.

24. நாடும் நல்லோரும் போற்றிய ஈடிலாத் தோன்றல்கள்!

'கூத்தடித்துக் கொண்டிருந்த புராண நூலின்
கொட்டத்தை அடக்கிய நற் கவிஞன்; நல்ல
நாத்திகன்; நற்றமிழன்; இந்நூற் றாண்டு
நம் நாட்டிற் களித்தபெரும்
எழுத்துச் செல்வம்;
ஆத்திகர்க்கு வேப்பங்காய்; நமக்கு மாங்காய்;
அகத்தியர்போல் உடல் மரணம் மட்டும்
உள்ளோன்;
'சூத்திரனே!' என்பவனை உதைக்கச் சொல்லும்
சுப்புரத்தி னக்கவிஞன்;
எதிர்ப்பில் வாழ்வோன்!'

என்று தனக்கே உரிய கற்கண்டு வரிகளால் உவமையழகு இழையோடப் பாவேந்தரைப் பற்றிப் பாட்டோவியம் தீட்டினார் உவமையில்லாக் கவிஞர் சுரதா.

'மதங்களிலும் பழைய ஆசாரங்களிலும் ஊறிக் கிடந்த தமிழ் மக்களிடையே பாவேந்தரின் பாடல்கள் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கியிருக்கின்றன; ஆதலால் இவர் ஓர் அற்புதப் புரட்சிக்கவி. அமெரிக்கப் புரட்சிக்கவி வால்ட் விட்மன்; தமிழ்நாட்டுப் புரட்சிக்கவி பாரதிதாசன்!'

என்று மனந்திறந்து புகழாரம் சூட்டி மகிழ்ந்தவர் கவிமணி தேசிக விநாயகம் அவர்கள். ஒரு கைதேர்ந்த சங்கீத வித்துவானே இன்னொரு சங்கீத வித்துவானைப் பாராட்டியது எண்ணி எண்ணி மகிழத்தக்கதல்லவா?

பேரெழுத்தாளர் புதுமைப்பித்தன் தனக்கே உரிய புதுமையான தொடர்களால் பாவேந்தரை இதோ இப்படிப் போற்றுகிறார்:

'பாரதியார் நமக்கு வைத்து விட்டுப்போன சொத்துக்கள் பல; அவற்றில் எனக்குப் பிடித்த முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டுமானால் *1. ஞானரதம், 2.* குயில்பாட்டு, *3.* பாஞ்சாலி சபதம், *4.* புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் என்றே சொல்வேன்!'

இப்படி எல்லோரும் போற்றிய பாவேந்தர் காஞ்சி தந்த கரிபால்டி அறிஞர் அண்ணாவிற்கு நெஞ்சந்திறந்து இந்தப் பாட்டடிகளால் பாராட்டு மாலை சூட்டினார்:

'தமிழுக்குத் தொண்டுசெய்து சிறைக்குச் சென்றோன்;
தலைசிறந்த பேச்சுவல்லோன்; தமிழ வீரன்!
'தமர்' என்றும் 'தான்' என்றும் நினைப்ப கற்றித்

தமிழ்நாட்டின் உயர்வுக்கே உயிர்உ டல்கள்
அமைகவென இரவுபகல் உழைக்கும் மேலோன்!'

எடுப்பான இந்த அடிகளால் புகழேணியில் ஏற்றிய பாவேந்தரை அறிஞர் அண்ணா அவர்கள் எப்படித் தன் மனத்தராசில் ஏற்றி எடைபோட்டார் பாருங்கள்: ''புரட்சிக் கவிஞரும் நானும் ஒரே இனம்; ஒரே தன்மான இயக்கக் கொள்கை உறுதி கொண்டவர்கள் என்பதில்தான் எனக்குப் பூரிப்பு!''

அடடா! இந்த இரு ஏந்தல்களும் ஒருவரைப் பற்றி மற்றவர் மதிப்பீடு செய்த அழகுதான் என்னே!

பேரறிஞர் அண்ணாவின் கூரறிவுத் தொண்டுகளைக் கண்டு வியந்த தமிழ்த் தென்றல் திரு.வி.க. இந்த நேரிசை வெண்பாவைப் பாடி அவரை வானளாவப் போற்றினார்:

'அண்ணாத் துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டின்
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில் -
பண்ணாவான்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு; நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு!'

இந்த அழகிய வெண்பாவைப் படித்த பாவேந்தர் இதில் இடம் பெற்ற ஒருசொல் நெருடியதால், 'இது நல்ல பாட்டுதான்; ஆனால் அண்ணாவைப் போய் வண்ணான் என்று திரு.வி.க. சொன்னதை நான் ஏற்க இயலவில்லை. இதோ இப்படி அப்பாடலை மாற்றியமைத்தால் சிறப்பாக

இருக்கும்' என்று தானே ஒரு புதிய வெண்பாவை இயற்றி நமக்கு விருந்தாக்கினார்:

> **'எண்ணாப் புகழ்நாடி ஏந்து புகழ்நட்ட**
> **அண்ணாத் துரையண்ணல் ஆய்ந்து தமிழ்செழிக்கப்**
> **பண்ணாத் துறையுண்டோ? பைந்தமிழர் ஏனிவரைக்**
> **கண்ணாகக் கொள்ளார் கனிந்து?'**

இந்த இனிய வெண்பா அண்ணாவின் அருமைத் தம்பியர்க்கெல்லாம் அமுதமாய் இனித்தது.

ஆய்வறிஞர் முனைவர் ந. சுப்புரெட்டியார் பாவேந்தரைப் பற்றிய தன் பெருவியப்பை இந்தவகையில் வெளிப் படுத்துகிறார்:

'கம்பராமாயணத்தின் அடிக்கணக்கு 41,472 ஆகும்; பாவேந்தரின் அற்புதப் பாடல் அடிகளோ 40,600 என்றால் தன் பல்வேறு நாடகநூல்கள், கதை கட்டுரை நூல்களுக்கிடையே அவர் எழுதிக் குவித்துள்ள இத்துணை எழுச்சி அடிகளைக் காணும்போது இவர்தானே இந்நூற்றாண்டின் கவிச் சக்கர வர்த்தி!'

எழுத்தெண்ணிப் படித்த அந்த ஏற்றமிகு தமிழறிஞரின் அழுத்தமான கருத்து பாவேந்தருக்குச் சூட்டப்பட்ட மணி மகுடம் அல்லவா?

அண்ணா எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, சிங்கப்பூர்த் தமிழர்கள் அழைப்பை ஏற்று அங்கு சென்றார். 14.07.1965 அன்று மிகமிகப் பிரமாண்டமான வகையில்,

இரண்டு இலட்சம் மக்கள் அமரக் கூடிய 'ஜலான்புகார் ஸ்டேடிய'த்தில் அவருக்கு 271 தமிழ் அமைப்புகளின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்திற்கு எதிர்பாராத வகையில் வந்து பங் கேற்ற சிங்கப்பூரின் சிறப்பான அதிபர் லீகுவான்யூ, ஒரே இடத் தில் கடல் போலத் திரண்ட இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழரின் உணர்ச்சி மயமான வரவேற்பைக் கண்டு மலைப்பின் உச்சிக்குச் சென்று அண்ணாவை 'மிகப் பெரும் தமிழர் தலைவர்' என்று பாராட்டிப் பேசினார். அண்ணாவின் அற்புத உரை, தமிழரின் மீது இவருக்குத் தனி மரியாதையையே ஏற்படுத்தியது. இப்படித் தன் ஆற்றலால் அயலகத் தலைவர்களையும் தன்பக்கம் ஈர்த்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

ஒரு முறை அவருடைய அரிய சொற்பொழிவைக் கேட்ட பேராசிரியர் டாக்டர் இராசமாணிக்கனார் இப்படி வியப்புடன் போற்றினார்:

'1936க்கு முன்புவரை இவ்வளவு அழகாகப் பேசிய இளைஞரை இத்தமிழகத்தில் நான் கண்டதே இல்லை. வாதத் திறமை, பேச்சாற்றல், உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து வரும் அடுக்கடுக்கான சொற்கோவை இவையனைத்தையும் அவர் சொற்பொழிவில் கேட்டு மலைத்துப் போனேன். அவர் ஒரு பிறவி அறிஞர்!'

நாவலர் நெடுஞ்செழியனோ மேடைக்கு மேடை தனக்கே உரிய மிடுக்கு நடையில் இப்படி அடுக்கிக் காட்டிக் கைதட்டல்களை அறுவடை செய்வார்:

'உலகின் தலைசிறந்த உரைச் சக்கரவர்த்திகளைப் பட்டிய லிடும்போது, ஒருமுகமாக வரலாற்றாசிரியர்கள் கூறுவது இது தான்; கிரேக்கத்திற்கு ஒரு டெமாஸ்தனீஸ், இத்தாலிக்கு ஒரு சிசரோ, சோவியத்திற்கு ஒரு டிராட்ஸ்கி, அமெரிக்காவிற்கு ஒரு இங்கர்சால், இங்கிலாந்துக்கு ஒரு எட்மண்ட் பர்க், தமிழகத்திற்கு ஓர் அறிஞர் அண்ணா என்று புகழ்முடி சூட்டுகிறார்கள் அவர்கள்!'

பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றி இனிய கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் தனக்கே உரிய பலாச்சுளை வரிகளால் இப்படிப் புகழ்மாலை சூட்டுகிறார்:

'புத்துலகச் சாளரத்தைத் திறந்து வைத்தான்;
பூங்காற்றைத் தமிழ்நெஞ்சில்
உலவ விட்டான்;
இத்தரையில் உதிக்கின்ற புதுமை யெல்லாம்
ஏற்றிவந்து தமிழ்க்கவியில்
இறக்கி வைத்தான்!'

இதைக் காட்டிலும் பாவேந்தரின் பாட்டுத் தொண்டைப் போற்றும் வரிகளைப் பாட இயலுமா?

தந்தை பெரியார் மனம் திறந்து சொன்னார்: 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற பெருங் கவிஞர். இத்தனைச் சிறந்த கவிஞரான அவர் மட்டும் சற்று வளைந்து கொடுத்து, காலத்திற்கும் பாமர மக்களின் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு, தம் இலட்சியத்தை மாற்றிக் கொண்டு கவிதை புனைவாராயின் 'மிகச் சிறந்த மகாகவி' என்று பெயர் பெற்றிருக்கலாம். ஆனால் உண்மை, நியாயம், நீதி, பகுத்தறிவு, கடவுள் மறுப்பு முதலியவற்றைச் சிறிதும்

விட்டுக் கொடுக்காத பிடிவாதமுடையவர் ஆதலால், வெற்றுப் புகழையும் ஆரவாரத்தையும் எதிர்பாராமல், தான் கொண்ட கொள்கையில் எஃகுறுதியுடன் விடாப்பிடியாய் இருந்து வருகிறார்; இக்குணத்தை அவரிடம் பல்நோக்கில் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறேன்.'

ஆக, பாவேந்தரும் அறிஞர் அண்ணாவும் இரு தனித்தனி முனைகளில் தொண்டாற்றித் தமிழன் தமிழனாக வாழப் பாடுபட்டவர்கள்.

பாரதிக்குப் பாரதிதாசன் மட்டுமே ஒரு தாசராக மிளிர்ந்தார். ஆனால் பாவேந்தர் பாரதிதாசனுக்கோ சுப்புரத்தினதாசன் எனும் சுரதா மட்டுமன்றி, ஆயிரமாயிரம் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்றே ஒரு பட்டாளம் கிளர்ந்து எழுந்து தமிழ் மண்ணின் மறுமலர்ச்சிப் பாட்டுச் சோலையை ஓங்கி வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

இதேபோல் 'அக்ராசனர்' என்றும் 'காரியதரிசி' என்றும் தமிழில் வேரோடிப் போயிருந்த மணிப்பிரவாள நடையை மாற்றி இன்று நாம் பேசும் அழகு தமிழ்நடையைத் தவழவிட்டு 'அண்ணா உரை நடை', 'அண்ணா எழுத்து நடை' என்ற அற்புத மரபைக் கொண்டு வந்து தமிழின் செழிப்புக்கு உறுதுணையாக இருந்தவர் அறிஞர் அண்ணா.

நன்றியுள்ள எந்தத் தமிழனாலும் இந்த இருபெரும் இமயங்களை மறக்கத்தான் இயலுமா?

25. மறைந்தும் மறையாது இறவாப் புகழ் பெற்றோர்!

தன்னேரிலாத் தொண்டால் தனிப்பெரும் சரிதம் படைத்த பாவேந்தரும் அறிஞர் அண்ணாவும் தமிழர் உள்ள மெலாம் மறைந்தும் மறையாமல் நீக்கமற நிறைந்தோர் என்பேன்.

பெரும் விழிப்புணர்வு ஏற்படுத்தி விடியலைக் கொணர்ந்த இவ்விருபெருமக்கள் விழி மூடியபோது, தமிழ்ச் சமுதாயம் கண்ணீர்க் கடலில் மூழ்கிக் கதறி அழுதது.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் உடல் நலங்குன்றி, சென்னைப் பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஏப்ரல் 21, 1964இல் இயற்கை எய்தினார்.

வேனிலில் பிறந்த அந்தப் பாட்டுக்குயில் அதே வேனிற் காலத்தில் நம்மிடமிருந்து விடைபெற்றுக் கொண்டது.

அவர் மறைந்த அன்று இரவு முழுதும், அப்பெரும் பாமன்னரை எண்ணி எண்ணி என் கண்கள் விழி நீரைப் பெருக்கிக் கொண்டேயிருந்தன. உறங்காத அன்றைய இரவில் நான் வடித்த இரங்கற்பாவின் சில வரிகள் இவை:

'நாலிரு சீர்வி ருத்த
நாதமும் எங்கே? எங்கே?
வேலைப் போல் எதிரி தன்னை
வீழ்த்திடும் சொற்கள் எங்கே?
சோலையின் குமரி யைப்போல்
சுவையூட்டும் வரிகள் எங்கே?
பாலையாய் ஆக்கி விட்டுப்
பாமன்னா! பிரிந்தேன் போனாய்?

கடவுளைச் சமுதா யத்தைக்
கைதட்டி அழைத்தாய்; அன்னோர்
நடைமுறை மாற்றிக் கொள்ளல்
நலமென்று பணித்தாய்; இன்றோ
மடமைசேர் இறப்பு வந்து
மன்னவா உனைஅ ழைத்தால்
நடந்ததேன் அதன்பின் னாலே?
நாட்டைஏன் கதற வைத்தாய்?

'ஓடப்பர்' கட்சி சார்பில்
'உயரப்பர்' தம்மைச் சாட,
'வேடப்பர்' திரைகி ழித்து
'விழியப்பர்' எதிர்நி றுத்த,
'காடப்பர்' ஆட்சி செய்தால்
கடிவாளம் போட, நாட்டில்

தேடினும் கவிஞர் உண்டா?
செம்மலே! நீஏன் போனாய்?'

இந்தக் கண்ணீர்க் கவிதை ஏப்ரல் 22ஆம் நாள் 'முரசொலி'யில் வெளியிடப்பட்டபோது, உடன் வெளியே வந்து அஞ்சலி செலுத்த இயலாமல் அறப்போரில் ஈடுபட்டுச் சிறையில் இருந்த அண்ணா அவர்கள், தன்னுடன் சிறைப்பட்டிருந்த பேராசிரியர் அன்பழகனிடம் இக்கவிதை வரிகளைப் படித்துக் காட்டி, 'பாவேந்தரின் அதே வேகத்தில் பாட்டெழுதுகிறான் வேழவேந்தன்' என்று நெஞ்சம் திறந்து பாராட்டியதை, பேராசிரியர் முதலில் விடுதலை பெற்று வெளியே வந்தபோது என்னிடம் கூறியதுதான் என் வாழ்நாளில் நான் பெற்ற மிகப் பெரும் பாராட்டுப் பதக்கம் என்பேன்.

மறைந்த பாவேந்தருக்குத் தான் ஆட்சிப் பொறுப் பேற்றதும், கடற்கரையில் கம்பீரமான சிலையை நிறுவி, டாக்டர் மு.வ. அவர்களைக் கொண்டு திறந்த பெருமை அண்ணாவுக்கே உரியது.

அந்தப் பேரறிஞர் அண்ணா மணிவிழாவைக் கூடக் காணாமல் நம்மைத் தவிக்க விட்டு 1969 பிப்ரவரி 2 அன்று பிரிந்த செய்தியை நள்ளிரவில் கேட்ட தந்தை பெரியார் அவர்கள் 'போச்சு, எல்லாமே போச்சு; தமிழகமே இருண்டு போய்விட்டது' என்று தலையில் அடித்துக் கொண்டு, வாய் விட்டுக் கதறி அழுத வண்ணம் தன் சக்கர நாற்காலியில் வந்து அண்ணாவின் உடலின் மேல் கண்ணீர் வடித்தது காலம் காட்டிய ஒரு கொடுங்காட்சியாகும்.

'We have lost a beautiful rose from the garden of Tamil nadu' என்று நெஞ்சைப் பிழியும் வகையில் மனம் நைந்து கூறினார் கல்வி மேதை டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள்.

பொல்லாத புற்றுநோய் அண்ணாவைத் தாக்கி அவரைப் படுக்கையில் சாய்த்தபோது, பற்றோடும் பாசத் தோடும் தமிழ் மக்கள் தம்தம் மதக் கடவுளை வழிபட்டு, அண்ணாவின் உயிரைக் காக்க வேண்டினார்கள்.

அண்ணா அடையாறு மருத்துவமனையில் இறுதிக் கட்ட அறுவைச் சிகிச்சைக்கு ஆளானபோது, மாணவ மணிகள் கண்ணீர் வழிய அணி அணியாகத் திரண்டு வந்து, வரிசையில் நின்று குருதிக் கொடை வழங்கி, 'தலைவர் அண்ணா எப்படியும் பிழைக்க மாட்டாரா?' என்று காத்துக் கிடந்தனர்.

அந்த ஏந்தலின் உயிர் பிரிந்தவுடன், அவருடைய இறுதி ஊர்வலத்தில் பங்கேற்க இந்தியத் துணைக் கண்டம் முழுமையும் இருந்து முப்பது இலட்சம் மக்களுக்கு மேல் கண்ணீரும் கம்பலையுமாகத் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியது ஒரு தனி வரலாறு ஆகும்.

விழிமூடிய அண்ணனின் உடலைப் பார்த்து வெம்பிப் புலம்பிய பின்னர் வீடு திரும்பிய நான், என் அறைக்கதவைத் தாளிட்டுக்கொண்டு தனிமையில் கண்ணீர் வழிய அழுது கொண்டே இருந்தேன்.

அந்தத் துயரத்தில் நான் எழுதிய பாடல் வரிகளில் சில இவை:

'அண்ணனே! தாய கத்தின்
அணையாத சுடரே! மூச்சே!
எண்ணமே! எழிலே! தேம்பும்
ஏழையர் முதலே! இந்த
மண்ணகம் செழிக்க வந்த
மழையே!எம் உயிரே! வாழ்வே!
வண்ணமே! வரமே! எங்கள்
வரலாறே! மறப்ப துண்டா?

'மேடைகள்' நீங்க ளின்றி
வெறிச்சோடிப் போன தண்ணா!
'ஏடுகள்' நீங்க ளின்றி
எழில் வண்ணம் குலைந்த தண்ணா!
'நாடகம்' புதினம் எல்லாம்
நயங்குன்றி விட்ட தண்ணா!
ஆடுகள் கதறி நிற்க,
அவைகாப்போன் எங்கே போனீர்?'

வாராது வந்த இந்த இரு மாமணிகளும் தீராத பெருந் துயரத்தில் நம்மை ஆழ்த்திவிட்டு மறைந்து விட்டாலும் அவர்கள் உதிர்த்த கருத்து மணிகள் நம் எதிரே நின்று வழிகாட்டிகளாய் ஒளிர்ந்து கொண்டே இருக்கின்றன.

'தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! -இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!'

'வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேச வந்த
பெண்ணழகே!'

'சாணிக்குப் பொட்டிட்டுச் சாமி என்பார் செய்கைக்கு
நாணிக் கண்ணுறங்கு, நகைத்து நீ கண்ணுறங்கு!'

'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!'

'அன்னைதந்த பால் ஒழுகும் குழந்தை வாய்
தேன் ஒழுக
அம்மா என்று சொன்னதுவும் தமிழன்றோ?'

'கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு!
காணும் பிறமொழிகளோ வெறும் வேம்பு!'

போன்ற உயிர்ப்பூட்டும் கவிதை வரிகளால் பாவேந்தர் நம் நெஞ்சிலே நங்கூரம் இட்டு அமர்ந்து நமக்கு உணர்வூட்டிக் கொண்டே இருக்கிறார்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'

'கடமை கண்ணியம் கட்டுப்பாடே நம் உடைமைகள்'

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு!'

'கத்தியைத் தீட்டாதே, தம்பி! புத்தியைத் தீட்டு!'

'தன்னை வெல்வான் தரணியை வெல்வான்!'

'நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்,
இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்!'

'மறப்போம், மன்னிப்போம்!'

'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்!'

'வாழ்க வசவாளர்!'

போன்ற காலத்தால் அழியாத அறிவுரைத் தொடர்களால் நம் நெஞ்சமெலாம் நீக்கமற நிறைந்திருக்கிறார் பேரறிஞர் அண்ணா!

மொத்தத்தில் எத்தனையோ செம்மல்கள் இந்த மண்ணில் பிறந்திருந்தாலும் இந்த இருபெரும் ஏந்தல்கள் தம் நாவாலும் பேனாவாலும் காலகாலத்திற்கும் அழியாத மறுமலர்ச்சிச் சாதனைகள் படைத்துத் தனிப்பெரும் சகாப்தங்களாக வரலாற்றேட்டின் முகப்பில் ஒளிர்கிறார்கள். வாழிய அவர்கள் புகழ்!